கல்கி

KALKI 22.9.85 ரூ. 1.50





மின்னி மிளிரும் மேனி...
என்னாளும் உங்கள்
பொன்னான கனவு...நிறைவேற
வரமளிப்பது ரெக்ஸோனா.

சரளம், கருவா, கிராம்பு,
ஹபுஷா (தேவதாரம்) ஆகிய
நாலு வகை இயற்கைத்
தைலங்களின் நற்கலவை
யான ரெக்ஸோனா...சருமப்
பராமரிப்பிற்கு இயல்பான
வழியாகும்.

ரெக்ஸோனா உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RX 84 2012 TM



பஞ்சாப் தேர்தல்கள்

ஸ்பெஷல் ரிப்போர்ட் — கே. ஸ்ரீநிவாசன்

மகாத்மா காந்தி ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்தது போல் லோங்கோவால் ஹிந்து சீக்கிய ஒற்றுமைக்காக அமரராகிவிட்டார். இன்று உலகமே அவரை அறிந்துள்ளது.

லோங்கோவால் — ராஜீவ் உடன்பாடு பல அம்சங்கள் கொண்டது. சண்டிகார் நகரத்தைப் பஞ்சாபுக்கே பிரத்யேகத் தலைநகராகச் செய்வது, பஞ்சாப் நதிகள் நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் மறு பரிசீலனை, ஹரியானாவுக்கும் பஞ்சாபுக்குமிடையே கிராமங்கள் பரிவர்த்தனை — இவை முக்கிய அம்சங்கள். மற்றும் பல குறைபாடுகளுக்குச் சுமுகத் தீர்வுக்கு அஸ்திவாரம். எல்லாவற்றிற்கும் மேலாக, பஞ்சாபில் தேர்தல்.

சென்ற சில ஆண்டுகளாக எத்தனையோ புள்ளிகள், நிர்வாகத்தில் புலிகள் என்று பெயர் வாங்கியவர்கள், பஞ்சாப் சென்று ஒன்றும் செய்ய இயலாமல் தங்கள் சொந்த ஊர் திரும்பினார்கள். பஞ்சாப் பிரச்னை அரசியல் பிரச்னையே ஒழிய போலீஸ் அல்லது ராணுவ பிரச்னை அல்ல என்பது லோங்கோவால் — ராஜீவ் உடன்பாட்டுக்குப்பின் தெளிவாயிற்று.

இதில் பரிதாபகரமான அம்சம் என்னவென்றால் தன்னந்தனியனாக நின்று, அகாலி தளத்தின் சார்பில் பேசி ஆனது ஆகட்டும் என்று முன் வைத்த காலைப் பின் வைக்காமல் சென்று குண்டுக்கு இலக்கான லோங்கோவாலின் இறுதி விருப்பத்தை மத்திய அரசு பூர்த்தி செய்யவில்லை! அவர் தேர்தல் ஆறு மாதங்களுக்காவது நடக்கக் கூடாது என்று விரும்பினார். கிராமம் கிராமமாக மக்களிடையில் சென்று சில ஆண்டுகளாக ஏன் அவதி. பஞ்சாப் மீண்டும் அமைதியைப் பெற்றுப் பழைய சுபிட்சத்தை அடைய என்ன தேவை என்பதை அவர் ஜதேத்தார்கள் மூலம் பரப்பி மக்களில் பெரும்பாலோரை நல்ல வழியில் திருப்பத் திட்டமிட்டிருந்தார். அதற்குக் காங்கிரஸ் (இ) காரர்கள் இடம் கொடுக்கவில்லை.

'இவ்வளவு பெரிய பிரச்னையை ஸ்ரீ ராஜீவ் தீர்த்திருக்கிறார், அது பெரிய அரசியல் சாதனை. ஆகவே நமக்கு வோட்டு விழும் என்று' அவர்கள் சிந்தித்தார்கள். மீண்டும் அரியாசனத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை அவர்களை உந்தித் தள்ளியது. கோதாவில் இறங்கும்போதுதான் இடையூறுகள் என்ன என்பது தெரிய வருகின்றது.

பஞ்சாபில் சட்டசபையில் 117 ஸ்தானங்கள் உள்ளன. 13 லோக்சபை ஸ்தானங்கள். போதிய அபேட்சகர்கள் முன்வர மாட்டார்கள் என்று முதலில் செய்திகள் வந்த போதிலும், லோங்கோவாலின் தகனத்துக்குக் கூடிய மக்களின் ஆவேசத்தைப் பார்த்த பிறகு நம்பிக்கை பிறந்தது. வடக்கே "போக்" என்ற சமச் சடங்கு உண்டு. நம் பக்கத்தில் கிரகப் பிரீதி போன்றது. அதற்குப் பஞ்சாபின் பல மூலைகளிலிருந்தும் 10 லட்சம் பேர் கூடினார்கள்! இந்த ஒரு அம்சமே தேர்தல் எப்படிப் போகும் என்பதன் முன்னோடி. வந்தவர்களில் 90 சதம் எளிய விவசாயிகள்.

மனுக்களை வாபஸ் வாங்கும் கடைசி தினத்தன்று சட்டசபைக்கு 1500 மனுக்களும் லோக்சபைக்கு 130 மனுக்களும் பதிவாயின. அகாலி தளம் போட்டியிடும் தொகுதிகளில் அதன் வேட்பாளர்கள் யார் என்பது முடிவாகவில்லையாதலால் ஒரு ஸ்தானத்திற்கே



* லோங்கோவால், ராஜீவ்: ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு பரிமாறிக் கொள்கிறார்கள்.

அக்கட்சி பல வேட்பாளர்களுக்கு அனுமதி கொடுத்தது!

லோங்கோவாலின் இரு கரங்களாக மாஜி முதல்வர் பிரகாஷ் ஸிங் பாதலும், சிரோமணி குருத்வாரா பிரபந்தங் கமிட்டியின் தலைவர், குர்சரண் ஸிங் டோராவும் இருந்தனர். ஆனால் இருவரும் சந்தர்ப்பவாதிகள் என்பதை லோங்கோவால் ஜீவிய வந்தராக இருந்தபோதே நிரூபித்துவிட்டனர். இறுதிக் கட்டத்தில் லோங்கோவால் மட்டுமே நிரடலான பேச்சு வார்த்தைகளை நடத்தி உடன்பாட்டில் கையெழுத்திட்டார். வருவது வரட்டும் என்று அஞ்சா நெஞ்சத்துடன் செயல்பட்ட அவரன்றோ தியாகி!

லோங்கோவால் கடப்பட்ட பின்னர் இரு நரிகளும் சட்ட சபையில் தங்களுக்கு ஒன்றுமில்லாமல் போய்விடப் போகிறதே என்று. "எங்களுக்கும் லோங்கோவாலுக்குமிடையே எவ்வித அபிப்ராய பேதமும் இல்லை" என்று அறிக்கை விட்டார்கள். தேர்தலில் வெற்றிக்காக உண்மையாக உழைப்பார்கள் என்றுவது நம்பலாமா?

பயங்கரவாதிகளின் தலைவராகவிளங்கிய பிந்தரன்வாலாவின் தந்தை ஜோகிந்தர் ஸிங் ஐக்கிய அகாலிதளம் என்று ஒரு ஸ்தாபனத்தை அமைத்துள்ளார். குறைந்தபட்சம் இதற்குப் பயங்கரவாதிகளாவது ஆதரவு கொடுப்பார்கள்.


இந்தக் கட்சி தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ளும் என்று ஜோகிந்தர் ஸிங் அறிவித்திருந்தார். ஆனால் பின்னர் தேர்தலைத் தன் ஸ்தாபனம் பகிஷ்கரிக்கும் என்று சொன்னார். "கஞ்சி வரதப்பா" என்று சப்புக் கொட்டிக் கொண்டு காத்திருந்த தால் வந்திக் குழு. "ஐக்கிய அகாலி தளத்தை" உடைந்த தளமாக்கிவிட்டது. எனவே லோங்கோவாலின் அகாலி தளத்திற்கே வெற்றிக்கான அறிகுறிகள் அமோகமாக உள்ளன.


லோங்கோவால்தன்னந்தனியாகப்பேச்சு வார்த்தைகளை ராஜீவுடன் நடத்தினார் என்று குறிப்பிட்டேன். நன்கறிந்த இரு தலைவர்கள் அவர் காலை வாரிவிட்டு விட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான். ஆனால் அறிவிலும் ஆற்றலிலும் நாணயத்திலும் பெயர் வாங்கிய ஸுர்ஜித் ஸிங் பர்னலா — மாஜி மத்திய விவசாய மந்திரி — நங்கூரம் பாய்ச்சியதுபோல் லோங்கோவாலை விட்டு நகராமலிருந்தார். அவர் இன்று அகாலி தளத்தின் தற்காலிகத் தலைவர். இரு நரிகளின் வால்களை நறுக்கிவிட்டார்கள் அகாலி தளத்தின் ஜதேதார்கள்.

ஒரேயடியாக எல்லாரும் தம் ஆட்களாகவே இருக்கக் கூடாது என்று பர்னலா, அகாலி தளத்தின் பார்லிமெண்டரி போர்டின் தலைவராக அஜித் ஸிங்கைப் பிரேரேபித்து. தேர்ந்தெடுத்தார். அவரும் டோராவும். பாதலும் தங்கள் கைவரிசையைக் காட்ட முயன்றனர். ஆனால் தோற்றனர்.

மால்வா பீடபூமி என்பது வெகு வளமான பிரதேசம். இங்கு அகாலிகளுக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் சம பலம் உண்டு. ஆனால் காங்கிரஸ் அபேட்சகர்கள் பலவீனமானவர்கள். பஞ்சாப் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆர். எல். பாட்டியா தயாரித்த அபேட்சகர்

* டெல்லி போலீஸாரால் பாதல் கைது செய்யப்பட்ட போது...





* ஜொஹிந்தர் சிங்: ஆயுதங்கள் அமைதியானதா?

பட்டியலைப் பிரதமர் மறு பரிசீலனைக்கு விட்டு விட்டார். மூன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியதரிசிகள் அபேட்சகர்களைச் சந்தித்து இறுதி முடிவு செய்தார்கள்.

ஆபத்து என்னவென்ருல் எந்தப் புள்ளிக்கு எவ்வித பலம் என்று அறியாமல் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாஜி முதல்வர் தர்பாரா ஸிங் ஆதரவாளர்களுக்கும் ஜனதிபதி ஜெயில் ஸிங்கின் பெயரைக் கூறிக் கொண்டு இயங்கும் காங்கிரஸ் பிரிவினருக்கும் அதிக இடம்கிடைக்கவில்லை. இவர்கள் முழு மூச்சாகக் காங்கிரஸுக்கு வேலைசெய்வார்கள் என்றுஎப்படிச் சொல்ல முடியும்?

பாரதிய ஜனதா கட்சி பழைய காலி பெருங்காய டப்பியை ஒத்திருக்கிறது. வாசனை கமழும். ஆனுல் வாசனையை மட்டும் சாம்பாரில் போட முடியுமா? ஆகையால் அவர்களுக்கு 10 ஸ்தானங்கள் கிடைக்குமா என்பதே சந்தேகம். தவிர, இவர்கள் ராஜீவ் — லோங்கோவால் உடன்பாட்டை எதிர்த்தவர்கள்.

ஜனதா கட்சிக்கு அஸ்திவாரம் இல்லை. ஆனுல் அதன் பார்லிமெண்டரி கட்சித் தலைவர் மதுதந்தவாதே லோங்கோவாலுக்குத் தோள் கொடுத்தவர். ஒன்பது ஸ்தானங்களை அகாலிதளம் இவர்களுக்கு ஒதுக்கியுள்ளது. குறைந்தது மூன்று, அல்லது நான்கு ஸ்தானங்கள் கிடைக்கலாம்.



ஆக மொத்தம் இன்று உள்ள தேர்தல் படத்தைப்பார்த்தால் அகாலிதளத்தின் (எல்) வெற்றி வாய்ப்பு நன்ருக இருப்பதாகவே தெரிகிறது.

பல அம்சங்களில் பஞ்சாப் தேர்தல் பிரத்யேக முக்கியத்துவம் உடையது. கொலைக்களமாக இருந்த மாநிலத்தில் மக்கள் மூலம் மக்கள் வேண்டுவதென்ன என்பதைத் தெரிந்து கொள்ளும் முயற்சி. இப்பொழுதே பெரும்பாலான மக்கள் சமாதானப் பாதையை விரும்புவதுடன் தனி காலிஸ்தான் என்பது சில கிறுக்கர்களின் கனு என்பதை மறைமுகமாக அறிவித்து வருகிருர்கள்.

சீக்கிய மதம் வடமேற்கிலிருந்து வந்த மொகலாயப் படையெடுப்புக்கு ஈடு கொடுக்கத் தோன்றியது. ஆரம்பத்தில் ஒவ்வொரு சீக்கியரும் ஹிந்துவாக இருந்தவரே. பின்னர் ஒவ்வொரு ஹிந்து குடும்பமும் ஓர் இளைஞனைச் சீக்கிய இயக்கத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற பழக்கம் உண்டாயிற்று. அதைத் தொடர்ந்து ஒரு ஹிந்து பெண்ணுவது ஒரு சீக்கியரை மணக்க வேண்டும் என்ற பழக்கம் ஏற்பட்டது. புதிதாகத் துவக்கப்பட்ட இயக்கத்தில் பெண்களின் எண்ணிக்கை குறைவாகத்தானே இருக்கும்?


குருநானக் காலத்திலிருந்து சமீப காலம் வரை எல்லாரும் ஹிந்துக்களுக்கும், ஹிந்து மத தெய்வங்களுக்கும் உரிய மதிப்பைக் கொடுத்து வந்தார்கள். டாக்டர் ஜகஜீத் சௌஹானும் அவருடைய பயங்கரவாத 'காலிஸ்தான்' பிரிவினைக்காரர்களும்தான் பஞ்சாபில் நிலவிய 'மத அந்நியோன்யத்தைக் கெடுத்தனர். இந்தத் தேர்தல் "ஹிந்து—சீக்கியர் பாய், பாய்" என்ற அடிப்படையில் நடக்கும்.

பஞ்சாபில் தேர்தல் என்ருல் கிராமங்களில் "பாங்க்ரா" நடனம் அத்தியாவசியம். சந்தோஷத்தைக் காட்டும் இந்த விறுவிறுப்பான நடனம். ஆனுல் இந்தத் தேர்தலின்

போது வாக்காளர்கள் தங்கள் வாக்கை அளித்துவிட்டு வீடு திரும்பினால் போதும் என்று நினைத்தால் ஆச்சர்யம் இல்லை.

இந்தத் தேர்தல் எலக்டிரானிக் அடிப் படையில் அமையும். டெலிவிஷன் மூலம் அபேட்சகர்கள் வாக்காளர்களை அணுகுவார் கள். ஒவ்வொரு அபேட்சகருக்கும் டீ. வி. ரேடியோவில் அவகாசம் உண்டு. துண்டுப் பிரசுரங்கள் இருக்கும். சுவரொட்டிகள் காணப்படும். ஆனால் மேடை பிரசங்கங்கள் அதிகம் இராது. வீட்டுக்கு வீடு சென்று வோட்டு கேட்பது அதிகமாயிருக்கும்.

பஞ்சாபில் சுற்றுப் பயணம் என்பது சென்ற இரு ஆண்டுகளாக இல்லை. குறைந்த தூரப் பயணத்துக்குக்கூட டாக்ஸி ஓட்டிகள் வரத்தயாராக இல்லை. "பஞ்சாப் தலைவர்கள் சொந்தக் கிராமம் சென்று எவ்வளவு



* இந்திராகாந்தி பொற்கோயிலுக்கு விஜயம் செய்த போது...

ஆண்டுகள் ஆயின என்று கேளுங்கள்!" என்று சொன்னார் என் பஞ்சாபி பத்திரிகை நண்பர்.

அண்மையில் பஞ்சாபில் தினசரி வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க ஹரியாணா மூலம் நானும் என் சிநேகி தர் ஒருவரும் சென்றோம். ஹரியாணா எல்லை முடிந்ததும், "இதுதான் பஞ்சாப். இதில் எவ் வளவு பார்க்க வேண்டும்?" என்று கேட் டார் டிரைவர்.


"நீங்கள் ஓட்டுங்கள் சொல்கிறேன்" என்றேன். அவர் கண்களில் பயத்தின் நிழல் ஆடிற்று. சுமார் அரைமணி ஓட்டிய பிறகு கிராமமும் இல்லை, நகரமும் இல்லை என்கிற மாதிரி ஒரு இடம். சாலையை ஒட்டி தேநீர்க் கடை. ஒற்றை பெஞ்சுகளில் சர்தார்ஜிகள் அமர்ந்திருந்தார்கள். ரொட்டியைத் தேநீரில் தோய்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சுமார் ஆறு லாரிகள் சிறிது தூரத்தில் நிறுத் தப்பட்டிருந்தன.

சில சிறுவர்கள் எங்கள் காரைப் பார்த் ததும் நழுவித் தங்கள் தெருவுக்குள் சென்று மறைந்தனர். ஸல்வார், குர்தா அணிந்த பெண் மணிகள் தங்கள் தலைகளில் இருந்த மண் பானைகளைச் சரி செய்து கொண்டு வேக மாக நடந்து மறைந்தார்கள்.

அப்பொழுது பல்லாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவம் என் நினைவுக்கு வந்தது. பஞ்சாப் கிராமம் ஒன்றில் என் கார், மண லில் புதைந்திருந்த பெரிய பாறாங்கல்லில் அடிபட்டு பெட்ரோல்டாங்கி உடைந்துநின்று விட்டது. மாலைப் பொழுதாகிவிட்டதால் கையில் கொண்டு வந்ததைச் சாப்பிட்டு விட்டுக் காரிலேயே இரவைக் கழித்துவிட லாம் என்று நாங்கள் முடிவு செய்தோம்.

இரு உயரமான பஞ்சாபிகள் அப்பொழுது அங்கு வந்து, "சாஹேப்! இது எங்கள் ஊர். இன்னும் சிறிது நேரத்தில் உங்களுக்கு ரொட்டி, சப்ஜி (கறி) பால் கொண்டு வரு கிறோம்" என்று சொல்லிவிட்டு எங்கள் கையில் இருந்த பழைய புளியஞ் சாதத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்! அவர்கள் சொன்னபடியே எல்லாம் வந்தன. கூடவே மூன்று கட்டில்கள், எங்களுக்குத் துணையாக இருக்க 22 வயது இளைஞர் ஒரு வர். இரவை வெகு சுகமாகக் குளுகுளு சூழ் நிலையில் கழித்தோம். காலையில் பிரியா விடை கொடுத்த பொழுது அதே சர்தார்கள், "வண் டியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். டில்லி யிலிருந்து மெக்கானிக் வரும்வரை இந்த வண்டி பக்கம் ஒரு ஈ காக்கை எட்டிப்

உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை



உன்னதம்...உன்னதம்...
வெண்மையிலே
அனைத்திலும் உன்னதம்!

உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரிய மளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கி யுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.

நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.

Shilpi DM 9A/84 Tam.

பாராது!'' என்று உறுதிமொழி கொடுத்தனர்.

இந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்த்தேன். அந்தப் பஞ்சாப் எங்கே? இன்று உள்ள பஞ்சாப் எங்கே? வேட்டையாடப்படும் மான்களைப் போல் மருண்டு, பயந்து வாழ்கிறார்கள். சரி, லாரி டிரைவர்களுடன் பேச்சுக் கொடுத்துப் பார்ப்போம் என்று தேநீர் விடுதியை நோக்கிச் சென்று ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தேன்.

''ஸத் ஸ்ரீ அகால்'' என்றேன். ஸர்தார்ஜி பதிலுக்கு அதையே சொல்லிவிட்டு எழுந்தார். வழக்கமாகப் பிரார்த்தனை போன்ற சீக்கியர் கூட்டங்களில் ''ஜோ போலே ஸோ நி ஹால்'' என்று மேடையிலிருந்து குரல் எழும். உடனே கூடியிருப்பவர்கள் ''ஸத் ஸ்ரீ அகால்'' என்பார்கள். பழைய நாட்களில் நம் மாநிலத்தில் கோயில்களில், ''நம பார்வதி பதயே'' என்றதும் ''ஹர ஹர மகாதேவ'' என்பது போன்றது.

''சர்தார்ஜி, வரப்போகும் தேர்தலைப் பற்றி எழுத வந்திருக்கிறேன். கொஞ்சம் இங்கு உள்ள நிலைமை பற்றிச் சொல்லுங்களேன்'' என்றேன். நழுவ முற்பட்ட அந்த சர்தார் கூடவே நானும் நடந்தேன். அவர் லாரியை அடைந்து டிரைவர் ஆசனத்தில் உட்கார்ந்து பேசலானார். அவர்கள் பேசும் பொழுது அநாயாசமாக வசவுகளை அள்ளி வீசுவார்கள். அவர் சொன்னதின் சாராம்சம்:

பஞ்சாப் எல்லாவிதத்திலும் உயர்ந்தது. தொழில் துறையில் பஞ்சாப் கிடுகிடுவென்று முன்னேறியது. விவசாயத் துறையில் ஏற்கனவே கோதுமை புரட்சி நடந்து உற்பத்தியாகும் கோதுமையைப் பங்கிடு செய்ய நாதி இல்லை. பாஸுமதி அரிசி அமோக உற்பத்தி. இதெல்லாம் பழங்கதையாகி வருகின்றன. பணம் ஈட்டியவர்கள் மாநிலத்தை விட்டு வெளியேறுகிறார்கள். பொருளாதாரம் மங்கி வருகிறது.

''உங்கள் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதா?''

''பின்னே? முன்பு லாரி ஓட்டின அளவில் ஒரு பகுதிதானே இன்று ஓட்டுகிறேன்!'' சர்தார் சற்று யோசித்துவிட்டுச் சொன்னார்: ''மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். அந்தப் புண்ணியவான் லோங்கோவால் தயவில் உடன்பாடு ஏற்பட்டது. அவரையும் கொன்றுவிட்டார்கள், பாவிகள்'' அவர் கண்களில் நீர் துளிர்த்தது.

''தேர்தலில் எப்படி மக்கள் வோட்டு போடுவார்கள்?''

''எங்கள் வோட்டு லோங்கோவாலின் அகாலி தளத்துக்கு. அதுதான் ஹிந்து—சீக்கிய ஒற்றுமையை ஏற்படுத்தும்'' என்று சொல்லி விடை பெற்றார்.

தலையில் மல் துணி டர்பன் அணிந்து வந்தார் அந்த ஊர் பள்ளியின் தலைமை ஆசிரியர் இருநாத். ஹிந்துவான அவருடன் பேச்

அடுத்த இதழில்...

அப்பனுக்குச் சாராயம்;





குழந்தைக்குச் சத்துணவு

சுக் கொடுத்தேன்: "லோங்கோவால் உடன்பாட்டால் ஹிந்துக்கள் வாழ வழி உண்டாகியிருக்கிறது. ஆகையால் அகாலிதளத்துக்குத்தான் என் வோட்டு. அதுதான் பயங்கரவாதிகளுக்கு ஈடு கொடுத்து மாநிலத்தைக் காக்கும்" என்றார். கிட்டத்தட்ட இந்த அபிப்ராயம் பல ஹிந்துக்களிடையே நிலவுகிறது.

பஞ்சாப் ஆளுனர் அர்ஜுன் ஸிங்கிற்கு இப்பொழுது என்ன தலைவலியென்றால் சண்டிகரிலும், அமிர்தசரஸிலும் உள்ள பாதுகாப்புப் படைகளைத் திறம்பட ஒருங்கிணைத்துச் செயல்படுதல். அமைதி காத்தல். தேர்தல் நடத்தலாம் என்று முடிவு எடுத்ததில் ஆளுனருக்குக் கணிசமான பங்கு உண்டு. பிரதம தேர்தல் அதிகாரி திரிவேதி கூறியுள்ள பிரகாரம் ஒவ்வொரு அபேட்சகருக்கும் பாதுகாப்பு கொடுப்பது என்பது சிரம சாத்தியமான காரியம். ஆனால் அது சாத்தியமாக வேண்டும்!

ராஜீவ் காந்தி தன் பாதுகாப்பாளர்கள் ஆலோசனையைப் பூராவும் ஏற்காமல் வெகு சில பொதுக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாம். ராணுவம் ஸ்தல பாதுகாப்பைக் கவனித்துக் கொள்ளும். தோட்டா ஊடுருவாத உள் சட்டை அணிந்து ஹெலிகாப்டரில் பிரதமர் பிரசங்க மேடையருகில் இறங்கி தோட்டா ஊடுருவாத கண்ணாடி அடைப்பிற்குள் நின்று பேசிக் கூட்டங்களைச் சமாளிக்கலாம் என்பது யோசனை. ராஜீவ்—லாங்கோவால் உடன்பாட்டால் மாநிலத்தில் அமைதி என்பதால் அவரை நேரில் பார்த்தும் பேசுவதைக் கேட்டும் காங்கிரஸுக்கு வோட்டுப் போட கணிசமான வாக்காளர்கள் முன் வரலாம்.


தேர்தல் செப்டம்பர் 25ம் தேதி. பயங்கரவாதிகள் எப்பொழுதும் 'ரெடி'. போலீஸ், ராணுவ ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. சுயேட்சை அபேட்சகர்களை ஒவ்வொரு ஸ்தானத்தில் ஒருவராய் சுட்டுத் தீர்த்தால் அந்தந்தத் தொகுதியில் தேர்தல் கிடையாது என்று பயங்கரவாதிகள் புதிதாகத் திட்டமிட்டனர். இதற்கும் ஆப்பு வைத்தாகிவிட்டது, சென்ற வாரம் பிறப்பிக்கப்பட்ட ஜனாதிபதியின் அவசர சட்டம் மூலம். சுயேச்சைவாதிகள் இறந்தால் தேர்தல் நிறுத்தப்பட மாட்டாது எனச் சொல்லுகிறது இச் சட்டம். கட்சி அபேட்சகர்களைத் தீர்ப்பது என்பது கஷ்டம். ஆகவே தேர்தலை நிறுத்த முடியாது.

இந்திரா காங்கிரஸும், அகாலி தளமும் (எல்)தான் உண்மையில் கவனிக்கப்பட வேண்டியவை. இருவரில் யார் வென்று ஆட்சி அமைத்தாலும் சரி, லோங்கோவாலின் இறுதி ஆசையான ஹிந்து — சீக்கிய ஒற்றுமையை அந்த ஆட்சி நிலை நாட்டினால் பயங்கரவாதிகளை நசுக்கிவிடலாம். மக்கள் ஆதரவு பயங்கரவாதத்துக்கும் பிரிவினை வாதத்துக்கும் இல்லை என்று தெரிந்த பிறகு, பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உட்கார்ந்து கொண்டு "காலிஸ்தான் ஜபம்" செய்யும் டாக்டர் சௌஹான் போன்றவர்களை யார்தான் லட்சியம் செய்யப் போகிறார்கள்?

அட்டையில்: பொற்கோயில், லோங்கோவால், ராஜீவ்.

வண்ணப்படங்கள்: 'சுபா' சுந்தரம், பால்ராஜ் (ராஜீவ் படம்).

அனல் பறந்த பாரதி விழா



''அந்நாட்களில் அதிகாரியின் யோசனைகளைக் கேட்டு அமைச்சர்கள் நடந்து கொண்டார்கள். ஆனால் இன்றோ அமைச்சர்களின் கட்டளைகளுக்கு அதிகாரிகள் அடங்கிப் போய் நடக்கிறார்கள்'' என்பதுதான் பரவலாக நிலவும் கருத்து. இந்த எண்ணத்தை உடைத்தெறிவதுபோல் அமைச்சர் வீரப்பன் பேசி அவையோரை அதிர்ச்சிக்குள்ளாக்கினார், பாரதி விழாவிலே. இடம்: ராணி சீதை மன்றம். தேதி: 12.9.85.

பாரதியார் சங்கத்தின் தலைவர் நா. மகாலிங்கம் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னதாகவே கூறினார்: ''அரசு ஓர் இடத்தைக் கொடுத்துப் பத்து லட்சம் ரூபாய் தந்தால் நான் மேலும் எழுபத்தைந்து லட்சத்துக்குப் பொறுப்பேற்று, தமிழகத் தலைநகரில் பாரதியார் நினைவு மண்டபம் இல்லாத குறையை நீக்குகிறேன்!'' அன்று தலைமை வகித்த எம். ஜி. ஆர். உடனே இந்தக் கருத்தை ஏற்றார். அந்த மேடையிலேயே உறுதி மொழியும் அளித்தார். ஆனால் அவரது சொல் செயலாக முடியாமல் கடந்த பல ஆண்டுகளாக முட்டுக் கட்டை போட்டு வருவது அதிகாரிகளே என்று பகிரங்கமாகவீரப்பன் குற்றம்சாட்டிய போது நம் காதுகளையே நம்ப முடியாத அளவு ஆச்சர்யமாகத்தான் இருந்தது. இந்த முட்டுக் கட்டைகளை முறியடித்து முதல்வரின் வாக்கை நிறைவேற்றியே தீருவோம் என்று உறுதி மொழியைப் புதுப்பித்தார் வீரப்பன்.

அமரர் கல்கி தோற்றுவித்த பாரதியார் சங்கத்தின் இவ்வாண்டு அழைப்பிதழிலே மணியம்செல்வனின் பாரதி,ரொம்பக்கோபமாகவே காட்சி தருகிறார்! அதற்கேற்ப விழாவிலும் அனல் பறந்தது! முதல் நாள் வரவேற்புரையிலேயே திரு நா. மகாலிங்கம் 'மும்மூர்த்திகளுக்கு முன்பு இன்னிசை இல்லை' என்று வாதிடுவோரைச் சாடினார்! மும்மூர்த்திகள் கையாண்ட இசை, தமிழிசையாக அதற்குப் பல காலம் முன்பிருந்தே தமிழகத்தில் இருந்து வந்ததுதான் என்று கூறி, இன்றைக்கும் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களை நிறையச் சேர்த்துக் கொண்டு பாடாதிருப்பவர்களை வாங்கு வாங்கு என்று வாங்கினார்.

நிர்மலா சுரேஷ் புதுமைப் பெண்ணாகத் தோற்றமளித்துப் புதுமைப் பெண்ணாகவே பாரதி கண்ட புதுமைப் பெண் பற்றிப் புதிய கருத்துக்களுடன் பேசினார். 'பெண் விடுதலை, சமத்துவம் என்பதெல்லாம் வீட்டிலே யார் சமைக்கிறார்கள், துணி துவைக்கிறார்கள் என்பதில் அல்ல. கணவன் — மனைவி அவரவர் வசதிப்படி செய்து கொண்டு போகட்டும். கணவன் மனைவியிடம் அன்பு செலுத்துகிறான், அலங்காரப் பொருளாகக் கருதுகிறான் என்பதிலெல்லாம்கூட இல்லை. பெண்கள் வேலைக்குப் போவது, வரதட்சிணைப் பிரச்னை இவையெல்லாம் கூட இரண்டாம் பட்சம்தான். பெண்ணை ஆண்மகன் மதிக்கிறானா என்பதுதான் முக்கியமான கேள்வி. இந்த அடிப்படைக் கேள்விக்கு ஒவ்வொரு ஆண்மகனும்மனச்சாட்சிக்குவிரோதமின்றி 'மதிக்கிறேன்' என்றைக்குப் பதிலளிக்கிறானோ அன்றுதான் ஆண் — பெண் சமத்துவம் உருவாகியிருப்பதாகக் கருத முடியும்!' இந்தக் கருத்துக்கு எடுத்துக்காட்டாக நிர்மலா சுரேஷ் பல ரசமான சம்பவங்களைச் சிரிக்கச் சிரிக்க எடுத்துக் கூறினாலும் கூடவே அவரது மன எழுச்சியும் புலப்படவே செய்தது.

பெரிய மீசையும் அகன்ற நெற்றிப் பொட்டுமாக வந்து கவிதாஞ்சலி செலுத்திய சக்தி சீனிவாசனுக்கு ஒரு முண்டாசு கட்டி விட்டால் பாரதியாகவே மாறிவிட்டிருப்பார் — தோற்றத்தில்! அவரது கவிதாஞ்சலியில் பாரதி காட்டிய ஆவேசம் குறைவின்றி இருந்தது!

வலம்புரி ஜான் கூறிய ஒரு விஷயம் திடுக்கிட வைத்தது. மத்திய அரசு, பாரதி நூற்றாண்டையொட்டி வெளியிட்ட ஆங்கில நூலின் முகவுரையில் 'பாரதி தமிழிலே, டுமே எழுதினார்' என்று இரிபாதி குறிப்பிட்டிருக்கிறாராம். இந்தப் பெரிய தவறுடனேயே அந்த நூல் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் போயிருக்கிறது! இது பற்றி கேட்டபோது, அந்த நூலில் இன்னும் என்னென்ன தவறு

கள் உள்ளன என்று கண்டறிய ஒரு கமிட்டி போட்டுவிட்டது அரசு! 'கமிட்டி போடுவதே காரியம் நம் அரசுக்கு' என்று அலுத்துக் கொண்ட ஜான், நிர்மலா சுரேஷின் கருத்தை பாரதி எப்படி ஒப்புக் கொண்டிருக்கிறான் என்பதை விளக்கியது சிலிர்ப்பை உண்டாக்கியது. ''காதல் பாடல்களை இயற்றிய பல கவிஞர்களும், 'அடுத்த பிறவியிலும் நாம் இணை சேர்ந்து இருப்போம்; எனக்கு நீயே மனைவியாவாய், உனக்கு நானே கணவனாவேன்' என்றுதான் பாடியிருக்கிறார்கள். பாரதி ஒருவன்தான் 'அடுத்த பிறவியில் நான் நீயாகவும், நீ நானாகவும் பிறந்து இணைவோம்' என்று பாடினான்!''

''இது இளைஞர்கள் ஆண்டானதால் 'இளைஞர்களை அழைத்துவிழா நடத்துங்கள்' என்று யோசனை கூறினேன். நானும் ஒதுங்கப் பார்த்தேன். ஆனால் 'நீங்கள் இளைஞர்தான்' என்று எல்லாரும் சேர்ந்து என்னை வளைத்துப் போட்டுவிட்டார்கள்!'' என்று ஆரம்பித்த ம. பொ. சி. யின் பேச்சில் இளமை வேகம் துள்ளி விளையாடவே செய்தது. ''யார் எப்படி பாரதியை நோக்கினாலும் சரி, அவன் பிறந்த கால கட்டத்தை வைத்துப் பார்க்கும் போது அவனை முதற்கண் 'தேசிய கவி' என்றுதான் கருத முடியும். பக்திப் பாடல்களை, காதல் பாடல்களை, வேதாந்தப் பாடல்களைப் பாட அவனுக்கு முன் எத்தனையோ பேர் இருந்தார்கள். ஆனால் தேசியம் பாட அவன் ஒருவனே இருந்தான்!'' என்றார் ம. பொ. சி.

இரண்டாம் நாள் இலந்தை இராமசாமியின் கவிதை ஆற்றொழுக்கு நடையில் அமைந்திருந்தது என்றால் அந்த ஆற்றில் புது வெள்ளம் பாய்ந்தது அமைச்சர் காளிமுத்து பேசிய போது. எந்த ஒரு நூலை ஒருமுறை புரட்டிப் படித்தாலும் பக்கத்துக்குப் பக்கம் புகைப் படம்எடுத்ததுபோல் மனத்தில் ஆழப் பதிந்து விடுகிற **Photographic memory** உடைய அவர், குயில் பாட்டிலிருந்து பக்கம்பக்கமாக ஒப்பித்தது பிரமிப்பை உண்டு பண்ணியது. ''எந்த இயக்கத்தைச்சேர்ந்தவரும், எந்தக்கட்சியைச் சேர்ந்தவரும் பாரதியைச் சொந்தம் கொண்டாட முடியும். அதனால்தான் பாரதிதாசன், 'நானே பாரதியின் தாசன் என்று என்னைச் சொல்லிக் கொள்வேன்' என்றால் அவர் சிறப்பை நீங்கள் எல்லாரும் உணர வேண்டும் என்பதற்காகத்தான்' என்று திராவிட இயக்கத் தோழர்களுக்குக் கூறுவார்'' என்றார் காளிமுத்து.

பாரதியார் சங்கத்துக்கு விழா நடத்த ஆண்டுதோறும் ராணி சீதை மன்றத்தை அளித்து உதவுவதோடு இம்முறை சங்கத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் நன்கொடையும் அறிவித்தார் திரு எம். ஏ. எம். ராமசாமி. ''பாரதி விழாவைக் கடந்த பல ஆண்டுகளாக முழுப் பொறுப்பு ஏற்றுச் சிறப்பாக நடத்தி வரும் வள்ளல் மகாலிங்கத்தின் பணியில் எனது பங்கும் சேரட்டும்'' என்றார்.

''தமிழக தலைநகரில் பாரதி நினைவு மண்டபம் எழும்போது பத்தாயிரம் அல்ல, பத்து லட்சம் கேட்போம் தர வேண்டும்!'' என்று நன்றியுரையில் பகீரதன் எம். ஏ. எம். ராமசாமியை எச்சரித்து வைத்தார்!

எல்லாம் முடிந்து வீடு திரும்பும்போது, 'பாரதி பிறந்த தமிழகத்தில் நாமும் பிறந்தோம்' என்ற பெருமையை உள்ளழுத்திக் கொண்டு, 'இந்த நாட்டில் போய்ப் பிறந்தோமே' என்பதுபோல் ஒரு வேதனை. அதற்குக் காரணம், வீரப்பன் வெளியிட்ட ஒரு தகவல்: ''பாரதத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி அந்த நாளிலேயே பாடிய பாரதியைப் போல் இந்நாள் வரை வேறு எந்தக் கவிஞனுமே பாடியதில்லை. அத்தகைய கவிஞனின் பிறந்த நாளை பாரத ஒருமைப்பாடு தினமாகக் கொண்டாடலாம் என்ற தமிழக அரசின் நியாயமான, மிக மிக எளிய கோரிக்கையைக் கூட மத்திய அரசு ஏற்கவில்லை, இன்றுவரை!''

— கி. ராஜேந்திரன்





ஞானம்பாள் செல்வம்

உச்சியில் "ஜீரோ" சிவப்பை உமிழ்ந்தது.

சுரேஷ் புரண்டு படுத்தான். அருகே அவன் மனைவி! பால் மணம் மாறாத முகம்!

"இவளைப் போயா சந்தேகிப்பது!"

சட்டென்று நெஞ்சில் வீறிட்ட உஷ்ணத்தில் ஒரு கணம், சுரேஷ் வியர்த்துப் போனான்.

"புவனா....!"

"ம்"

எட்டாய் உடலை முறுக்கி, முகத்தை நிமிர்த்தினாள் புவனா!

பாதியில் கொல்லப்பட்ட 'தூக்கத்தின் துடிப்பு' அவள் முகத்தில் வியாபித்திருந்தது.

"என்னங்க! இன்னும் தூங்கலையா?"

"இல்லே. புவனா! தூக்கம் வரலே!"

"ஏங்க! ஏதும் பிரச்னையா! ரெண்டு மூணு நாளா உம்முனே இருக்கீங்க! கேட்டாலும் ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிறீங்க. என் கிட்ட சொல்லக் கூடாதா?"

"................"

"என்னங்க! நான் கேட்கிறேன்! பேசாமயே இருக்கீங்க?"

"உங்க ஆபீஸ்ல எத்தனை பேர் புவனா வேலை செய்றீங்க?"

சுரேஷின் குரல் கணீரென்று ஒலித்தது.

"ஏன்? முப்பது பேர். இப்போ என்ன அதுக்கு....?"

"காரணமாத்தான்! அந்த முப்பது பேரில் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?"

"ஆம்பளைங்க பத்துப் பேர்! பொம்பளைங்கதான் அதிகம்! இருபது பேர்......"

"அந்த இருபது பெண்களோடயும் நீ பேசறதே இல்லையாமே?"

"................"

"என்ன புவனா! சட்டுனு ஊமையாயிட்டே! அந்தப் பெண்களைக் கண்டாலே உனக்குப் பிடிக்காதாமே! அவுங்க நிற்கிற திசைப் பக்கம்கூட நீ திரும்ப மாட்டியாம்! சதா, அந்தப் பத்து ஆண்களோடத்தான், சிரிச்சு, சிரிச்சு அரட்டை அடிக்கிறியாம், சே! நாலு பேர் என்னை எவ்வளவு கேவலமாய்ப் பாக்குறாங்க தெரியுமா?"

பற்களை அரைத்தபடி சுரேஷ், முகத்தை உஷ்ணமாய்த் திருப்பிக் கொள்ள, நொறுங்கிப் போனாள் புவனா!

"இதோ பாருங்க! நீங்க சந்தேகப்படுற மாதிரி, நான் எந்த ஆணோடையும் இதுவரை முறை தவறிப் பேசிப் பழகினதில்லே! வீணா என் மேல பழி சுமத்தாதீங்க! யாரோ, என்னைப் பற்றித் தவறா கதைகட்டி விட்டிருக்காங்க! தயவு செய்து என்னை நம்புங்க! ப்ளீஸ்."

"இதோ பார் புவனா! எந்த ஆண்களோடேயும், நீ முறையோடவும் பேச வேண்டாம்! முறை தவறியும் பேச வேண்டாம்! பேசாம உன் பழக்கத்தை உங்க ஆபீஸ் பெண்களோட மட்டும் நிறுத்திக்கிட்டு வந்துட வேண்டியது தானே! உனக்கு எதுக்கு அனாவசியமா அந்த ஆண்களோடயெல்லாம் பேச்சு....."

மீண்டும் சிடுசிடுத்து, முகத்தைத் திருப்பிக் கொண்ட சுரேஷை உடைந்து போன தன் குரலால் தொட்டுத் திருப்பினாள் புவனா!

"இதோ பாருங்க! நீங்க நினைக்கிற மாதிரி எங்க ஆபீஸ் பெண்களோட, சர்வ சாதாரணமா என்னை மாதிரிப் பெண்கள் யாரும் பேசிப் பழகிட முடியாதுங்க! அவுங்க எல்லாருமே இயற்கையா நல்ல வசதி படைச்சவங்க! அவுங்க கணவர்களும் நல்ல உத்தியோகத்ல இருக்காங்க! ஒவ்வொருத்தரும் முந்நூறு ரூபாய்க்குக் குறைவா புடவை கட்டிக்கிட்டு வர்றதையே கேவலமா நினைப்பாங்க! அவுங்களோட பேச்சு, முழுக்க, முழுக்க நகையைப் பத்தியும், புடவையைப் பத்தியுமேதான் சுற்றிச் சுற்றி வரும். அது மட்டுமில்லாம ஒவ்வொருத்தரும், தனக்கும் தன் கணவருக்கும் இருக்கும் அந்யோன்யத்தை– அவர் விதவிதமா வாங்கித் தர்ற பரிசுப் பொருட்களை, விளக்கமா, உரக்கப் பேசிச் சந்தோஷமாப் பரிமாறிக்குவாங்க! இப்படிப் பட்ட பெண்களோட, ஒவளுத்துப் போன கவரிங்வளையலைமாட்டிக்கிட்டுப்போறநான், எப்படிங்க பழக முடியும்!

"இவுங்களோட பழகுறதனால என் மனசு அதிகமாப் பாதிக்கப்படுதுங்க! என்னோட தரித்திரத்தை அவுங்க நிமிஷத்துக்கு நிமிஷம், அதிகமாப் படம் பிடிச்சிக் காமிக்கிற மாதிரித் தோணுது. அதனால்தான் அந்தப் பெண்களோட பழகுகிறதையே அடியோட நிறுத்திட்டேன். அப்படி மனசு பாதிக்கிற அந்தப் பழக்கத்தைவிட, உதட்டளவில் பேசி உடனே மறந்து போற ஆண்களோட பழக்கம், எவ்வளவோ மேலுன்னுதான் எங்க ஆபீஸ் ஆண்களோட பேசறேன். அதுவும் அவசியம் ஏற்பட்டாத்தான். நீங்க சந்தேகப்படுற மாதிரி இல்லே!"


மென்மையாய் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்த புவனா, சட்டென்று முழங்காலில் முகம் கவிழ்ந்து, குழந்தையாய்க் கேவ..... கரைந்து போனான் சுரேஷ்!

"ஸாரி புவனா! ஸாரி! ப்ளீஸ் அழாதே! தெரியாத்தனமாக் கேட்டுட்டேன். ப்ளீஸ் என்னை மன்னிச்சிடு...."

மனைவியின் தோள்களைத் திருப்பிய சுரேஷ், அவளை ஆவேசமாய் அள்ளித் தன் மார்பில் இறுகப் பூசிக் கொண்டான்.

TS 33E

டிலக்ஸ் அம்சங்கள் அடங்கிய
சிறந்த எகானமி மாடல்



சிக்கனத்தில் நளினம் இதன் வகையில் நீங்கள் வாங்கக்கூடிய சிறந்த டிவி இது. இது தவிர, இரண்டு ஷட்டர்கள், பிக்-அப் வசதி, டோன் கண்ட்ரோல், மல்டிசானல், எல்.இ.டி. வி.சி.ஆர். இணைக்க வசதி, போன்ற டிலக்ஸ் அம்சங்கள் அடங்கிய எகானமி டிவி.

தொலை தூர இடங்களுக்காக பிரத்தியேக ஆன்டெனா அமைப்பு கொண்டது.

சாலிடர்

–தொல்லையில்லாத் தொலைக்காட்சி



சிங்கள ராணுவம்
திரிகோணமலைத் தமிழர்கள்
சமரச முயற்சி தொடரும்...
பஞ்சாயத்துத் தேர்தல்.. பஞ்சாயத்துத் தேர்தல்
ஒத்திவைப்பு.. ஒத்திவைப்பு ஒத்திவைப்பு..
ப.ம.க
மணிவிழா கண்டவருக்கு மனம் நிறைந்த வாழ்த்துகள்!
வீரப்பன்
ஜெயலலிதா



கல்கி

1985 செப்டம்பர் 22
மலர் 44 இதழ் 8
குரோதன புரட்டாசி 6



மீண்டும் ஜெயலலிதா

ஆட்டுக் குட்டியைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட ஜெயலலிதா, பாண்டு வாத்தியம் முழங்க, குதிரை வீரர்கள் அணிவகுத்து மரியாதை செலுத்த, பைலட்கார்கள் முன் செல்ல, கட்சி அலுவலகத்துக்குப் போய், மீண்டும் கொள்கைப் பரப்புச் செயலாளராக (கொ. ப. செ. என்று சுருக்கினால் அவருக்குப் பிடிக்காது!)ப் பதவி ஏற்றிருக்கிறார்.

ஜெயலலிதா படித்தவர், நன்றாகப் பேசக் கூடியவர், தன்னம்பிக்கை உள்ளவர், மக்களை வசப்படுத்தும் தோற்றமும் ஆற்றலும் உள்ளவர். அனுபவம் யாருக்குமே போகப் போகத்தான் வரும் என்றாலும் இன்று தெரியாதனவற்றைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர். எனவேதான் அவர் நமது கவனத்துக்குரியவராகிறார். ஆனால்—

எம். ஜி. ஆர். அமெரிக்காவில் நோய்ப் படுக்கையில் கிடந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த போது ஜெயலலிதா பேசிய வார்த்தைகள் யாராலும் சகிக்க முடியாதவை. ஜெயலலிதாவின் நலன் விழையும் நண்பர்கள் கூட ஏற்க முடியாதவை. அவருக்குச் சில அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கலாம்; அதில் அவர் நெஞ்சம் நொந்து போயிருக்கலாம். அச்சமயம் அவர் வாய் மூடி மௌனமாயிருந்து அந்த மனக் கசப்புக்களை விழுங்கியிருக்க வேண்டும். ஆனால் அவரது இயல்பான போராட்ட மனப்பான்மை, சகிப்புத் தன்மையை மீறிக் கொண்டு பீறிட்டதில் பேசத் தகாத, இங்கு எழுதவும் முடியாத பல வார்த்தைகளைப் பேசினார். 'அப்படியெல்லாம் அவர் பேசியதற்கு இன்று பரிசு கிடைத்திருக்கிறது' என்று கிண்டல் செய்வதை விட, அவரைப் பெருந்தன்மையுடன் மன்னித்து எம். ஜி. ஆர். ஏற்றுக் கொண்டு பழைய பதவியைத் திரும்பவும் வழங்கியிருக்கிறார் என்று கருதலாம். ஆனால்—

அதேநேரத்தில் வீரப்பனிடமிருந்து சில பொறுப்புக்களை எம். ஜி. ஆர் பிடுங்கிக் கொண்டதுதான் பிரச்னைக்கும் பேச்சுக்கும் இடமாகிவிட்டது. இதன் மூலம் வீரப்பனிடம் தமக்குள்ள அதிருப்தியை நாடறிய முதல்வர் வெளியிட்டிருக்கிறார் என்று கருத இடமிருக்கிறது. இதை எம். ஜி. ஆர். தவிர்த்திருந்தால் கட்சிக்குள் மோதல்கள், கட்சிக்குள் பிளவாக வளர்வதைத் தடுத்திருக்கலாம். இப்போதோ மனக்கசப்புக்கள் வெடித்து, கையெழுத்துப் படலம் கூட ஆரம்பமாகி விட்டது!

ஜெயலலிதா பதவி ஏற்பதற்கு முன் மணிவிழா கண்ட வீரப்பனைச் சந்தித்து வாழ்த்தியதிலும் காளிமுத்து, 'சிவன் (எம். ஜி. ஆர்.) விழுங்கிய விஷம் (ஜெயலலிதா) அவரைப் பாதிக்காமல் பார்வதியாக அருகிலிருந்து காப்போம்' என்றதிலும் ஜனநாயகப் பண்பாடுகள் மறக்கப்படவில்லை என்பதை உணர்கிறோம். ஆயினும் விரிசல் விழுந்து விட்டதென்னவோ உண்மையே. உடைந்த அ. இ. அ. தி. மு. க. என்ற பீங்கான் பாண்டத்தை இன்று ஒட்ட வைத்துக் கொண்டிருப்பது எம். ஜி. ஆர். என்ற பசைதான்.

ஜெயலலிதா கொள்கைப் பரப்புச் செயலாளர் என்ற முறையில் அடக்கம் காட்டி அளவோடு செயல்பட வேண்டும். தமது பதவி தந்துள்ள கடமைகளைப் புரிந்து கொள்வதோடு அதன் வரம்புகளையும் உணர்ந்து கொள்ள வேண்டும். மக்களிடம் மட்டுமின்றி எம். ஜி. ஆரிடமும் அவருக்குள்ள செல்வாக்கு இன்று நிரூபணமாகியிருப்பதால் அரசியல் சாசனத்துக்கு அப்பாற்பட்ட ஓர் அதிகாரக் கேந்திரமாக அவர் இயங்குகிற ஆபத்து உண்டு. அந்த ஆசைக்கு அவர் அடிமையாகாமல் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். தம்மைச் சூழ்ந்து துதிபாடும் அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

சோழவரம் என்று சொன்னால் போதும் "கார் ரேஸ் நடக்கும் இடம்தானே?" என்று இந்தக் காலத்தில் குழந்தைகள் கூடக் கேட்பார்கள். ஆனால் அங்கிருந்து நாலைந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பஞ்சேஷ்டி என்ற தலத்தைப் பற்றியும் அங்கே அருளே வடிவமாக வீற்றிருக்கும் பஞ்சேஷ்டி அம்மனுடைய மகிமையைப் பற்றியும் பலரும் அறிய மாட்டார்கள். அகத்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட அருள்மிகு அகஸ்தீச்வரர் கோவிலும் அங்கேயே இருக்கிறது.

சென்னையிலிருந்து நெல்லூர் போகிற சாலையில் பொன்னேரிக்கு முன்னாலேயே இருக்கிறது இந்தப் புண்ணியத் தலம்.


பஞ்சேஷ்டி என்று பெயர் வந்ததற்கு ஒரு காரணம் சொல்லுகிறார்கள். தென்னாட்டிலிருந்தே பார்வதி பரமேச்வரர்களுடைய திருக்கல்யாணக் கோலத்தைத் தரிசித்த பாக்கியசாலி அகத்திய முனிவர். அவர் தெற்கு நோக்கி வந்தபோது, இந்த இடத்தை அடைந்ததும் இங்கே யாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. நீர் வளமும் நில வளமும் நிறைந்த இந்த இடம் அகத்திய முனிவரின் மனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. உடனே பஞ்சரத்ன மகா யக்ஞம் என்ற வேள்வியைச் செய்தார். இஷ்டி என்றால் யாகம். யாக குண்டங்களில் சொரிந்த நெய்யின் மணமும், சமித்துக்களின் மணமும் எல்லா உலகங்களிலும் பரவியது. தேவர்களும் முனிவர்களும் கந்தர்வர்களும்

புலியின் பசி தீர்த்த புண்ணியன்

ஆனந்தி



* பஞ்சேஷ்டி தேவி



இந்த மணத்தால் கவரப்பட்டு யாகம் செய்யும் இடத்துக்கு வந்து சேர்ந்தனர். நான்கு தேவ கன்னியரும் வந்தார்கள். வேள்வி முடிந்த பின்னர் மற்றவர்கள் எல்லாரும் போய்விட்டனர். இந்த நான்கு கன்னியரும் பூவுலகிலேயே தங்கிவிட்டனர். இரண்டு பேர் வேள்வி நடந்த இடத்திலேயே தங்கிவிட்டார்கள். ஒரு தேவ கன்னிகை கொல்லாபுரத்திலும், இன்னொரு மங்கை சமயபுரத்திலுமாகத் தங்கிவிட்டனர். சமயபுரம் மாரியம்மன் தான் ரொம்பப் புகழ் வாய்ந்தவராயிற்றே!

அகத்திய முனிவர் செய்த பஞ்சேஷ்டியைக் கண்டு சந்துஷ்டியடைந்து அங்கேயே தங்கி விட்ட தேவிக்குப் பஞ்சேஷ்டி தேவி என்றும் எதிர்ப்புறத்தில் தங்கிய தேவிக்கு லக்ஷ்மி தேவி என்றும் பெயரிட்டு அடியார்கள் வணங்கி வருகிறார்கள்.


பஞ்சேஷ்டி தேவி எத்தனையோ காலமாக இங்கே இருந்து வந்த போதிலும், கோவில் சமீபத்தில் கட்டப்பட்டதுதான். 1971—ல் திருக்குட நீராட்டு விழா நடைபெற்றிருக்கிறது. சிறிய கோவில். மிக நன்றாக நிர்வகிக்கப்படுகிறது.

பெரிய எடுப்பான திருவாசியின் மத்தியில் அமர்ந்த கோலத்தில் அன்னை. உடற் பிணியைப் போக்கி நலம் செய்வதோடு மனப் பிணிகளையும் போக்குவாள். பிறவிப் பிணியையும் தீர்ப்பாள்.

அருகிலேயே இருக்கிறது சிவன் கோவில். அகத்திய முனிவர் பூஜித்தவரானபடியால் அகத்தீச்வரர் என்றே பெயர் பூண்டவர். சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய ஐந்துநிலைக் கோபுரம். எந்த மன்னன் காலத்தில் கட்டப்பட்டதோ? நுழை வாயிலிலும் கொடி நாச்சியார் முதலிய சிற்பங்களைக் காண்கிறோம். கோபுரத்தின் மீதோ செடி கொடிகளையே காண்கிறோம்! அடடா! பகட்டுக்கும் படாடோபத்துக்கும் எத்தனையோ செலவு செய்யும் இந்த நாளில் நமது கலைச் செல்வங்களைக் காப்பாற்றி உதவ யாராவது தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாதா? இந்து மத சார்புடைய கோவில் என்பதற்காக அல்லாமல் சரித்திரச் சின்னங்கள் என்பதற்காகவாவது இவற்றைப் பாதுகாக்க வேண்டாமா?

இடிந்தும், விரிந்தும் காணப்படும் சுவர்கள். ஆனாலும் ஒரு கம்பீரம் நிலவுகிறது. சிறிய கோவில்தான். அதிலும் ஒரு சௌந்தர்யம் தெரிகிறது. மண்டபத்தில் வாழை மரம் கட்டியிருக்கிறது. மாவிலைத் தோரணங்கள். புதிதாகப் போடப்பட்ட கோலங்கள். எல்லாம் திரு நடராஜ குருக்களின் சிரத்தையையும் ஆர்வத்தையும் புலப்படுத்துகின்றன. மூன்று கால பூஜையும் நைவேத்தியமும் குறைவில்லாமல் செய்துவரும் நடராஜ குருக்களின் அடக்கத்தையும், பண்பாட்டையும், கண்டு வியக்கிறோம். கோவிலுக்கு வரும் அடியார்களுக்கு தெய்வ தரிசனம் செய்து வைத்து விட்டு அவர்கள் பசியால் வாடிவிடாமல் ஆகார வசதியும் செய்து தருகிறார்.

தல புராணத்தில் அகஸ்தீசுவரர் பற்றியும் அவரை வழிபட்ட மன்னன் மித்திரத்துவசன்



* ராஜகோபுரம்

பற்றியும் மனத்தை உருக்குகிற ஒரு கதை உள்ளது. கல்வியில் கரையிலாத காஞ்சிமா நகரத்தை ஆண்டு வந்த பேரரசன் மித்திர துவசன், பஞ்சேஷ்டியில் அகத்தீச்வரரைப் பூஜித்துக் கொண்டு பிரதோஷ விரதம் இருந்தான். குசஸ்தலி நதிக்கரையிலுள்ள வனத்தில் நடந்து போகும்போது, "காப்பாற்று! காப்பாற்று!'' என்ற குரல் கேட்டது. அரசன் உருவிய வாளோடு தேட, ஒரு பிராமணனை ஒரு புலி கீழே தள்ளியிருப்பதைக் கண்டான். அரசன் புலியைத் தடுத்து, ''எலும்புந் தோலுமாக இருக்கும் இந்தப் பிராமணனைக் கொல்லாதே" என்றான்.புலி,''மனிதரைக்கொன்று தின்பது என்னுடைய தர்மம். எனக்குக் கண் தெரியாது. இந்த மனிதனை விட்டுவிட்டால் மூன்று நாட்களாகப் பட்டினி கிடக்கும் என் குட்டிகள் செத்துப் போய்விடும். நானும் சாவேன். அதற்கென்ன சொல்கிறாய்?'' என்று கேட்டது.

''புலியே! இவரை விட்டுவிடு. அவரை விட நான் நல்ல உணவாவேன். வேதியனைக் காப்பதற்கு உயிரைக் கொடுத்தால் நான் நல்ல கதியை அடைவேன். ஆனால் ஒரு வேண்டுகோள்.பஞ்சேஷ்டிபெருமானை அர்ச்சிப்பதற்காக வில்வ தளங்களைப் பறித்துக் கொண்டிருந்தேன். இப்போது பிரதோஷ காலம். பகவானைத் தரிசித்துவிட்டு வந்து விடுகிறேன். பிறகு நீ என்னைக் கொன்று உன் குட்டிகளுக்கு ஆகாரமாகக் கொடுத்து விடு'' என்றான். புலியும் சம்மதித்தது. வேதியர் எழுந்து ஓடிவிட்டார். மித்ரத்துவசன் அகத்திய தீர்த்தத்தில் மூழ்கி, பிரதோஷ கால தரிசனம் செய்துவிட்டு வில்வபத்திரத்தைப்பெற்றுப்புலியிடம்போனான். அவனைக் கொல்லப் புலி தயங்கியது. ''உன் சத்தியத்தைப் பார்த்தே திருப்தி அடைந்துவிட்டேன்'' என்றது. ''பசியோடிருக்கும் கிழப் புலியான உனக்கு ஆகாரமாவதில் எனக்கு முழு சம்மதமே! என்னை உண்பாயாக!'' என்று கூறிப் புலியின் வாயில் தன் கழுத்தைக் கொடுத்தான் மித்திரத்துவசன். அந்தச் சமயத்தில் புலி மறைந்தது. விண்ணிலே சிவ பெருமான்காட்சிதந்துவரங்களைக்கொடுத்து மறைந்தார். மித்திரத்துவசன் பல்லாண்டு காலம் காஞ்சியிலிருந்து தர்மந்தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தான்

தன்னுடைய நாட்டில் உள்ள மக்கள் பசியால் வாடக்கூடாது என்று மட்டும் எண்ணாமல் காட்டில் வாழும் புலியின் பசியைக் கூடத் தீர்க்க வேண்டும் என்ற புண்ணிய புருஷன் பூஜித்த இடம் பஞ்சேஷ்டி. இந்நெஞ்சுரத்தை அவனுக்கு அளித்த அகஸ்தீசுவரரைத் தரிசிக்கிறோம். இங்கு அம்பிகையின் திருநாமம் ஆனந்தவல்லி. ஆனந்தவல்லியின் அருள் மழை இருந்தால் போதாதா? வேறு என்ன வேண்டும்?

நவராத்திரிவிழாவில் அம்மனுக்குவிசேஷமான அலங்காரங்கள் செய்கிறார்கள். அம்மன் ஊஞ்சலில் அமர்ந்தாடும்போது அகில புவனங்களும் அவளுடன் அசைந்தாடுகின்றன. ஆனந்தவல்லி அலங்கார வல்லியாக ஊஞ்சலாடும் எழில் மிகு காட்சியை நேரில் கண்டு மகிழ்வது ரொம்பச் சிரமம் ஒன்றுமில்லை. சென்னை பேஸின் பிரிட்ஜ் பேருந்து நிலையத்திலிருந்து 112, 131, 132, 133, 58—C, 90 முதலிய எண்ணுள்ள பேருந்துகள் பஞ்சேஷ்டி வழியாகவேசெல்லுகின்றன. நவராத்திரியில் ஒவ்வொரு நாளுமே விசேஷம் என்றாலும் துர்க்காஷ்டமி மிகவும் சிறப்புடையது. அன்றைய தினம் ஹோமங்கள் ஏற்பாடாகியிருக்கிறது. தேவி, மகிஷாசுரனை வதம் செய்த அஷ்டமி நவமி கூடும் நேரம்தான் நவராத்திரியிலேயே மிகவும் புண்ணிய காலம், என்று சக்தி உபாசனை செய்பவர்கள் கருதி விசேஷ பூஜைகள் செய்கிறார்கள்.

வசதிப்பட்டால் ஒரு நடை போய் வரலாமே? வணங்கி நலம் பெறலாமே?

தேடியுனைச் சரணடைந்தேன் தேச முத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரம்தருவாய்
பாடி உனைச் சரணடைந்தேன் பாசமெலாம் களைவாய்
கோடி நலம் செய்திடுவாய் குறைகளெல்லாம் தீர்ப்பாய்

(பாரதியார்)

கோபம் அறைந்தது; ரோஷம் வென்றது!



ரேடியத்தைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்று உலகப் புகழ் பெற்ற மேடம் கியூரி, இருபது வயதினளாக இருக்கும் போது பணக்காரக் குடும்பத்தில் குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் தாதியாக வேலைக்கு அமர்ந்தார். அவ் வீட்டு எஜமானரின் மகன் கியூரியின் அழகையும் அடக்கத்தையும் கண்டு காதல் கொண்டான். தன் தகப்பனாரிடம் கியூரியை மணந்து கொள்ள அனுமதி கேட்டான். தகப்பனாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் நேராக கியூரியிடம் சென்று அவள் கன்னத்தில் அறைந்துவிட்டார். அப்படி அடிபட்ட ரோஷத்தில் வேலையை விட்டுவிட்டு பாரீஸ் நகர் சென்று படித்து, விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டார் கியூரி


— தேவகோட்டை பி. நாராயணன்.



- **அதிக பளபளப்பு**—பெஸ்டோவின் விசேஷ ஃபார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு, அதிக வெண்மை.
- **அதிக மென்மை**—கடுமையான வாஷிங் பவுடர்களைப் போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல் செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக வைக்கிறது.
- **அதிக வெண்மை**—துவைக்கத் துவைக்க துணிகள் பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க வெண்மை நீடித்து நிலைக்கும்.

பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு ரூ. 7.20 மட்டுமே!

* உள்ளூர் வரிகள் தனி.



கோத்ரெஜ் பெஸ்டோ
ப்ளூ டிடர்ஜெண்ட் பவுடர்
உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்

CHAITRA-B-G-276 TAM RR


லதா

சித்தரஞ்சனி

8. அவள் கோரிக்கை!

கௌதமிபுத்ரன் தோளைப் பிடித்துத் தனது இடது கையால் திருப்பி வலது கை குறுவாளால் அவனை வெட்டிப் போட ராட்சதன் போன்ற க்ஷத்ரபன் தனது உலக்கைக் கையை ஓங்கியதும் சாதவாகன வாலிபன் அழிந்தானென்றே எண்ணி மிதமிஞ்சிய அச்சத்துக்கு ஆளான சித்தரஞ்சனி அடுத்த விநாடி விவரிக்க முடியாத அளவுக்கு வியப்பையும் பிரமிப்பையும் அடைந்தாள். க்ஷத்ரபன் கை முழுதும் திடீரென நடுங்கியதையும், நடுக்கத்தைத் தொடர்ந்து குறுவாள் தரையில் விழுந்து உலோக ஒலிகளைக் குகையெங்கும் பரப்பியதையும் கண்ட சித்தரஞ்சனி அதற்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று ஊகிக்க முற்பட்டு குகைப் படிகளை நோக்கியதும், மேலிருந்து கீழே இறங்கி வந்த மனிதனைக் கண்டதன் விளைவாகத் தனது ஊகத்தைவிட்டு அடுத்து நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளை எதிர்பார்த்து நின்ற இடத்தை விட்டு நகராமலே நின்றாள்.

குகைப்படிகளில் மேலிருந்து கீழே இறங்கி வந்த மனிதன் கௌதமிபுத்ரனைக் கொல்ல முயன்ற க்ஷத்ரபனைவிட அதிக உயரமானவனாகத் தெரிந்தாலும், வீண் சதைப் பிண்டமாக இராமல், தேவையான அளவுக்குச் சதை பிடித்துப் பொதுப் பார்வைக்கு க்ஷத்ரபனைவிட சற்று இளைத்தவனாகவே காட்சியளித்தாலும், அவனிடம் ஒரு தோரணை இருந்தது. நடையில் நிதானமும் கம்பீரமும் தெரிந்தன. அவன் கண்களில் ஒரு அசட்டையும் பெருந்தன்மையும் கூடக் காணப்பட்டன. அவன் விசால நெற்றியின் குறுக்கே சந்தனக் கீறுகள் இட்டதுபோல் சருமம் மூன்று மெல்லிய மடிப்புகளுடன் தெரிந்தது. அவன் கௌதமிபுத்ரனைவிட சிறிது அதிக வயதுடையவனென்பதை நிரூபித்தன. அவன் தலைக் குழல்கள் முரடாகவும், சுருண்டும் இருந்ததால் அவன் விசால முகத்துக்குச் சிறிது அழகையும் ஊட்டின. நடுத்தர வயதுடைய அவன் வாலிப வயதில் அழகின் இலக்கணமாக இருந்திருக்க வேண்டுமென்பதைப் பொதுத் தோற்றம் விளக்கவே செய்தது. அவன் அடர்ந்த பெரிய பழுப்பு நிற மீசை அவன் அஞ்சா நெஞ்சத்துக்கு அடையாளமாக அமைந்திருந்தது. அவன் நீண்ட உறுதியான கால்களும் விசால மார்பும் பழைய கிரேக்கர்கள் அணிந்திருந்தது போன்ற இரும்பு வலைச் சட்டையும் காலில் இருந்த பாத அணிகளும் அவன் சாகவம்சத்தினனென்பதையும் *க்ஷஹராட குலத்தைச் சேர்ந்தவன் என்பதையும் வலியுறுத்தின. எல்லாவற்றையும் விட அவன் மார்புச் சட்டையின் நடுவிலிருந்த ஒரு பதக்கத்தில் காணப்பட்ட வில்லம்பு இலச்சினையில் அம்பின் நுனி பாம்பின் தலை போல் இருந்தும் சாகர்களின் சாதாரண முத்திரைகளுக்குச் சிறிது மாறுதலாக காட்சியளித்தது.

இவையனைத்தையும் சித்தரஞ்சனி மட்டுமின்றிக் கௌதமிபுத்ரனும் கவனித்ததால் வந்தவன் யாரென்று அவன் திட்டவட்டமாக அறிந்து கொண்டான். அவன் வரவு சித்தரஞ்சனியை நிலை குலுங்கச் செய்தாலும் கௌதமிபுத்ரனுக்கு சிறிதளவும் அச்சத்தை விளைவிக்காததால் அவன் மேலிருந்து இறங்கி வந்து க்ஷத்ரபனுக்குப் பின்னால் நின்று கொண்ட அந்த மனிதனைத் தலை சாய்த்து வணங்கி, ''க்ஷஹராட மகாப்பிரபு நாகபாணர் வரவு இங்கு சுபிட்சத்தை விளைவிக்கட்டும்'' என்று முகமன் கூறினான் சாதவாகன வாலிபன்.

மகாக்ஷத்ரபனான நாகபாணன் உதடுகளில் புன்முறுவல் அரும்பியது. அவனும் லேசாகத் தனது தலையை ஒருபுறம் சாய்த்து, ''சாதவாகன மன்னர் வீரத்தைப் பற்றியும் துணிவைப் பற்றியும் நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் புத்தி கூர்மையைப் பற்றியும் கதைகள் பல உலாவுகின்றன மகாராஷ்டிரத்தில். அந்தக் கதைகள் பொய்யல்லவென்பதை இன்று நானே கண்டேன்'' என்று கௌதமிபுத்ரனைச் சிலாகித்தான்.

''சாதவாகனர் ஆண்டு வந்த மகாராஷ்டிரத்தையும், வடக்குப் பகுதிகளையும் விழுங்கிய நாகபாணர் வீரமும் குறைந்ததல்லவே'' என்று பதிலுக்குச் சிலாகித்தான் கௌதமிபுத்ரன்.

ஏதோ நெடு நாட்கள் கழித்துப் புதிதாகச் சந்தித்த இரு நண்பர்கள் குசலப் பிரச்னம் செய்து கொள்வதுபோல் பேசிக் கொண்டு நின்ற இருவரையும் பார்த்து எரிச்சல் கொண்ட ராட்சத க்ஷத்ரபன் கைகள் நடுங்கிய நிலையிலேயே ''இங்கு நடந்ததை மகா

* Ksharata is family name. Kshatrapa is the name of the office an individual holds, normally the office of Governor of a province. Kshatrapa is the sanskrit adaptation of the old persian Kshatrapanan (Governor of a province) — History of Ancient India — by RAMAKANTH TRIPATRI. Page. 214.

சாண்டில்யன்



க்ஷத்ரபர் கவனிக்கவில்லை போலிருக்கிறது?" என்று கூறினான் குரலில் எரிச்சலைக் காட்டி.

இதைக் கேட்ட நாகபாணன் இன்னுமிரண்டு படிகள் இறங்கி க்ஷத்ரபன் தோளில் கையை ஆதரவுடன் வைத்து, "தம்பீ! நீ செய்தது தவறு. காரணமில்லாமல் ஒரு மகா வீரனைக் கொல்ல முயன்றது தவறு. அதுவும் சண்டிகாதேவியின் சந்நிதானத்தில் கொலை போன்ற மகாபாதகச் செயலைச் செய்யத் துணிந்தது மிகவும் பாவம்" என்று கூறி இளமுறுவல் கொண்டான். அவன் சொற்களில் இகழ்ச்சி நன்றாக்வே ஒலித்தது.

அந்த இகழ்ச்சியின் சாயையை க்ஷத்ரபனும் கவனித்திருக்க வேண்டும். "அண்ணா! நமது குல வைரிக்குச் சாதகமாகப் பேசுகிறீர்கள்....." என்ற வார்த்தையை முடிக்காவிட்டாலும் சினம் சொற்களில் நன்றாகவே தெரிந்தது.

"தம்பீ! அவரும் நம்மை அப்படித்தான் நினைக்கிறார். வைரிகளாயிருப்பதால், தவறில்லை. வைரியிடமும் நிதானத்துடனும் தர்மத்துடனும் நடந்து கொள்ளும் மனப்பாங்கு நமக்கு வேண்டும்" என்று உபதேசித்தான் நாகபாணன்.

"அப்படியானால் இவனைச் சீராட்டட்டுமா?" என்று தம்பி வினவினான்.

"இப்பொழுது உன்னால் முடியாது. உன் கை நடுக்கம் இன்னும் விடவில்லை" என்ற நாகபாணன் மேலும் சில படிகள் இறங்கி வந்து தம்பியின் உடலைத் தனது ஒரு கையால் வளைத்து ஆடிய கையில் ஏதோ ஒரு பகுதியை அழுத்தக் கையாட்டம் நின்றது. அதை நிறுத்திய நாகபாணன் எதிரே சற்று எட்ட நின்றிருந்த கௌதமிபுத்ரனை நோக்கி, "தம்பிக்கு மல்யுத்தத்தின் நரம்பு சாஸ்திரம் தெரியாது" என்று தம்பியின் அறியாமைக்கு மன்னிப்பு கேட்கும் பாவனையில் பேசினான் மகா க்ஷத்ரபனான நாகபாணன்.

அவனுக்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை கௌதமிபுத்ரன். "பழமொழி சற்று மாறியிருக்கிறது தங்கள் குடும்பத்தில்" என்று கூறினான்.

"பழமொழியா! மாறுதலா!" என்று வினவினான் நாகபாணன்.

ஆம். மகாராஜா! தம்பியுள்ளான் படைக்கஞ்சான் என்பது பழமொழி. தங்கள் குடும்பத்தில் அது மாறியிருக்கிறது. அண்ணனுள்ளான் என்ற சொல் பொருத்தமாயிருக்கும்" என்ற கௌதமிபுத்ரன் "தாங்கள் இங்கு வந்தது இந்த ஏழையைச் சந்திப்பதற்காக மட்டும் இருக்காதென்று நினைக்கிறேன்" என்று சொல்லி முறுவல் கொண்டான்.

இதைக் கேட்ட நாகபாணன் எதிரியின் முறுவலைக் கண்டு சீற்றம் கொள்ளவில்லை சிறிதளவும். "தவறு சாதவாகனா! உன்னைக் காணவே இங்கு வந்தேன். நீ இங்கு வர புறப்பட்ட அன்றே எனக்குச் செய்தி வந்தது. ஸஹ்யாத்ரிக்கு மேற்குப்புறமிருக்கும் கொங்கணிக்கும் கீழ்ப்புறமிருக்கும் பிரதிஷ்டானா தலைநகருக்கும் இடையே நிற்பது ஒரு மலை. அதன் மறுபுறமிருப்பதை, அதன் நிலவரத்தை அறியாத மன்னன் நாடு எத்தனை நாள் நிலைக்கும். தவிர மகாவீரனென்றும் எதையும் சாதிக்கும் திறனுள்ளவனென்றும் பெயர் பெற்ற கௌதமிபுத்ரன் தெற்கு நோக்கிப் புறப்பட்டானென்றால் காரணத்தை ஊகிப்பது ஒரு பிரமாதமான காரியமல்ல" என்று தனது ஊகத்தைச் சர்வ சாதாரணமாக விளக்கினான்.

அதற்குமேல் விவாதிக்க இஷ்டப்படாத நாகபாணன், "சாதவாகன மகாராஜாவைச் சகல மரியாதைகளுடன் எங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்ல இஷ்டப்படுகிறேன். உங்களை அழைத்து வரத் தம்பி மகள் இருக்கிறாள்" என்று கூறிய நாகபாணன், "சித்தரஞ்சனி! சாதவாகன மகாராஜாவை நமது இருப்பிடத்திற்கு அழைத்து வருவது உனது பொறுப்பு" என்று சொல்லிவிட்டுச் சட்டென்று திரும்பி மீண்டும் படிகளில் ஏறலானான். அவன் அப்படி கௌதமிபுத்ரனைச் சுதந்திரமாக விட்டுச் செல்வதைக் கண்ட க்ஷத்ரபன் "அண்ணா! இவனுடன் என் பெண்ணைத் தனியாகவா விட்டு வரச் சொல்கிறீர்கள்?" என்று கூவினான்.

நாகபாணன் மேல் படியிலிருந்து சற்றே தலையைத் திருப்பித் தம்பியை நோக்கினான். "தம்பி! உன்னைக் கொண்டு கௌதமிபுத்ரனை எடை போடாதே. அவன் முறை தவறாதவன். ஒழுக்கத்தின் இலக்கணம் என்று பெயரெடுத்திருக்கிறான். பேசாமல் வா" என்று சற்றுக் கடுமையுடன் கூறிவிட்டுப் படிகளில் ஏறிச் சென்றுவிட்டான்.

க்ஷத்ரபன் சில நிமிடங்கள் சிந்தனை வசப்பட்டு அண்ணனைத் தொடராமலே நின்றான். பிறகு தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்பவன் போல் தலையை அசைத்துவிட்டு, தனது ராட்சத விழிகளைக் கௌதமிபுத்ரன் மீது திருப்பி, "சாதவாகனா! என் பெண்ணுக்கு ஏதாவது தீமை நேர்ந்தால் உன்னைக் கண்ட

துண்டமாக வெட்டி அஞ்சன்வேல் நதியின் முதலைகளுக்குப் போட்டுவிடுவேன்'' என்று எச்சரித்துவிட்டுப் படிகளில் ஏற முற்பட்டான்.

அவனை நோக்கிய கௌதமிபுத்ரன், ''உங்கள் மகளை நீங்கள் அழைத்துப் போவதை நான் தடுக்கவில்லை'' என்று சொன்னான்.

க்ஷத்ரபன் தனது மகளைத் திரும்பிப் பார்த்தான். பிறகு ஏதும் பேசாமல் படிகளில் ஏறிச் சென்றுவிட்டான்.

தனிமையில் விடப்பட்ட சித்தரஞ்சனியும் கௌதமிபுத்ரனும் ஒருவரையொருவர் சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டே நின்றார்கள். அந்த வாலிபனின் அழகும் வீரமும் கலந்த வதனத்தையும் நீண்ட கைகளையும் விசால மார்பையும், நின்ற தோரணையில் இருந்த கம்பீரத்தையும் நன்றாகப் பார்த்தாள் சித்தரஞ்சனி. பிறகு துன்பப் பெருமூச்சு விட்டாள்.

குகையில் அதுவரை நடந்த நிகழ்ச்சிகள் பலவற்றுக்குக் காரணம் புரியவில்லை கௌதமிபுத்ரனுக்கு. எந்த சித்தரஞ்சனியை நெருங்கியதற்காகத் தன்னை க்ஷத்ரபன் கொல்ல முயன்றானோ, அதே சித்தரஞ்சனியை அண்ணன் உத்தரவால் தன்னிடம் எப்படி ஒப்படைத்துப் போகத் தம்பி ஒப்புக் கொண்டான் என்று சிந்தித்தான் அந்த வாலிபன். தவிர எந்த தைரியத்தைக் கொண்டு தன்னை அழைத்து வரச் சொல்லி நாகபாணன் சித்தரஞ்சனிக்கு உத்தரவிட்டான்? என்றும் எண்ணிப் பார்த்தான். தான் போக மறுத்தால் அடிமையான சித்தரஞ்சனி என்ன செய்ய முடியும் என்றும் சிந்தையை ஓட்டிப் பார்த்தான். இதில் தன் சிந்தனைக்கும் எட்டாத ஏதோ மர்மம் இருப்பதைப் புரிந்து கொண்டாலும் அதைப் பற்றித் திட்டமாகத் தெரியாததால் சித்தரஞ்சனியை விசாரிக்கலாமென்று அவளை நோக்கினான்.

சித்தரஞ்சனி தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள். சண்டிகாதேவியின் முன்பு அவள் ஏற்றி வைத்த விளக்கு வெளிச்சத்தில் அவள் வெள்ளைத் துகில் பெரிதும் பளபளக்க ஏதோ தெய்வ மங்கை போல அவள் விளங்கினாள். நல்ல வெண்மை பெற்ற அவள் சங்குக் கழுத்தின் மீது விளக்கின் பொன்னிற ஜோதி விழுந்ததால் அந்தக் கழுத்து, பழுப்பு தந்தத்தைப் போல் சிறிது நிறம் மாறியிருந்தது. அவள் ஆடை மிக மெல்லியதாயிருந்ததால் அது தந்த அவள் மேனியின் விளக்கம் கௌதமிபுத்ரன் சித்தத்தை அள்ளிச் சென்றது. தலை குனிந்து நின்றதால் அவள் மேலாடை இடைவெளி கொடுத்ததன் விளைவாக உட்புறம் சிறு கச்சையை மீறி நின்ற அழகிய மார்பு முகடுகள் அவனைப் பைத்தியமாக அடித்துவிடும் போலிருந்தன. சிற்றிடையில் இறுகக் கட்டியிருந்த ஆடையால் சற்றே கன்னிக் காணப்பட்ட சருமப் பகுதி அந்த வாலிபன் அனுதாபத்தைக் கிளறியதா அல்லது ஆசையைக் கிளறியதா என்று புரியாத ஒரு நிலையை அடைந்தான் கௌதமிபுத்ரன். இத்தனைக்கும் அவள் கால்களில் புகுந்த சேலை கால்களின் திண்ணிய பரிமாணத்தை எடுத்துக் காட்டவே செய்ததால் அவன் மனம் கலங்கி மெள்ள அவளை அணுகி, ''பெண்ணே!'' என்று மெதுவாக அழைத்தான்.

அப்பொழுதும் அவள் அவனைத் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவன் அவளை அணுகி அவள் சிற்றிடையில் ஒரு கையை வைத்த போதும் சிலையென நின்றாள். அவன் இன்னொரு கையால் அவள் தலையை மெதுவாகத் தூக்கி அவள் கண்களை நோக்கினான். அவள் கண்களில் அச்சம் நிரம்பியிருந்தது. அவள் செம்பருத்தி இதழ்கள் லேசாகத் துடித்தன. அடுத்த விநாடி அவள் திடீரெனச் செயல்பட்டாள். அவள் கைகள் எழுந்து அவன் கழுத்தை இறுக்கிக் கீழ் நோக்கி இழுத்தன. அவள் இதழ்கள் அவன் இதழ்களுடன் இழைந்தன. பிறகு அவை சிறிது பின் வாங்க, ''எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?'' என்று அவள் இதழ்களை அசைத்துக் கேட்டாள்.

''என்ன உதவி?''

''எதுவாயிருந்தாலும் செய்ய வேண்டும்.''

''சரி சொல்.''

''உங்கள் வாளின் மீது ஆணையிடுங்கள்.''

''என் சொல்லே ஆணைதான்.''

அவள் சிறிது மௌனம் சாதித்து, பிறகு மிக மெதுவாகச் சொன்னாள்: ''கௌதமிபுத்ரா! என்னை இப்பொழுதே இந்தச் சந்நிதியிலேயே சண்டிகாதேவி முன்பு திருமணம் செய்து கொள். மறுக்காதே'' என்றாள்.

இப்படி ஒரு திருப்பம் ஏற்படுமென்பதைச் சொப்பனத்திலும் நினைக்காத கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியின் பூவுடலை அப்படியே தனது கைகளில் வாரி எடுத்துக் கொண்டான்.

''குகை வாயிலை மூடிவிட்டு வாருங்கள்'' என்று அவள் தனது கன்னத்தை அவன் கன்னத்துடன் இழைத்து, காதுக்கருகில் செய்தி சொன்னாள்.

அப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே குகை வாயில் சிறிதும் சத்தமின்றித் தானாகவே மூடிக் கொண்டது.

(தொடரும்)

''நடனம் கற்றுக் கொண்டிருந்தாயே ஏன் நிறுத்திட்டே?''

''ஆடினால் மயூரி போல ஆடணும்! இல்லேன்னா காலை உடைச்சுடுவேன்னு அந்த டான்ஸ் மாஸ்டர் பயமுறுத்தினார்!''



அமிர்தாஞ்சனின்



"அழியாச் சின்னங்களை அடையாளம் காணும்" போட்டி

ரூ.2,75,000


மதிப்புள்ள பரிசுகளை
வெல்வீர்!

போட்டி மிகவும் எளிது! உலகப் புகழ் வாய்ந்த 5 அழியாச் சின்னங்களின் படங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்கள் 1 முதல் 5 என்று இலக்கமிட்டும் தரப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: அந்த அழியாச் சின்னங்கள் எதுவை என்று ஒவ்வொரு படத்தின் அடியிலும் தரப்பட்டுள்ள கட்டத்தில் பொருத்தமான எண்ணை எழுத வேண்டும்.

பின்னர், கீழ்க்கண்ட கட்டத்திலுள்ள வாக்கியத்தை மேலும் 10 வார்த்தைகளுக்கு மேற்படாமல் எழுதி, பூர்த்தி செய்து அனுப்பவும்.


உங்கள் நுழைவுத்தாள்களை 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றுடன் அனுப்ப வேண்டும். இந்த விளம்பரத்தையே நுழைவுத் தாளாகப் பயன்படுத்தலாம்.

விரைந்திடுவீர்! நுழைவுத்தாள்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: அக்டோபர் 15, 1985



10 முதல் பரிசுகள்
கலர் டிவி-க்கள்

100 இரண்டாவது பரிசுகள்
14" பிளாக் & ஒயிட் டிவி






200 மூன்றாவது பரிசுகள்
எலெக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள்.

அமிர்தாஞ்சன் பெயின் பாம்
தலைவலி, உடல் வலி, தசை வலி,
மற்றும் சுளுக்கு, இவற்றிற்கு
துரித நிவாரணி

போட்டி விதிகளும் நிபந்தனைகளும்:

1. அமிர்தாஞ்சன் லிமிடெட் ஊழியர்கள், அதன் விளம்பர ஏஜென்சிகள் மற்றும் அவர்களது உறவினர்களைத் தவிர, இந்தியாவிலுள்ள யாவருமே போட்டியில் பங்கு பெறலாம்.
2. நீங்கள் எத்தனை நுழைவுத்தாள்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றும் இணைக்க வேண்டும்.
3. பென்சிலால் எழுதப்பட்ட நுழைவுத்தாள்களும், அழிக்கப்பட்ட குறிகள் கொண்டவை அல்லது சிதைந்தவை, தெளிவாக எழுதப்படாதவை, அல்லது தபால்தலை ஒட்டப்படாதவை அல்லது குறைவாக ஒட்டப்பட்டவை ஆகிய நுழைவுத்தாள்களும் நிராகரிக்கப்படும்.
4. நுழைவுத்தாள்களுடன் அனுப்பப்படும் அட்டைப்பெட்டிகள் சேதமுற்றிருந்தாலும், சிதைந்து இருந்தாலும், போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. வியாபாரியின் பெயரும் முகவரியும் எழுதப்படாத நுழைவுத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
6. தபாலில் இழந்துபோன அல்லது தாமதமாக வந்து சேரும் நுழைவுத்தாள்களுக்கு அமிர்தாஞ்சன் பொறுப்பேற்காது.
7. நுழைவுத்தாள்களை ஆங்கிலம் அல்லது மற்றெந்த இந்திய மொழியிலும் எழுதலாம்.
8. முடிவை ஒரு தீர்ப்பாளர் குழு பரிசீலிக்கும். அவர்களின் தீர்ப்பே முடிவானது. அதற்குக் கட்டுப்பட வேண்டும்.
9. போட்டி சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. நுழைவுத்தாள்களும், விளம்பர வாசகமும் அமிர்தாஞ்சன் லிமிடெட்டின் உரிமைகளாகும்.
11. போட்டி சம்பந்தப்பட்ட சட்டப்படியே பரிசுத் தொகை வழங்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட நுழைவுத் தாள்களும், 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப் பெட்டியும் அடங்கிய உறையின் மீது "அமிர்தாஞ்சன் போட்டி" என்று எழுதி, அமிர்தாஞ்சன் லிமிடெட், 42-45, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. என்னும் முகவரிக்கு அக்டோபர் 15, 1985-க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.
13. பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள். முதல் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான நாளேடுகளில் வெளியிடப்படும்.



1. விடுதலைச் சின்னத்தின் சிலை
2. தாஜ் மகால்
3. கோமதேஸ்வரரின் உருவச்சிலை
4. செயின்ட் பீட்டர் சதுக்கம்
5. பீசா நகரத்தின் சாய்ந்த கோபுரம்

நான் அமிர்தாஞ்சன் பெயின் பாம் உபயோகிக்கிறேன். ______

ஏனெனில் ______

பெயர் ______

முகவரி ______

வியாபாரியின் பெயர் : ______

முகவரி ______


வாசகர் பங்கு

மதிக்கப்பட்ட

கண்டிப்பதிலும் ஒரு நயம்

விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நான் படித்துக்கொண்டிருந்தபோது திரு கு. கிருஷ்ணராஜ் தலைமை ஆசிரியராக இருந்தார். வகுப்பில் கவிதை, கட்டுரை என்று எதையாவது கிறுக்கிக் கொண்டிருந்த எனக்கு ஆட்டோகிராபில் அவர் எழுதிய வாசகம். "மென்கலை ஒரு நறுமலர். முதலில் வாழ்வை வளமுள்ளதாக ஆக்கிய பின் அக்கலையை வாழ்வோடு இணைத்தால் அது பயனுள்ள பொன்மலராகவும் பொலியும்."

— என். சிவன்பிள்ளை, நாகர்கோவில்.



ஆயிரத்தில் ஒருவர்

படிப்பில் சராசரிக்கும் குறைவாய் விளங்கிய மாணவர்களுக்கு ஒரு அந்தஸ்தைப் பெற்றுத் தரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் குடந்தை உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியராகப் பணியாற்றிய திரு மா. இராமலிங்கம் அத்தகைய மாணவர்களை ஒன்று சேர்த்து ஆண்டு விழா நாடகத்தில் அவர்களை நடிக்கச் செய்தார். அதற்குப் பிறகு அந்த மாணவர்கள் படிப்பிலும் பளிச்சிட ஆரம்பித்தனர்.



— வி. சுந்தரேசன், சென்னை—53.

மகனாக நினைத்தவர்

பள்ளிப் பருவத்தில் படிப்பில் படுசுட்டியாக இருந்தாலும் ஆசான் மருதமுத்து அவர்களிடம் அதிகமாக உதை வாங்கியவன் நான். அவர் மாற்றலாகிப் போகும்போது "உன்னைப்போல் ஒரு மகன் எனக்கு இருந்தான். அவன் போன வருடம் காலமாகிவிட்டான். உன்னை என் மகனாக நினைத்துத்தான் அதிகமாகக் கண்டித்துவிட்டேன்" என்று அவர் கூறியபோது நான் நெகிழ்ந்து போனேன்.

— எஸ். ராஜீவ், சென்னை—49.

"நானே பொறுப்பு!"


பழநி நகராட்சி உயர்நிலைப் பள்ளியின் கட்டணத்தைக் குறைக்கப் போராடினோம். நிர்வாகத்தைக் கண்டித்துப் பல இடங்களில் வாசகங்கள் எழுதியிருந்தோம். மிகவும் மனம் புண்பட்டுப் போய்த் தலைமை ஆசிரியர், திரு கே. பாலசுப்ரமணியம் அவர்கள் பிரார்த்தனை நேரத்தில் தம் சட்டையைக் களைந்துவிட்டுச் சொன்னார்: "நிர்வாகத்தைக் குற்றம் கூறாதீர்கள். நானே பொறுப்புள்ளவன். ஏதேனும் கண்டன வாசகம் எழுத விரும்பினால் என் முதுகில் எழுதுங்கள். நான் பழநி நகர் முழுதும் நடந்துபோய் உங்கள் கருத்தைப் பரப்புகிறேன்."


மாணவர்கள் அவ்விடத்திலேயே மன்னிப்புக் கேட்டனர். கட்டணமும் குறைக்கப்பட்டது!

— வி. சேதுமாதவன், சேலம்.

பரோபகாரி ஜீவா

மீனாட்சி வித்யா சாலையில் ஐந்தாவது படித்துக்கொண்டிருந்தேன். வகுப்பாசிரியை ஜீவா என்பவர் எளிமையான குடும்பத்தவர். இருப்பினும் பல ஏழை மாணவிகளுக்கு இலவசமாக டியூஷன் எடுத்தார். புத்தகங்கள் வாங்கித் தந்தார். பழைய புத்தகங்களை மேல்





வகுப்பு மாணவிகளிடமிருந்து வாங்கித் தந்தார். அமைதியாகப் பலருக்கு உதவிய அவரை என்னால் மறக்க முடியாது.

— ஆர். அலமேலு, சென்னை—4.

வீடு சென்றாலும் விடமாட்டார்

எங்கள் ஊர் நடுநிலைப் பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் உயர்திரு இலட்சுமணன் அவர்கள் பள்ளி நேரத்தோடு தன் கடமை முடிந்தது என்று இருந்துவிடாமல், மாலை நேரத்திலும் வீடு வீடாகச் சென்று மாணவர்கள் ஒழுங்காகப் படிக்கிறார்களா என்று கண்காணிப்பார். காலம் தவறாமை அவரது மற்றோர் சிறப்பு. அந்நாட்களில் கால் தாமதமாக ஓர் ஆசிரியரோ, மாணவரோ வந்ததே கிடையாது.

— எம். மணிவண்ணன், வடக்கம்பள்ளி.

ஆசிரியர்


மகனானாலும் மாணவன்தானே!

எங்கள் ஊர் ஹைஸ்கூலில் சேர்ந்த மறுநாளே நானும் ஒரு சக மாணவனும் வகுப்பில் பேசியதற்காக அடி வாங்கினோம். மறுநாள் என் தந்தையுடன் தலைமையாசிரியரைக் கண்டு முறையிடச் சென்றேன். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட அவர் என்னுடன் தண்டனை பெற்ற மாணவனை அழைத்து, 'இவன் யார் தெரியுமா? என் மகன்' என்றார் அமைதியாக. நாங்கள் மறு பேச்சு பேசாமல் வெளியேறினோம். அவருடைய கண்டிப்பும் ஒழுக்கமும் பல சிறந்த மாணவர்களை உருவாக்கியது.

— எஸ். இளங்கோவன், தூத்துக்குடி.

ஒரு விளக்கிலிருந்து பரவிய ஒளி

1928 ஆம் ஆண்டு என் தந்தை இறந்துவிட்ட நிலையில் என் படிப்பு அரைகுறையாக நிறுத்தப்பட்டது. அப்போது எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்த சகோதரி சுப்புலட்சுமி அவர்கள் என் தாயாரைச் சம்மதிக்கச் செய்து என்னைத் தம்முடன் அழைத்துச் சென்று லேடி வெல்லிங்டன் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்த்தார். உபகாரச் சம்பளம் பெறவும், படிக்கவும் பல உதவிகள் செய்தார். அவர் முயற்சியால் தேறிய நான் ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிப் பல நல்ல மாணவிகளை உருவாக்கும் பெருமையைப் பெற்றேன்.



— சோபனாதேவி, மதுரை.

மன்னித்ததற்கும் மேலாக.....

பம்பாய் SIES பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது சோதனைச்சாலையில் மெர்க்குரி அடங்கிய பாட்டில் ஒன்றை உடைத்துவிட்டேன். விஞ்ஞான ஆசிரியை சேஷம்மாள் அவர்கள் தலைமையாசிரியரிடம் புகார் செய்திருந்தால் நான் செம்மையாக உதை வாங்கியிருப்பேன். ஆனால் அவர் புகார் செய்யாமல் இருந்ததோடு மெர்க்குரிக்கான நஷ்டஈடையும் தானே கொடுத்துவிட்டார்.

— எஸ். சுவாமிநாதன், பம்பாய்—19.



கனிவு ஒரு பாதி

சென்னை கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் காலாண்டு தேர்வு எழுதிக் கொண்டிருந்தபோது திடீரென்று கை, கால்கள் உதற ஆரம்பித்துவிட்டன. கண்டிப்புக்குப் பேர்போன கணித



"என்ன 'கட்' சார் பண்ண?"

"ஹெல்மெட் கட்!"

ஆசிரியர் பெரியசாமி அவர்கள் என்னைச் சுமந்து சென்று ஓய்வு அறையில் கிடத்திக் கை கால்களைப் பிடித்துவிட்டார். அன்று அவருடைய கனிவையும் அன்பையும் முழுமையாக உணர்ந்தேன்.

— பாலசந்தர், சென்னை—17.

கரும் பலகை கற்ற சிலப்பதிகாரம்!

கரிச்சான் குஞ்சு என்று அழைக்கப்பட்ட தமிழாசிரியர் திரு நாராயணசாமி ஐயர் மன்னை தேசிய மேல்நிலைப் பள்ளியில் படித்த போது, எங்களுக்குத் தமிழ் போதித்தார். தவறுசெய்யும்மாணவர்களைத்திருத்த இயலா விட்டால்தன்னையே தண்டித்துக்கொள்வார். ஒருமுறை வகுப்பில் கூச்சல் அதிகமாக இருக் கவே 'அமைதியாக இருக்கும் கரும் பலகைக் குத்தான் பாடம் நடத்துவேன்' என்று அறி வித்துவிட்டு நாற்காலியைத் திருப்பிப் போட்டுக் கொண்டு நாற்பத்தைந்து நிமிடங் களுக்குக் கரும் பலகையை நோக்கிச் சிலப் பதிகாரப் பாடம்நடத்தினார். நாங்கள் வெட்க மும், வேதனையும் அடைந்து மன்னிப்புக் கேட்டோம்.

— ஆர். வி. ராஜகோபாலன், மன்னார்குடி.

பெயரைக்கூட மறக்கவில்லை!

பள்ளியை விட்டு வெளியேறிப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டது. இரண்டு வயது குழந்தையைத் தூக்கிக் கொண்டு பஸ்ஸில் கூட்டத்தில் திண்டாடிக் கொண்டிருந்தேன். 'கண்ணா, இங்கே உட்கார்.' என்று ஒரு குரல் கேட்டது. கால் ஊனமுற்ற எனக்குத் தன் இடத்தை அளித்தவர் பல லட்சம் மாணவர் களைக் கண்டிருந்த என் பள்ளித் தலைமை ஆசிரியர்.

— நா. கண்ணன், சென்னை—99.

கடமைக்கே முதலிடம்

புலவர் கல்லூரி வகுப்பில் முதல்வர் சிவ லிங்கனார் உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர் மனைவி இறந்துவிட்ட சோகச் செய்தி அவரை எட்டியது. முதலில் கலங்கிப் போன வர் வெகு சீக்கிரமாகத் தன்னைச் சுதாரித் துக் கொண்டு வகுப்பு நேரம் முடியும்வரை இருந்து பணியாற்றிவிட்டுத்தான் வெளி யேறினார். அவர் கடமை உணர்வு இன்றுகூட என் நெஞ்சில் நிழலாடுகிறது.

— இரா. இலட்சாராமன், திருப்பதி.

நகைச்சுவை உணர்வால் நற்பயன்

புதிதாக எங்கள் கல்லூரியில் சேர்ந்திருந்த அந்த ஆங்கிலப் பேராசிரியைக்குத் தமிழ் தெரியாது. மெல்ல மெல்லச் சில வார்த்தை களையும், வாக்கியங்களையும் கற்றுக் கொண் டார். அதை அறியாத இரண்டு மாணவிகள் பந்தயம் கட்டி, அவரிடம் போய் "நீ ஒரு குரங்கு, கழுதை" என்று சொல்ல, அவர் கோபப்படாமல் "நன்றி, உங்களைப் போன்ற மனிதப் பிறப்பைவிட அவை பரவாயில்லை" என்று சிரித்துக் கொண்டே கூற, அந்த மாணவிகள் வெட்கப்பட்டு மன்னிப்புக் கேட்டனர்.

— சுசிலா, டி. ஆர்.
திருச்சி—8.


மறக்க முடியாத உதவி!

பள்ளி இறுதித் தேர்வு நெருங்கிக் கொண் டிருந்த சமயம் நண்பனுடன் சைக்கிளில் பக் கத்து ஊரிலிருந்த பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டு நண் பன் இறந்தான். அன்றுமுதல் இரவுஸ்பெஷல் வகுப்புகள் முடிந்து ஊர் திரும்ப எனக்கு ஒரே பயம். தலைமை ஆசிரியர் திரு ஜேம்ஸ் வெற்றிவேல் எனக்கு விதிவிலக்கு அளிக்க மறுத்தார். தம் வீட்டிலேயே இரவு தங்கிப் படித்துவிட்டுக் காலையில் ஊர் சென்று வர லாம் என்று ஆலோசனை கூறினார். அவர் செய்த உதவியால் பள்ளியில் முதல் மாண வனாகத் தேறினேன்.

— சே. முத்துவிநாயகம், ஸ்ரீவைகுண்டம்.

புளோபிளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. சூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எஸ். இளங்கோவன்,
டெலக்ஸ்,
தொலைபேசி நிலையம்,
தூத்துக்குடி.
628 001.




நீ புரிந்த கடுமையான குற்றங்களுக்கு கொசுக்கள் நிறைந்த சிறையில் 10 ஆண்டுகள் கழிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கிறேன்.
உங்களிடம் டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் இல்லாவிட்டால் அது உண்மையிலேயே தண்டனைதான்.





இராஜா பாலசந்தர்

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்ஸில் நாம் ஒரு பரிசுப் பதக்கமும் பெறுததற்குக் காரணம் இந்தியா ஓர் ஏழை நாடு என்று கூறுவது சரியல்ல. ஏனென்றால், நம்மைவிட சிறிய, ஏழை நாடுகள் பல, நிறையப் பரிசுகளைப் பெற்றுள்ளனவே'' ஒய். எம். சி. ஏ. உடற்கல்விக் கல்லூரி முதல்வர் உணர்ச்சியுடன் பேசிக் கொண்டு இருந்தார்.

படிக்கட்டுப் படிக்கட்டான அந்தப் 'பக் தியேட்டர்' திங்கள்கிழமை காலை பத்து மணியளவில் களைகட்டிவிடும்.

அன்று ஜெனரல் அசெம்ளி. கல்லூரி மாணவ, மாணவிகள் அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாகக் கூடும் நேரமும், இடமும் அது ஒன்றுதான்.

ஹய்யர் கிரேட், பி.பீ.எட்., எம்.பி.எட்., எம்.ஃபில் என எல்லோரும் கலப்படமாக அமர்ந்திருப்பர்.

எல்லோருக்குமாகச் சேர்த்துக் கல்லூரி முதல்வர் ஒரு சாரமிக்க உரை நிகழ்த்துவார்.

சில மாணவர்கள் ரகளிய ஜோக்குகளில் ஈடுபடுவர். அது திறந்தவெளி அரங்கமானதால் காலை மெஸ்,இட்லியும், காட்டு வாகை மரத்து நிழலும் சேர்ந்து பலரை நிஷ்டையில் ஆழ்த்துவதும் உண்டு.

காய்வதற்கென்றே பூக்கும் காதல் மலர்கள் புஷ்பிக்கும் இடமும் அதுதான்.

தமிழ்நாடு அரசு தன் சார்பாக ஒலிம்பிக்ஸை 'கவனிக்க' அனுப்பிய ஒரே நபர் என்ற பெருமை பிரின்ஸிபாலுக்கு உண்டு.

அடுத்த ஒலிம்பிக்ஸிலாவது இந்தியா தங்க மெடல்களாகக் குவிக்க வேண்டும் என்பதில் முரட்டுத்தனமான ஆசை அவருக்கு.

அதற்காகவே **'GO FOR GOLD'** என்ற, — நாட்டுக்குப் பெருமை சேர்க்கக் கூடிய ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்துகின்றார் அவர்.

நான் அந்தக் கல்லூரியில் பி. பி. எட். படிக்கும் மாணவன். என் பிரின்ஸிபாலைப் போலவே கொள்ளைக் கொள்ளையாக லட்சியக் கனவுகளை மனத்தில் தேக்கி வைத்திருப்பவன்.

"டாக்டரோட ஸ்டெதாஸ்கோப் ம்பால, உங்க கழுத்துல தொங்கற விஸில் கார்டும் முக்கியத்துவம் வாய்ந்தது. உங்க விஸிலை எடுத்து நீங்க ஊதிஜ உங்க ஸ்டூடன்ட்ஸ் களுக்குப்பூர்ஸ்போர்ட்ஸ்மென்ஷிப்பொங்கியெழணும்.'' கூறிவிட்டுக், கர்சிப்பால் தம் முகத்தையும், கழுத்தையும் அழுத்தமாகத் துடைத்துக் கொண்டார் கல்லூரி முதல்வர்.

அதன்பிறகுதான் ஒலிம்பிக்ஸ் போனபோது எடுத்த புகைப்படங்களைக் காட்டினார்.



ஆனால், எதுவும் என் கண்களுக்குத் தெரிய வில்லை.

காரணம், நான் விஸிலே ஊத, என் முன் னால் எனது மாணவர்கள் சிறந்த விளை யாட்டு வீரர்களாக அணி வகுத்து நின்ற னர் — கற்பனையில்.

ஒரு வருடம் ஓடியதே தெரியவில்லை. ஒரு வேளை அது ஸ்பிரிண்ட் அடித்திருக்க லாம்.

ப்யிற்சி முடிந்து, நண்பர்கள் எல்லோரும் அழுது கொண்டே பிரிந்தோம். ஒரு வருட இறுக்கமான நட்பாயிற்றே!

பிரின்ஸிபாலிடம் சொல்லிக் கொள்ளப் போனேன்.

என் லட்சியம் அவருக்குத் தெரியும். எனவே, தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி னார்.

அவர் கூறிய கடைசி வார்த்தைகள் இது தான். "நீ உன் விஸிலே எடுத்து ஊதினா, உன் ஸ்டூடண்ட்ஸ்களுக்கு ப்யூர் ஸ்போர்ட் ஸ்மென்ஷிப் பொங்கியெழணும். பெஸ்ட் ஆஃப் லக்."

அடுத்த வருடம் (அதாவது இந்த வருடம்) எம்.பி.எட். சேர நான் முயற்சி செய்யவில்லை..

அதற்கான இரண்டு காரணங்களில் ஒன்று மட்டும் உங்களுக்குத் தெரிந்தால் போது மானது. யாரென்றே தெரியாத என் மாண வர்களைச் சந்திப்பதில் எனக்கிருந்த அவசர மும், ஆர்வமும்தான் அது.

வேலை தேடினேன்.

"வாங்க சார். உங்களை மாதிரி ஒரு லட்சிய புருஷரைத்தான் நாங்க தேடிக்கிட்டு இருந் தோம். இன்னைக்கே நம்ம ஸ்கூல்ல ஜாய்ன் பண்ணிடுங்க" என நிறைய பள்ளிகளி லிருந்து எனக்கு அழைப்புகள் வந்தது என நீங்கள் நினைத்தால் உங்களுக்கு சைபர் மார்க் தான்.

இண்டர்வியூவுக்குப் போன இடத்தில் எல்லாம் ஏதோ கதாகாலட்சேபம் கேட்பது போல என் திட்டங்களைக் கேட்டுவிட்டு காப்பி வரவழைத்தனர். எனக்குத் தராம லேயே குடித்துவிட்டு, "ஸாரி" சொல்லி அனுப்பிவிட்டனர்.

முதல் வகுப்பில் தேறி என்ன லாபம்? இருநூறு ஸ்போர்ட்ஸ் சர்டிஃபிகேட்டுகள் வைத்திருந்ததனால் யாது பயன்?

ஆனால், இரண்டாம் வகுப்பில் தேறி, இரண்டு சான்றிதழ்கள்கூட வைத்தில்லாத சுரேந்தர் பயலுக்கு வேலை கிடைத்துவிட்ட தாம்.

மாப்பிள்ளை கிடைக்காத பெண்ணும், வேலை கிடைக்காத வாலிபனும் ஒன்றுதான். வீட்டிலும், சமுதாயத்திலும் அவமானத் தோடு உலா வர வேண்டிய நிலைமை.

கொஞ்சம் நாட்கள் அப்படித்தான் இருந் தேன்.

"உன் லட்சியமெல்லாம் ஒரு பக்கம் இருக் கட்டும், முதல்ல ஒரு வேலையைப் பாருடா பேமானி" — வீடு.

"பெரிச்சா படிச்சிக் கிழிச்சதுதான் மிச்ச மாக்கும்" — சமுதாயம்.

ஆனால், மருந்துக்கும் எம்ப்ளாய்மெண்ட் ஆஃபீஸ் பக்கமே நான் போகவில்லை. நானென்ன முட்டாளா சில்லறையும், சிபா ரிசும் இல்லாமல் அங்கெல்லாம் போக?

கடைசியில் அந்த அதிசயம் நடந்தது. ஆமாம், எனக்கு வேலை கிடைத்துவிட்டது.

"தம்பி உங்களைப் பார்த்தா பாவமா இருக்கு. ஆனா எங்க ஸ்கூல் இன்னும் ரெக கனைஸ் ஆகலையே. உங்களுக்குச் சம்பளம் தர முடியாதே" என்றார் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கம் கரஸ்பாண்டண்ட்.

நிறைய தடவை போனேன். அதே பதில் தான்.

பிறகு விஷயம் தெரிந்தவர்கள் கூறினார் கள். "என்ன தம்பி நீங்க, விவரம் புரியாத மனுஷனா இருக்கீங்க. ஐயாவைக் கொஞ்சம் கண்டுக்கணும். அப்பத்தான் ஐயா மனசு இறங்கும்.

"கண்டுக்கணும்னா?"

சொன்னார்கள். அது மட்டுமல்ல. கண்டு கொண்டவர்களையும், அதனால் அவர்கள் பெற்ற பயனையும் வரிசைப்படுத்தினர்.

"எனக்கு வயிற்றிலே ஆபரேஷன் செய்த டாக்டர் ஒரு கற்றுக் குட்டி என்று எப்படிக் கண்டு பிடிச்சே?"

— சுதர்ஸன்.



முதலில் எனக்குச் சம்மதமில்லை. பிறகு விழித்துக் கொண்டேன்.

அதாவது 'அவரை'க்கண்டுகொண்டேன்.

ஆக, எனக்கு வேலை கிடைத்தது.

அந்தப் பள்ளி இருந்த ஊரைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும்.

கி. மு. காலத்திய பட்டிக்காடு அது. அப்படியே. புதைபொருள் ஆராய்ச்சியில் தோண்டி எடுத்தது போல.

பஸ் ரோட்டில் இருந்து ஐந்து மைல் ஆழத்தில் இருந்தது அந்த ஊர்.

படிக்கிற பையன்கள் சைக்கிளை விட்டு இறங்கி, வாத்தியாருக்கு நமஸ்காரம் பண்ணுவார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்?

சரியான இருண்ட கண்டம்.

நான் 'ஜாகிங் போனதைக் கண்டு ஆரம்பத்தில் பலர் மிரண்டுவிட்டனர்.

மாணவர்கள் என்னைப் பின்பற்றுவார்கள் என நினைத்தேன். ஆனால், கேலியோடு சரி. (வாத்தியார் கொழுப்பு கரையட்டும்).

இனி பள்ளி விவகாரத்திற்கு வருகிறேன்.

மற்ற ஆசிரியர்கள் என்னை 'பிஸிகல் டைரக்டர்' என கூப்பிடுவார்கள் என எதிர்பார்த்தேன்.

ஆனால், தெரியாததனால் சிலரும், வேண்டுமென்றே பலரும், ஆக மொத்தம் எல்லாருமே என்னை பி. ஈ. டி. என்றுதான் கூப்பிட்டனர்.

இப்போது நான்தான் பள்ளியிலேயே முக்கியமான — அதுகூட தவறு — மிக அத்தியாவசியமான நபர், தெரியுமா?

யாராவது வாத்தியார் வரவில்லையென்றால் அவர் வகுப்பைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிளார்க்குகளுக்குக் கணக்கு வழக்குகளில் கூடமாட ஒத்தாசை செய்ய வேண்டும்.

தலைமை ஆசிரியருக்கு நேரம்போகவில்லையென்றால் ஏதாவது பேசுவார். அதை ம... சாகத்தோடு தலையாட்டிக் கேட்க வேண்டு...

பையன்களுக்கு 'போர்' அடித்தாலு... எனக்கு அழைப்பு வரும்.

எனது முக்கியப் பணி, காலையில் விசிலடித்துப் பையன்களைக் குப்பை பொறுக்கச் செய்ய வேண்டும்.

இது வேலை கொடுத்த (மற்றும் வேலையை விட்டு நீக்கும் உரிமையுள்ள) கரஸ்பாண்டன்டின் உத்தரவு. "பி. ஈ. டி. சார், நீங்க விஸிலை எடுத்து ஊதினா, எங்கேயிருந்தாலும் ஓடி வந்து குப்பைப் பொறுக்கணும்கற உணர்ச்சி பசங்களுக்கு வரணும். அப்படியொரு பழக்கத்துக்குப் பசங்களைக் கொண்டாந்திடுங்க பார்ப்போம்."

"அப்படியென்றால் என் லட்சியம்?"

"விளையாட்டெல்லாம் அப்புறமா பார்த்துக்கலாம். இத முதல்ல செய்யுங்க பி. ஈ. டி."

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் இந்தியா எந்தப் பதக்கமும் வாங்காததன் காரணம் எனக்குப் புரிந்தது.



இதைப் படிக்கு
ஈழமும் புலிப்படையும்
நாங்கள். முழுப் பொ
வருந்தவோ, மன்னிப்

1929 — லிபியாவையும் அதன் மக்களையும் இதாலி அடக்கி ஆள நினைக்கிறது. ஆனால் இதாலியின் கனவு நினைவாகா வண்ணம் லிபியாவின் புரட்சியாளர்கள் இதாலிய ராணுவத்துக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்கின்றனர்.

லிபியாவின் சுதந்திர வெறி கொண்ட வீரர்கள் ஒமார் முக்தார் என்ற தலைவனின் கீழ் அணி திரண்டு இதாலிய ராணுவத்தின் மீது திடீர்த் தாக்குதல்கள் நடத்துகின்றனர். டாங்கிகள், கவச மோட்டார்கள் இவற்றில் வந்து, நவீன இயந்திரத் துப்பாக்கிகளால் அப்பாவி மக்களைச் சுட்டுத் தள்ளுகின்றனர் இதாலிய ராணுவத்தினர். ஆயினும் என்ன,

கண்ணுக்கெட்டிய தூரம் மணற்பாங்கான பாலைவனம் என்று எண்ணுகிற இடத்தில், திடீர் 'திடீரென்று 'இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்?' என்று புரியாமல் மலைக்கும் விதமாக லிபியாவின் விடுதலைச் சிங்கங்கள் தோன்றுகின்றனர். இதாலிய ராணுவத்தினரை லிபியப் போராளிகள் திடீர்த் தாக்குதல்களில் சின்னாபின்னப்படுத்துகின்றனர்.

இதாலிய சர்வாதிகாரி முஸோலினிக்கு மூக்குக்கு மேல் கோபம் பொங்குகிறது. இருபது வருஷங்களாக இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கும் இந்தப் போராட்டத்துக்கு ஒரு முடிவு காண எண்ணி, ஜெனரல் கிரிஸ்யான் என்பவரைப் பெரும் படையுடன் அனுப்புகிறார். புரட்சித் தலைவர் ஒமார் முக்தாரைக் கைது பண்ணாமல் திரும்பக் கூடாது என்று கட்டளை!

ஆனால் ஆரம்பமே அபசகுனமாய் இருக்கிறது ஜெனரல் கிரிஸ்யானுக்கு! இருபதுக்கு மேற்பட்ட இதாலிய ராணுவ வீரர்கள் பயங்கரவாதிகளால் அடித்துக் கொல்லப்படுகின்றனர்.





போது உங்களுக்குத் தமிழ்
நினைவுக்கு வந்தால் அதற்கு
யப்பெற்றிருேம். அதற்காக,
கோரவோ அவசியமில்லை!



ச் சிங்கம்!

UKTHAR)

இதாலிய ராணுவத்தினர் பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்து ஒரு கிராமத்தையே அழிக்கின்றனர். ஒரு பாவமும் அறியாத அப்பாவி லிபிய மக்களைக் கொன்று குவிக்கின்றனர். ஆண்களை அடித்து நொறுக்குகின்றனர், பெண்களைக் கற்பழிக்கின்றனர், குழந்தைகளைக் கூடக் கொல்கின்றனர். இந்த மாபாதகங்களை விளையாட்டுப் போல் செய்கிறது இதாலிய ராணுவம்.

ஓமார் முக்தார் இதையெல்லாம் சகிப்பாரா? அவரது விடுதலை வீரர்கள் ராணுவ மேஜர் ஒருவரைக் கொன்று, இன்னொரு மேஜரைச் சிறைப் பிடிக்கின்றனர். இரு தரப்பிலும் மேலும் பிணக் குவியல்கள்.

சமாதானம் பேச அழைக்கப்பட்ட ஓமார் முக்தார் அழைப்பை ஏற்க மறுத்து விடுகிறார்!

மறுபடியும் போர்! விடுதலை வீரர்களின் திடீர்த் தாக்குதல்கள்... ராணுவத்தினரின் பழி வாங்கும் படலம்... ஜெனரல் கிரிஸ்யான் ஒரு கிராமத்தையே சிறைக் கூடமாக்கி சுற்றிலும் இரும்பு முள்கம்பி வேலி அமைக்கிறார். கிராம மக்கள் வேலியைத் தாண்ட முற்பட்டால் துப்பாக்கிகள் தோட்டாக்களைக் கக்கும். முள்வேலி மீதே பல பிணங்கள் காணப்படுகின்றன.

கடைசியில் புரட்சித் தலைவர் ஓமார் முக்தார் பிடிபட்டு, சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, பொது மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்படுகிறார்.

இளைய தலைமுறையினர் அவர் காட்டிய பாதையில் தொடர்ந்து செல்லத் தயாராகின்றனர்!

இந்த உண்மைக் கதையைப் படமெடுத்தவர்: தயாரிப்பாளர்—இயக்குனர் முஸ்தபா அகார்டின். நிலைக்களன்: சகாரா பாலைவனம்! ஓமார் முக்தாராக நடிப்பவர்: ஆண்டனி குவின்.

—டி. எம். ஆர்.

24

அறைக்குள் நுழைந்து கர்தார் ஸிங்கைப் பார்த்த விநாடியில் ரஞ்சனி தன் அருகில் இருந்த ராதாகிஷணிடம் ரகசியக் குரலில் "நன்றாய்ப் போட்டிருக்கிறார்'' என்று சொல்லிவிட்டுப் பெரிய புன்னகையுடன் "நமஸ்கார்'' என்று கைகூப்பினான்.

சோபாவில் புதைந்திருந்த தனது சரீரத்தைக் கர்தார் ஸிங் எழுப்பி முன்னால் இரண்டு கைகளையும் நீட்டி நகர்ந்து, "நமஸ்கார்! ஆயியே! வாட் எ ப்ளெஸெண்ட் ஸர்ப்ரைஸ்!'' என்றார்.

ரஞ்சனியின் இரண்டு கைகளையும் பற்றி, "அன்று பார்த்ததைவிட இன்று அழகாயிருக்கிறாய்!'' என்று கூறிவிட்டு ராதாகிஷணிடம் கண்ணடித்து "எப்படி, இப்படிக் கச்சிதமாய் ரிப்போர்ட்டர்களைப் பொறுக்குகிறாய்?'' என்றார்.

ரஞ்சனிக்கு எரிச்சல் ஏற்பட்டது. ராதாகிஷண் அதற்கு நேரடியாய்ப் பதில் சொல்லாமல் ஆயாசத்துடன் சிரித்தான். "ஆ, ஸர்தார்ஜி, நீங்கள் மாறவில்லை!''

"நான் ஏன் மாறணும்?'' என்றார் கர்தார் ஸிங் திடீர்க் கோபத்துடன், "இந்தக் கலவரங்கள்னாலே நான் நபும்ஸகனாகி விடுவேனா? அப்படி நான் ஆகணும் என்று நீ எதிர்பார்க்கிறாயா?''

ரஞ்சனி கவலையுடன் ராதாகிஷணைப் பார்த்தாள். அவன் பதற்றமே காண்பிக்காமல் நகைத்தான்.

"ஓ, காட் நோ! நீங்கள் அப்படியெல்லாம் மாறிப் போனீர்களானால் இலக்கிய உலகத்துக்கு நஷ்டம்!''

கர்தார் ஸிங்கின் முகம் சிரிப்பில் மலர்ந்தது. கண்களில் விஷமம் பளிச்சிட்டது. ரஞ்சனியைப்பார்த்துக்கரத்தைநீட்டி அழைத்தார்.

"வா, ஸ்வீட் ஹார்ட், இவனைக் கவனிக்காதே! என் பக்கத்தில் வந்து உட்கார். என்ன சாப்பிடுகிறீர்கள், விஸ்கி, கோனியாக்?''

"ஏதாவது ஸாஃப்ட் ட்ரிங்க்!'' என்று ரஞ்சனி முணுமுணுத்தாள்.

"நான் ஸாஃப்ட் இல்லை!'' என்று ராதாகிஷண் சிரித்தான்.

"தெரியும், கவலைப்படாதே!'' என்று கர்தார் ஸிங் அவனுக்குக் கிளாஸை நிரப்பினார். பெல்லை அமுக்கி வேலைக்காரன் வந்ததும், "ஒரு காம்பாகோலா கொண்டு வா!'' என்றார்.

"இப்பொழுது சொல்லுங்கள். ஏதாவது பேட்டிக்கு வந்திருக்கிறீர்களா?''

"வேறு யாரையோ ஒருத்தரைப் பேட்டி காண வந்தோம். வழியில் உங்கள் வீட்டைக் கண்டதும்பார்த்துவிட்டுப்போகலாம்என்று வந்தோம்'' என்றாள் ரஞ்சனி.

"தாங்க் யூ ஸ்வீட் ஹார்ட்!'' என்றார் அவர் உண்மையான மகிழ்ச்சியுடன். "நீங்கள் வருவதற்கு ஐந்து நிமிஷங்கள் முன்பு நான் கிட்டத்தட்ட தற்கொலை செய்து கொள்ளும் மனநிலையில் இருந்தேன்!''



ரஞ்சனி வியப்புடன் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். இவருடைய இந்த வார்த்தைகளுக்கும் உண்மையான இவர் சுபாவத்துக்கும் சம்பந்தமே இல்லை என்று தோன்றிற்று.

"உங்களுக்கு நான் ரொம்ப நன்றி சொல்ல வேண்டும்'' என்றார் கர்தார் ஸிங் தொடர்ந்து.



புயல்

வாஸந்தி

''ஹிந்து சீவேகிதர்கள் வருவது குறைந்து விட்டது. சீக்கியர்களுடன் பேசிப் பேசி அலுத்துவிட்டது!''

''ஏன்?'' என்றான் ராதாகிஷன்.

''திருப்பித் திருப்பி எங்களுக்குப் பேச ஒரே விஷயம்தான் இருக்கிறது. ஒரு வீர்யம் இல்லாத கோபத்தையும் வெறுப்பையும் தான் காட்ட முடிகிறது. இந்தத் துவேஷப் பேச்சு எனக்கு மூச்சை முட்டுகிறது!''

ராதாகிஷன் அவரையே யோசனையுடன் பார்த்தான்.

''மறுபடியும் ஒரு பிரிவினை வரும் என்று நினைக்கிறீர்களா?''

கர்தார் ஸிங் சில வினாடிகள் மௌனமாக அமர்ந்திருந்தார்.

''நான்சொல்வதைப்பத்திரிகையில்போட மாட்டியே?''

''இல்லை, பிராமிஸ்!''

கர்தார் ஸிங் ஒரு மடக்கு விஸ்கியை விழுங்கிவிட்டுச் சொன்னார்.

''வரக்கூடாது என்று பிரார்த்திப்போம். ஆனால் நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறது. சீக்கிய பொது ஜனமே ரொம்பக் கோபத்தில் இருக்கிறது. தங்களைக் கேவலப் படுத்திவிட்ட மாதிரி! தங்களுக்குப் பாது காப்பு இல்லை இந்திய சமூகத்தில் என்கிற பயம் ஆழமாகப் பதிந்துவிட்டது. முதலில் ப்ளூ ஸ்டார் ஆபரேஷன். இப்பொழுது நவம்பர் கலவரங்கள். சீக்கியர்கள் அவ்வளவு சுலபமாக இந்த இரண்டையும் மறக்க மாட்டார்கள்.''

ராதாகிஷன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். பிறகு மெல்லிய குரலில் கேட்டான்:

''தங்கள் இனத்தவர் பிரதமரைக் கொலை செய்துவிட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? கண்டனப்படுத்த வேண்டிய விஷயம் என்று நினைக்கவில்லையா?''

''கடவுள்களின் கோபத்தை சமாதானப் படுத்த முன்பு மனுஷனையோ, மிருகத்தையோ பலியிடுவார்கள். இப்பொழுது ஒரு சமூகம் தனது கோபத்தைச் சமாதானப்படுத்த ஒரு பலியிட்டிருக்கிறது. அந்தச் செயலைவிட அதைச் செய்யத் தூண்டிய காரணங்கள், சரித்திரங்கள் இவைதான் எனக்கு அதிகக் கவலையைக் கொடுக்கிறது. இதையெல்லாம் நாம் ஆராயாவிட்டால் தவறுகள் நடந்து கொண்டேயிருக்கும். 'எண்ணம்' என்பது ரொம்ப முக்கியம். ஏனென்றால் அதிலிருந்து தான் செயல் விளைகிறது. **The thought of Violence. The cult of Violence.** இது ஜனிப்ப தற்கு என்ன காரணம்? பூஜைக்கு பலியிடும் வழக்கம் இந்து சமூகத்தில் அதிகமாகிப் போன போதுதான் புத்த சமயம் வந்தது. அஹிம்ஸையைப் போதிக்க. அதனுடைய பாதிப்பினாலே ஒரு வேடிக்கையான மாறுதல் பலியிடும் வழக்கத்திலே ஏற்பட்டதாம். மாவைப்பிசைந்து ஆடாகப்பாவித்துஒட்டு

வார்களாம். எப்படி?''

கர்தார் ஸிங் லேசாகச் சிரித்தார்.

''நீ மாவை வெட்டினாலும், ஆட்டை வெட்டினாலும் வெட்டத் தூண்டிய எண்ணம் எது? அது அல்லவா அதிக பயங்கரமானது?''

அவர் சற்று நேரம் கண்ணை மூடியபடி மௌனமாக அமர்ந்திருந்தார். தூங்கிப்போய் விட்டாரோ என்று ரஞ்சனிக்கு சந்தேகமாக இருந்தது. போதையில் பேசும் இவரது இன்றைய பேச்சு 'குழப்பத்தைத் தந்தது.

சென்றமுறை இவரைப் பேட்டி காண வந்தபோது ''அகால்தக்தில் ஆயுதம் வைத்துக் கொள்வது ஏதும் தவறில்லை'' என்று சொன்னது இவர்தானா என்று சந்தேகம் வந்தது. இவருள் எத்தனை மனிதர்கள்? அதில் யார் நிஜமானவர்?

பேச்சு நின்று போன உணர்வே இல்லாமல் கர்தார் ஸிங் கண்ணை மறுபடி திறந்து தொடர்ந்தார் ஆங்கிலத்தில்:

''வன்முறைவாழ்க்கை முறையாகப்போய் விட்டது. இருக்கிற அமைப்புகளில் ஜனங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. வன்முறையால்தான் காரியத்தைச் சாதிக்க முடியும் என்று எண்ணம் வந்துவிட்டது. அது எல்லைச் சண்டையோ, ஜாதிச் சண்டையோ, அரசியல் சண்டையோ, எல்லாவற்றிற்கும் இப்பொழுது அதுதான் ஆயுதம். இதற்கெல்லாம் வேர் எங்கே, மூலம் எங்கே என்று கண்டு பிடி ராதாகிஷன்! எல்லா கேள்விக்கும் 'ஆமாம், இல்லை!' என்கிற பதிலை எதிர்பார்க்காதே! எனக்குக் களைத்துவிட்டது. ஐ டெல் யூ. ஐ ஆம் ஆப்ஸொல்யூட்லி டயர்ட்!''

மீண்டும் நீண்ட நேர மௌனத்துக்குப் பிறகு அவர் சொன்னார்:

''திரும்பத் திரும்ப வேஷம் போட்டுக் களைத்துவிட்டேன். கடைசியில் நான் யார் என்றே எனக்குத் தெரியவில்லை. நான் யார்?''

'நாம் போகலாம்' என்று ரஞ்சனி ராதாகிஷனுக்கு ஜாடை காட்டினாள்.

கிளாஸைத் தயக்கத்துடன் வைத்துவிட்டு ராதாகிஷன் எழுந்தான். கர்தார் ஸிங்கின் கையைக் குலுக்கினான்.

''தாங்க் யூ மிஸ்டர் கர்தார் ஸிங். 'கவலைப் படாதீர்கள். ஏதாவது நல்ல வழி பிறக்காமல் போகாது பஞ்சாப் பிரச்னையைத் தீர்க்க!''

''இப்போதைக்கு எந்த வெளிச்சமும் கண்ணுக்குத் தெரியவில்லை. பஞ்சாபுக்கு விமோசனமில்லை!''

''ஓ, அப்படிச் சொல்லாதீர்கள்!'' என்றாள் ரஞ்சனி தன்னையறியாமல்.

''ஒரு 'எழுத்தாளர் இப்படி நம்பிக்கை இழந்துவிடக் கூடாது!''

கர்தார் ஸிங் எழுந்து அவளை அணைத்துக் கொண்டார். ''தாங்க் யூ ஸ்வீட் ஹார்ட்! என்னை உற்சாகப்படுத்த அடிக்கடி வாயேன்! ஒரு மாலைப்போது கவிதை படிப்பதற்கே வைத்துக் கொள்வோம்!''

ஒரு வழியாக அறையை விட்டு வெளியே வந்து வராந்தாவில் சிடுசிடுத்த முகத்துடன் உட்கார்ந்திருந்த ரூபாவைத் தாண்டித் தோட்டத்துக் கதவைத் திறந்து தெருவுக்கு வந்ததும்



அருள்வாக்கு

புராணம் என்பது வேதத்துக்குப் பூதக் கண்ணாடி. சின்னஞ் சிறியதாக இருப்பதைப் பூதக் கண்ணாடி நன்றாகப் பெரிசு பண்ணிக் காட்டுகிறதல்லவா? இம்மாதிரி வேதத்தில் சுருக்கமாக, சின்னச் சின்னதாகப் போட்டிருக்கிற தர்ம விதிகளைக் கதைகள் மூலம் பெரிசு பண்ணிக் காட்டுவதுதான் புராணம்.

ஒன்றைச் சுருக்கமாகச் சொன்னால் அது மனஸில் ஆழப் பதியாமல் போய்விடலாம். அதையே சுவாரஸ்யமான கதையாகச் சொன்னால் நன்றாக மனஸில் பதியும்.

''ஸத்யம் வத'' (உண்மையே பேசு) என்று மட்டும் வேதம் சொல்கிறது. அப்படிப் பேசுவதால் எத்தனை பெருமை ஏற்படுகிறது என்பதை ஹரிச்சந்திரன் கதை பல அத்தியாயங்களில் விஸ்தாரமாகச் சொல்கிறது. 'தர்மம் சர' (அறத்தைப் பின்பற்று) என்று இரு வார்த்தையில் வேதம் சொன்னதை நீளநெடுக மஹாபாரதத்தில் தர்மபுத்திரனின் கதையாகச் சொல்லியிருக்கிறது. ''மாத்ரு தேவோ பவ'' ''பித்ரு தேவோ பவ'' (அன்னை தந்தையைத் தெய்வமாகக் கொள்) என்ற வேத வாக்குக்கு, ஸ்ரீராம சரித்திரம் பூதக் கண்ணாடியாய் இருக்கிறது. அடக்கம், பொறுமை, தயை, கற்பு முதலான அநேக தர்மங்களை, வேதத்தில் கட்டளையிட்டுள்ளவற்றை புராண புருஷர்களும், புண்ய ஸ்திரீகளும் தங்களுடைய சரித்திரத்தின் மூலம் நன்றாகப் பிரகாசிக்கும்படி செய்திருக்கிறார்கள்.

ரஞ்சனி 'அப்பாடி!' என்று பெருமூச்சு விட்டாள்.

"அந்த ஆளுடைய 'நான் யார்' என்கிற கேள்விக்கு நிச்சயம் பதில் நம்மாலே சொல்ல முடியாது. ஐ ஆம் டோட்டலி கன்ஃப்யூஸ்ட்!"

ராதாகிஷன் மெல்லிய புன்னகையுடன் மோட்டார் சைக்கிளைக் கிளப்பினான்.

"அந்த ஆள் நான் நினைச்சதைவிட ஆழமானவர்! இந்த மாதிரி குடிபோதையில்தான் உண்மை பேசுவார் போலிருக்கு."

"போதை தெளிஞ்சதும் வேஷம் போடறார். பஞ்சாபிய சமூகத்திலே ஒரு முக்கியமான இடம் வகிக்கிறவர்கள் எல்லாம் கொஞ்சம் தைர்யமாக வாயைத் திறந்து பேசியிருந்தால் எத்தனையோ விபத்துக்கள் நடக்காமல் இருந்திருக்கும்."

வேகத்தை அதிகரித்தபடி சற்றுக் குரலை உயர்த்தி ராதாகிஷன் சொன்னான்:

"எல்லாரும் பயப்படுகிறார்கள் ரஞ்சனி. வன்முறையைப் பத்தி இவ்வளவு கவலையோடு இவர் எதனால் பேசுகிறார்? அதனுடைய பயமுறுத்தலை அவர் தினமும் அனுபவிப்பவராக இருக்க வேண்டும்! இவரை நினைத்து எனக்குப் பரிதாபமாக இருக்கிறது!"

"ஸ்காட்ச் விஸ்கியினாலே ஏற்பட்ட இளக்கமா இது?"

"தட் இஸ் ஸில்லி! அவர் சொன்ன மாதிரி ஒரு சுவர் எழும்பித்தான் விட்டது ஹிந்து-சீக் நடுவில். ஹேய், உன் சிநேகிதன் மன்மோஹன் ஸிங் எப்படி இருக்கிறான்? உனக்கு ஒரு சர்தாரிணி சிநேகிதி கூட உண்டு இல்லே?"

"பெரிய அதிர்ச்சியில் இருக்கிறார்கள்" என்றாள் ரஞ்சனி வருத்தத்துடன். "ஆனால் மன்மோஹன் சுபாவத்தில் மாறவில்லை. ருமாதான் அடியோடு மாறின மாதிரி இருக்கிறது. இந்தக் கலவரத்தின் போது அவளுடைய ஃபியான்ஸி கொல்லப்பட்டான். அந்த அதிர்ச்சியிலே இந்துக்களை வெறுக்க ஆரம்பித்துவிட்டாள்."

"இதிலே ஆச்சரியப்பட ஒண்ணும் இல்லே!"

"ஆச்சரியப்படலே! வருத்தமாயிருக்கு. அவளை எத்தனையோ சமாதானப்படுத்திப் பார்க்கிறேன். அவளுடைய கோபம் குறையல்லே."

"இப்போதைக்குச் சமாதானமாகாது. மன்மோஹன் ஸிங்கிடம் கூட மாறுதல் ஏற்பட்டிருக்கும். நீ கவனித்திருக்க மாட்டே. மனசுக்குள்ளே கோபமும் ஏமாற்றமும் நிச்சயம் ஏற்பட்டிருக்கும்! முன்னைப் போல் உன்னோடு சகஜமாப் பேசறானா?"

ரஞ்சனி மௌனமானாள். உண்மையில் அவனோடு அவன் போனில் பேசிக்கூட நான்கு நாட்களாகிவிட்டிருந்தன.

(தொடரும்)

அவற்றைப் படிப்பதாலும், கேட்பதாலும் இந்த தர்மங்களில் நமக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டாகிறது.

இவர்கள் எல்லாருக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் நிறைய வந்திருக்கின்றன. அநேக தப்பு தண்டாக்களைச் செய்கிற நம்மை விட இந்த உத்தமமான புராண பாத்திரங்கள்தான் ஜாஸ்தி கஷ்டப்பட்டிருக்கிறார்கள். ரொம்பவும் பயங்கரமான சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனாலும் இவர்களுடைய சரித்திரத்தைப் படிக்கும்போது "தர்மங்களை அநுஸரிப்பதால், கஷ்டந்தானே ஏற்படுகிறது? அதனால் அநுஸரிக்க வேண்டாமே!" என்று தோன்றுவதேயில்லை. அத்தனை கஷ்டத்திலும் சோதனையிலும் விட்டுக் கொடுக்காமல் அவர்கள் பாறாங்கல் மாதிரி தர்மத்திலேயே நிற்பதால் பெற்றிருந்த மனத் தெளிவுதான் நம் மனஸில் பதிகிறது. அதோடுகூட அந்த உத்தமர்கள் படும் கஷ்டங்களைக் கேட்கும்போது நம் உள்ளம் உருகுவதாலேயே நம்முடைய அழுக்குகளையும் அலம்பிவிட்டாற்போல் இருக்கிறது. முடிவிலே அவர்களுக்கு ஏற்படுகிற பெரிய வெற்றியும் கீர்த்தியும் நமக்கு அந்த தர்மங்களில் கெட்டியான பிடிமானத்தை உண்டாக்கித் தருகின்றன.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசசாரிய சுவாமிகள்.




போட்டிக் கதை - 4

பாரு தலைக்கோசரக் கட்டையில் தலை வைத்தபடி படுத்திருந்தாள். ஜன்னல் வழியாக வந்த காற்று ஈரத்தரையில் உரசியபடி மென்குளிர் காற்ருக அவள் மீது படர்ந்து கொண்டிருந்தது. காலை வேலை எல்லாம் முடிந்துவிட்டுத் தகப்பனுர் ஊஞ்ச லில் சயனித்துக் கொண்டிருந்தார். வாசலை ஒட்டிய அறையில் ஸ்மித்தின் டைப் அடிக்கும் சத்தம் சன்னமாக ஒலித்துக் கொண்டிருந் தது.

ஒரு மாறுதலுக்கு வலது காலை தூக்கி இடது கால் முட்டியின் மீது வைத்துக்கொண் டாள். கொலுசுக்குக் கீழே பாதம் வெண் ணிறத்தில் இளமையுடன் ஒளிர்ந்தது. ஈரத் தில் அலைந்தும் எந்தவித வெடிப்பும் இன்றி செழுமை கொழுவிய தனது பாதத்தைக் கண்டு அவளே பெருமைப்பட்டுக் கொண் டாள். வயது கால் நூற்ருண்டை கடந்துவிட் டது. வேதத்தோடும் பூஜையோடும் தன்னை ஆட்படுத்திக் கொண்ட சாஸ்திரிகள் இரண் டொருமுறை அவளது கல்யாண முயற்சியில் இறங்கினுர். வெற்றி பெற முடியவில்லை. அம்மா இருந்திருந்தால் நச்சரித்து இருப் பாள். தாயின் உறவுப் பையன் ராஜசேகரன் அவளுக்கு எனவே இருப்பதாகச் சொன்னுர் கள். ஆனுல் படித்துப் பட்டம் பெற்றுி நல்ல உத்தியோகம் கிடைத்தபிறகு, தனது அதி காரிபெண்ணையே அவன் கல்யாணம்செய்து கொண்டுவிட்டான். தனக்கும் ஒரு தேவ தூதன் வருவான், தன் கரம் பற்றித் தன்னை அழைத்துச் செல்வான் என ஆயிரம் ஆயிரம் கனவுகள் கண்டாள், பாரு. தன் அழகை யும் சமையல் திறமையையும், வீட்டை நிர்

‘அன்னவரே என் கணவர்’

சுபஸ்ரீ



வழிக்கும் கலையையும் கண்டு ஒரு கண்ணன் வாரானோ....

மார்கழி மாதத்து இளம் குளிரில் வாசலில் பாரு அழகிய கோலம் போட்டுக்கொண்டிருந்தபோது, ஒற்றை மாட்டு வண்டி வந்தது. அதிலிருந்து வெண்பனிபோல் ஒரு இளைஞன் குதித்தான். 'அக்னிஹோத்ரி ஆஞ்சநேய சாஸ்திரி?' கேள்வியைப் புரிந்து கொண்டு அவனைத் திண்ணையில் உட்காரச் சொல்லிவிட்டுப் பாரு உள்ளே ஓடினாள். ஜபம் செய்து கொண்டிருந்த சாஸ்திரிகளிடம் யாரோ வெள்ளைக்காரன் வந்திருக்கிறான் என்று கூறினாள். 'நானே அங்கு வருகிறேன்' என்றார். பாரு வெளியே சென்று 'இருங்கள் சாஸ்திரிகள் வருவார்!' என்று அபிநயத்தோடு கூறியதைப் புதியவன் புரிந்து கொண்டான்.

கனைத்துக்கொண்ட சாஸ்திரிகள் வந்ததும் புதியவன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்கரித்தான். பிறகு அபிவாதையே கூறுவதுபோல் கையை காதருகே குவித்துக் கொண்டு ஜான்ஸ்மித் என அறிமுகப்படுத்திக் கொண்டான். பிறகு தெளிந்த சமஸ்கிருதத்தில் பேசினான்.

'ஸ்ரீ ராமகோடி மடம் பூஜ்ஜியானந்த சுவாமிகளின் அறிமுகக் கடிதத்துடன் வந்திருக்கிறேன். அமெரிக்காவில் பிட்ஸ்பர்க்கில் படிக்கும்போதே எனக்கு சமஸ்கிருதத்திலும் வேதங்களிலும் ஈடுபாடு அதிகம். பல்கலைக்கழக மான்யம் பெற்று வேத சாஸ்திரம் ஆராய்ச்சி புரிவதற்காக முன்பு இந்தியாவுக்கு வந்திருக்கிறேன். சுவாமிகள் கூட்டிய சதஸில் ஒரு 'பேப்பர்' படித்தேன்."

சாஸ்திரிகளுக்கு காளஹஸ்தியில் நடைபெற்று, தான் பங்கு கொண்ட ஸதஸ் நினைவுக்கு வந்தது. ஒரு பகற் பொழுதில் வேஷ்டியும், அங்கவஸ்திரமுமா ஒரு அமெரிக்க இளைஞன் 'வேத காலத்து சடங்குகள்' பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை படித்தது நினைவுக்கு வந்தது. இடை இடையே சுவாமிகள் கேள்வி கேட்டு அதற்கு அவன் தகுந்த பதில் கூறி பூஜ்ஜியர் சந்தோஷத்துடன் முறுவலித்ததும் சாஸ்திரிகளுக்கு ஞாபகம் வந்தது. அதே இளைஞன்தான் இவன். அவன் மீது மதிப்பு உயர்ந்தது. 'பிட்ஸ் பர்க்கில் வெங்கடேஸ்வரப்பெருமான் ஆலயம் வந்ததிலிருந்து எனக்குள் ஒரு ஒளி தோன்றிவிட்டது. ஆலயத்தை நிர்வகிக்கும் வைஷ்ணவ ஆச்சாரியார் ஸ்ரீ மணவாள அய்யங்காரிடம் ஆகம, சாஸ்திரம் பற்றி சற்று அறிந்து கொண்டேன். பூரண வேத ஞானம் பெறவும், நித்ய அக்னி ஹோத்ரம் பற்றி தெரிந்து கொள்ளவும் ஆவல் ஏற்பட்டது. மீண்டும் ஆராய்ச்சிக்குப் பாரதம் வந்துள்ளேன். சுவாமிகள் தங்களிடம் சென்று தெளிவு பெறும்படி பணித்து இருக்கிறார்கள். தாங்கள் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும்.'– இளைஞன் வேண்டினான்.

"நான் நித்திய அக்னி ஹோத்திரி என்பது உண்மைதான். என் மனைவியை இழந்து இரண்டு வருடமாகிறது. அதிலிருந்து அக்னி ஹோத்திரம் செய்யும் தகுதி எனக்கில்லை. ஆனால் அதைப்பற்றி விளக்க முடியும்!"



சுவாமிகள் மடத்து க்டிதம் பார்த்த பிறகு அவன் மிலேச்சன் என்ற எண்ணம் மாறி சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும் பாவனையும் படிப்படியாக ஏற்பட்டது. 'நான் மிகுந்த ஆசாரம் பார்ப்பவன்; நீயும் அதற்குத் தகுந்தாற்போல் இருக்க வேண்டும். திண்ணையை ஒட்டிய அறையை உனக்கு ஒழித்துவிடுகிறேன். ஆனால் உணவு....'

'அதை நான் வேறெங்காவது பார்த்துக் கொள்கிறேன்.'

அப்படித்தான் ஸ்மித் சிஷ்யனாக வந்தான்.

'அப்பா, அவர் வேதம் படிக்கிறார் என்கிறீர்கள். அன்னிய நாட்டான் என்பதற்காக கண்ட இடத்தில் எங்கே சாப்பிடுவார். நமது வீட்டிலேயே சாப்பிடட்டுமே.....'

ஸ்மித்தின் ஞானத்தையும் சீலத்தையும் உணர்ந்த சாஸ்திரிகள் ஒப்புக் கொண்டார்.

நித்ய அக்னிஹோத்ரி விளக்கினார்: ஹோம அக்கினி நெருப்புக் குச்சியின் உராய்வில் உண்டாக்குவதல்ல... அசுவத்தம் மரக்கட்டையைக் கடைந்து மரத்தூளில் பற்றிய நெருப்புத்தான் தகுதி வாய்ந்தது. தாழ்வாரத்தில் மண்ணினால் சில வரம்புகள் கட்டி அங்குதான் 'த்ரேதாக்கினி' ஹோத்திரம் நடக்கும். மனைவி கூட இருக்க வேண்டும். கையில் மரக் கத்தியுடன் கெட்ட தேவதைகளை மந்திரம் கூறி விரட்ட வேண்டும். மாதம் இருமுறை பிரதமை தோறும் 'இஷ்டி' நடைபெறும். சாஸ்திரிகள் வியாக்யானத்தை ஸ்மித் கவனத்துடன் கேட்டான். தூரத்தில் அமர்ந்து பாருவும் கேட்பாள். இத்தனை நாட்கள் தகப்பனாரின் வைதிகச் சடங்குகளை கவனிக்காமற் போய்விட்டோமே! அதுவும் ஒரு அன்னிய நாட்டான் சிரத்தை எடுத்துக் கொண்ட பின்னர்தான் தனக்கும் ஈடுபாடு.

இருவருமே வடமொழியில் சிந்தனைகளைப் பரிமாறிக் கொள்வார்கள். ஆதி சங்கரரின் பிரும்ம சூத்திர பாஷ்யத்தில் இருவரும் இணைந்து நேரத்தை மறந்துவிடுவார்கள். இடையே அப்பய்ய தீக்ஷிதரின் பரிமள நூலும் இடம் பெறும்.

''ஏதோ ஒரு ஜென்மத்தில் ரிஷி புத்திரனாக இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவனுக்கு நமது வேதங்களிலே இவ்வளவு ஞானம் ஏற்பட முடியுமா? முற்றுணர்ந்த சுவாமிகள் தகுதியில்லாமல் சும்மாவா.... அங்கீகரிப்பார்....?''

முன்பெல்லாம் பக்கத்து வீட்டுப் பாட்டி வந்துதான் ஸ்மித்துக்கு உணவு படைப்பாள். சாஸ்திரிகள் உள்ளத்தில் நல்லெண்ணம் பரவப் பரவத் தடைகள் குறையலாயின. பாருவே அவனுக்குப் பரிமாறுவாள். அவன் காலை மடித்துக் கொண்டு அமர்ந்து அன்னம் உண்பதே ஒரு வேடிக்கை. பாரு பார்த்து அனுபவிப்பாள். அயல் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் வந்து புதிய முறை உணவுகள் உண்டு கல்வி கற்கும் இளைஞனது ஞானத்தை எத்துடன் ஒப்பிடுவது? 'இந்திய உணவு, தென்னிந்தியச் சமையல் பிடிக்கிறதா....' பாரு தனது கொச்சை ஆங்கிலத்தில் கேட்டாள். 'இந்த மண்ணில் விளைந்தவை எல்லாமே எனக்குப் பிடிக்கும்....'

என்னைக் கூடவா?' என்று பாருவுக்குக் கேட்கத் தோன்றும். சாம்பாரை விட கூட்டுப் பிடிக்கும். தக்காளி ரசம் என்றால் டம்ளரில் குடிப்பான். பாருவுக்கு அவன் ரஸனை புரியும். அவனுக்கு இட்லி பிடிக்கும் என்பதற்காகத் தினம் தினம் மங்கு மங்கு என்று மாவரைப்பாள். அவனது வெள்ளை வேஷ்டி அங்கவஸ்திரம், சமஸ்கிருதப் பேச்சு எல்லாம் அவளுக்குப் பிடிக்கும். அந்த நீலக் கண்களை மட்டும் அவளால் ஜீரணிக்க முடியவில்லை. டைப் அடிக்கும்போது அறை நுழைவாயிலில் அமர்ந்து அரட்டை அடிப்பாள்.

ஒருநாள் கேட்டாள்:

''உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டதா?''

''இல்லை. ஆராய்ச்சி முடிந்ததும் ஒரு பாரதப் பெண்ணை மணந்து கொள்ள விரும்புகிறேன்.''

''தமிழ் நாட்டுப் பெண்ணா?''

''பார்வதி போன்ற ஒரு பெண்ணை...''

'பைத்தியம்தான் பிடித்திருக்கிறது' — பாரு உள்ளே ஓடிவிட்டாள். ஒருவேளை அன்னை பார்வதியைக் குறிப்பிடுகிறானோ!

பிறகு அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவள் நெஞ்சு அடித்துக் கொள்ளும். 'ஓ, தேவனே என்னைக் கிருஷ்ணன் போல் வந்து ருக்மிணி போல் ரதத்தில் ஏற்றி அழைத்துச் செல்வாயாக... ராஜசேகரனும், ஸ்ரீனிவாஸனும் அங்கீகரிக்காத இந்த உடலை உனக்கு அர்ப்பணிக்கிறேன். எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் தன்னோடு உற்றோமே யாவோம்...!' அவள் உதடுகள் முணுமுணுத்தன. அவன் அவள் முன் விண்ணாகி, மண்ணாகி, கண்ணார் அமுதமாய் நின்றான். மகிழ்ச்சிப் பூம்புனலில் இளைத்துப் பிச்சியாக வளைய வந்தாள்.

பத்து நாட்களாக சாஸ்திரிகள் படுத்துவிட்டார். டவுன் டாக்டர் வந்து பார்த்து கை விரித்துவிட்டார். பணிவிடை முழுவதும் ஸ்மித் தான். பாடங்கள் நின்றுவிட்டன.

'சந்துருவுக்குத் தந்தி அடிக்கட்டுமா?' பாரு விசாரித்தாள்..

தலையசைத்து மறுத்துவிட்டார்.

சந்துரு அவரது ஒரே பிள்ளை. அவனுக்குத் தனது பரம்பரைக் கல்வியான வேதத்யயனம் செய்வித்தார். முயற்சி, ஜ்வாலை வராத அக்கினி போல் புகைந்து போயிற்று. ஆங்கிலக் கல்வியிலும் மனம் பற்றிடவில்லை. ஆட்டோ கம்பெனியில் மெக்கானிக்காக இருந்தான். நித்ய அக்னிஹோத்ரியின் பிள்ளை உதட்டில் அக்னி ஏந்தி நிற்கிறான்! ஊரார் கிண்டல் அவர் காதில் விழுந்தது. ஒருநாள் வீட்டிலுள்ள பஞ்ச பாத்திர உத்திரணியைத் திருடி விற்றுவிட்டான். ஆத்திரம் தாங்காமல் அடித்தார். இன்னும் கொஞ்சம் பணத்தை வீட்டிலிருந்து திருடிக் கொண்டு பம்பாய்க்கு ஓடிவிட்டான். பத்து வருஷங்கள் கழித்துப் பணக்காரனாகத் தான் மணந்து கொண்ட பெண்ணுடன் ஊருக்கு வருவதாக எழுதினான். வாசற்படி ஏறக்கூடாது என்று பதில் எழுதிவிட்டார். அம்மாவிற்குக் காச நோய் வந்தபோது ஒரு பெரிய தொகைக்குக் காசோலை அனுப்பினான். திருப்பி அனுப்



வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

போட்டி: 21

உதவி செய்யப்போய் பாராட்டுப் பெற்ற அல்லது நன்றியை அடைந்த விதத்தில் ஏதேனும் நூதன அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஏன், உதவப்போய் வாங்கிக் கட்டிக் கொண்ட அனுபவம்கூட இருக்கலாம்! எவ்வாருனுலும் அந்த ரசமான அனுபவத்தைக் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானுல் பரிசு. குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல்! 'உதவிய அனுபவம்' — மறவாதீர்!

முடிவு தேதி: 7.10.85

32 வி. ஐ. பி. ஸூட் கேஸ்கள் பாக்கி. அவற்றில் ஒன்றைத் தட்டிச் செல்லுங்கள். வாரா வாரம் போட்டியில் பங்கு பெறுங்கள்!

என் பெயர்: ....

விலாசம்: ....

....

பப்பட்டது. சாஸ்திரிகளுக்கு வஜ்ர இதயம். பையனுக்கு எள்ளும் தண்ணீரும் ஊற்றி ஸ்நானம் செய்துவிட்டார்.

கடைசி நாள் மிராசுதார் முத்துஸ்வாமி ஐயரையும் கூப்பிட்டு அனுப்பினுர்..

''நாளை மறுநாள் உத்திராயணம். நான் மறைந்துவிடுவேன். என் பிள்ளைக்குதந்திகூட கொடுக்க வேண்டாம். இந்த ஸ்மித் இருக்கிருனே அவன் எனக்குப் பிறவாத பிள்ளை. என்னிடம் பாஷ்யம் கேட்டு வேத விசாரம் செய்து பாடம் கேட்டு பூரண பிரும்ம ஞானத்தை அடைந்தவன். உண்மையான பிராமணன். அவனே எனக்குத் தகனக் கிரியைகள் செய்ய வேண்டும். பிறகு எனது சாம்பலை அவனே கங்கையில் கரைக்க வேண்டும். கிரியைகள் எனக்குத் தேவையில்லை.''

சொல்லி வைத்தாற்போல் மறைவு வந்தது. சான்ருேர் ஞான திருஷ்டியினுல் கூறும் வாக்கு பலிக்காமல் போகுமா? ஸ்மித் ஈர வேஷ்டியுடன் புகைச் சட்டியுடன் ஊர்வலத்துக்கு முன்னுல் சென்று கொண்டிருந்ததைக் கண்டு ஊரே அதிசயித்தது.

நித்ய அக்னி ஹோத்ரியின் உடல்மீது அக்கினியைக் கொட்டியபோது அவன் நீலக் கண்கள் நீரைச் சொரிந்தன. எத்தகைய ஒரு ஆல விருக்ஷத்தை வேத வித்தகரை, குருவாக அடைந்தான்! ஞானம் விளைந்த தன்னை ஏற்றுக் கொண்ட அவர் அல்லவா உண்மையான அத்வைதி.

மறுநாள் சஞ்சயனம் முடிந்து சாஸ்திரிகளின் சாம்பரை. ஒரு பித்தளைச் செம்பில் ஜாக்கிரதையாக பாக் செய்தான்.

எப்போது அவன் ஞானம் பெற்ற பிராம்மணன் என்று அப்பா கூறினுரோ.... அப்போதே அவன் தனக்குக் கணவனுகும் தகுதியும் பெற்றுவிட்டான். 'அன்னவரே என் கணவர் ஆவார்' எனப் பாரு எண்ணினுள்.

'கண்ணுக்கினியானே! கசிந்து உள்ளம் நெக்குருக நினைக்கிறேன். நேசம் வைத்தேன். உனது கைத்தலம் பற்றி அக்கினி வலம் வந்து உன்னேடு வேத வாழ்க்கை நடத்துவேன். என் கை உனக்கல்லால் எப்பணியும் செய்யற்க.' பாரு தந்தை மறைந்த துக்கத்திலும் தனக்கு ஒரு கொழு கொம்பைத் தேடித் தவித்தாள்.

ஸ்மித் மூட்டை கட்டிக்கொண்டிருந்தான்.

'பாரு என்றாவது ஒருநாள் குருவின் அனுமதி பெற்று உன்னை மணக்க வேண்டும் என்று இருந்தேன். ஆனுல் எப்போது சாஸ்திரிகள் தன் பிள்ளையைவிட மேலாகக் கருதி என்னைத் தகனக் கர்மா செய்யச் சொன்னுர்களோ, அன்றே அவருக்கு நான் புத்திரனுகி விட்டேன். அவருக்குப் புதல்வன் உனக்கு சகோதரன். சுவாமிகளிடம் சொல்லி உனக்கு நல்ல வரனைத் தேர்ந்தெடுத்து உனக்குத் திருமணம் முடிப்பது இந்தச் சகோதரனின் கடமை.'–அவன் அவளது கைகளைப் பற்றிக் கொண்டு தழுதழுத்தான். நீலக் கண்கள் நீர் வடித்தன.

அப்பா.... 'அப்பா' என்று முதன் முதலாகப் பாரு 'ஹோ' என்று அழுதாள்.

அப்பாவுடன் அக்கினி அணைந்து விடவில்லை. இன்று அவன் நெஞ்சில் தழல் வீசிற்று.

8. சுதந்திரத்தைப் பறிக்கும் தாம்பத்யம்!

சந்திரசூடனின் எழுத்தை நகல் எடுத்துக் கொடுக்கும் பொறுப்பைக் கீழ் வீட்டுப் பார்வதி ஏற்றிருந்தாள். ஒரு புகழ் பெற்ற எழுத்தாளருக்கு உதவி புரிவதில் அவளுக்கு மிகவும் உற்சாகம். அவள் அவருடைய பரம ரசிகை....

அன்று ஒரு நாவலின் இரண்டு அத்தியாயங்களை நகல் எடுத்து அதை அவருடைய அறையில் கொண்டுபோய் வைக்கச் சென்றாள். சந்திரசூடன் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றிருந்தார். அவருடைய அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்தாள். அவருக்குப் பணிவிடை செய்வதில் அவளுக்குமிகுந்த ஆர்வம். அவளைப் பொறுத்தவரை அவர் ஒரு பிரும்மா. இலக்கியப் படைப்புத்தொழில் புரிபவர். பிரும்மாவின் ஒர்க் ஷாப்பைப் பெருக்கிச் சுத்தமாக வைத்திருப்பதில் அவள் மிகுந்த அக்கறை காட்டினாள்.

அறையைப் பெருக்கிவிட்டு அலமாரி மீதிருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள். அது சந்திரசூடனின் டைரி. அதைப் பார்த்ததும் படிக்க வேண்டுமென்னும் ஆவல் தூண்டியது.

ஒருநாள் அவள், ''உங்கள் டைரிகளை இப்படி வெளியே போட்டிருக்கிறீர்களே! யாராவது பார்த்துவிட்டால்?'' என்றபோது, ''மறைக்கும்படியாக ஒன்றும் இல்லை. யார் வேண்டுமானாலும் படிக்கலாம்'' என்றார்.

சந்திரசூடனின் அனுமதி இருக்கிறது. மற்றவருடைய அந்தரங்கங்களைத் தெரிந்து கொள்வதில்தான் எவ்வளவு ஆசை இருக்கிறது!

கையில் எடுத்த நோட்டைப் புரட்டினாள். முதல் பக்கத்திலேயே சுவாரஸ்யம் தட்டியது. சந்திரசூடனின் அனுமதிதான் இருக்கிறதே என்ற தைரியத்தில் நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினாள்.

வீட்டிற்குள் சோபாவில் சாய்ந்தபடி படிக்கத் தொடங்கினாள். அருகே குழந்தை சாரதா, ஒரு பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். டைரியைப் படிக்கத் தொடங்கியவள் அதிலேயே மூழ்கிவிட்டாள்.

* * * * *

அவர் எழுதியிருந்தார் —

என்னுடைய தன்மை எனக்கே விசித்திரமாயிருக்கிறது. எதைப் படித்தாலும், எதைக் கேட்டாலும்,கொஞ்சநேரத்திலேயேபோதும் என்றாகிவிடுகிறது. எதுவும் புதுமையாகத் தோன்றுவதில்லை. ஏற்கனவே எனக்குத் தெரிந்த விஷயமாகவே இருக்கிறது! ஓ! இது எவ்வளவு பெரிய ஏமாற்றம். இதனால் எதையும் புதுமையாக எண்ணி வியந்து என்னால் போற்றி அனுபவிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், சிறு பிராயத்திலிருந்தே கண்டதை எல்லாம் படித்துக் கொண்டும், சிந்தித்துக் கொண்டும் இருந்ததுதானோ என்னவோ. ஒருவேளை, முந்திய ஜென்மத்தில் நான் அறிந்துபெற்ற அனுபவங்களெல்லாம் இந்தப் பிறவியில் மூளையில் எங்கோ ஓர் ஆழத்தில் பதுங்கிக் கிடக்கின்றனவோ?

இந்த மாதிரியான ஏமாற்றம் எனக்கு அறிவுத்துறையில் மட்டுந்தான் என்றில்லை. காதல் விஷயத்தில்கூடத்தான். இப்போது இந்திராணி என்னை வசப்படுத்திவிட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்கிறாள். என் மனம் சலித்துக் கொள்கிறதே! இவள் என்ன புதிதாய்த் தந்துவிடப் போகிறாள் என்னும் அலட்சியந்தான். உண்மையில் இவள் ஓர் ஆதாயத்திற்காக என்னிடம் குழைவதுதான் என் சலிப்பிற்குக் காரணம். நான் பீஷ்மாச்சாரி அல்ல, பெண் வாடையே கூடாது என்பதற்கு. ஆனால் இந்திராணியின் அணுகுமுறைதான் என்னுள் எதிர்ப்பை உண்டாக்கிவிட்டது.

அவளுக்கு வேண்டியது ஊர்வசி பரிசு. அதற்கு நான் சிபார்சு செய்ய வேண்டுமாம். ஓ! அதற்காக அவள் என்னைக் கவர எடுத்துக் கொள்ளும் முயற்சிகள்தாம் எத்தனை!

சில வேளைகளில் இந்திராணியுடனிருக்கும்போது அவளுடைய கவர்ச்சியில் என் மனம் ஈடுபடுகிறது. ஆனால் மறுகணம் என்னுள் எதிர்ப்புத் தோன்றிவிடுகிறது. என் மீது ஆசை கொண்டு என்னில் ஈடுபட வேண்டும் என்னும் காதல் உணர்வில் அல்லாமல், என்னிடமிருந்து எதிர்பார்க்கும் சலுகைக்காகச் சரசமாட எண்ணுவது அருவருப்பாயிருக்கிறது. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அதற்குக் கூலியாகத் தருவதா காதல் இன்பம்?

அவளுடைய ஒரே ஏமாற்றம், இவ்வளவு சக்தி வாய்ந்த தன்னுடைய கவர்ச்சியும் செல்வாக்கும் என்னிடம் செல்லுபடியாக

உணர்வுகள் உறங்குவதில்லை



ர.சு.நல்லபெருமாள்

வில்லையே என்பதுதான். அவள் ஒன்றை மறந்துவிட்டாள். மற்றவர்களைப்போல்சந்திர சூடன் இல்லை; இவன் எதையும் புலன் வழியாக மட்டுமல்லாமல் அறிவுபூர்வமாகவும் ரசிக்கக் கூடியவன் என்பதை அவள் மறந்து விட்டாள்.

சந்திரசூடனை அவள் மிகுந்த வேட்கையுடன் எடுத்துக்கொள்ளவிரும்பினால்கிடைப்பான். ஆனால் அவனுடைய ஸ்பார்சை எண்ணி அல்லவா தன்னை கொடுக்க முனைகிறாள்.

அவளுடைய உடல் கவர்ச்சிக்காகப் பல கோடீஸ்வரர்கள் தவம் கிடக்கும்போது, அவளுடைய கவர்ச்சி என்னிடம் மட்டும் தோல்வியடைவதை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எவ்வளவு அருவருப்பான காரியம். மனம் ஒட்டாத வெறும் உடல் விவகாரம்.

* * * * *

சந்திரசூடனின் டைரியில் மூழ்கியிருந்த பார்வதி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். வாசலில் சந்திரசூடன், குழந்தை சாரதாவைத் தூக்கிக் கொண்டு விரைந்து வந்து கொண்டிருந்தார்.

"என்ன இது? குழந்தை வாசலுக்கு வந்ததுகூடத் தெரியாமல் என்ன செய்கிறாய்?" என்றவாறே வீட்டினுள் வந்தார்.

பார்வதி, படித்துக் கொண்டிருந்த டைரியைச் சட்டென்று மேஜைக்குள் போட்டு விட்டு, பரபரப்புடன் எழுந்தாள்.

"வாசலுக்கு எப்போது போனாள்? என் பக்கத்தில்தான் விளையாடிக் கொண்டிருந்தாள்" என்றவாறே குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"தெருவிற்கே வந்துவிட்டாள். சைக்கிளில் அடிபட இருந்தாள். நல்லவேளை மயிரிழையில் பிழைத்தாள். குழந்தையைக் கூடக் கவனிக்காமல் அப்படி என்ன ரசனையான புத்தகம்?" என்று கேட்டார் சந்திரசூடன்.

அவள் மேஜைக்குள்ளிருந்து நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்காட்டி, "பிரும்மாவின் டைரி" என்று சிரித்தாள்.

"ஓ! அதை ஒளிப்பானேன்?"

"உங்களிடம் கேளாமல் எடுத்து வந்தேன்."

"நான் அவற்றையெல்லாம் அந்தரங்கமானவை என்றோ, இரகசியமானவை என்றோ கருதவே இல்லை. எல்லாமே என் வாழ்க்கையின் சாதாரண அம்சங்கள். அவ்வளவுதான்."

"நான் ஒன்று கேட்கட்டுமா?"

"கேளேன்."

"நீங்கள் ஏன் கல்யாணம்செய்துகொள்ளவில்லை?"

இதைக் கேட்டு. சந்திரசூடன் சிரித்தார். "ஏன் மீசை வைத்துக்கொள்ளவில்லை என்று கேட்கிற மாதிரிதான் இந்தக் கேள்வி" என்றார்.

"தேவலோக பிரும்மாவிற்கு ஒரு சரஸ்வதி. இலக்கிய பிரும்மாவிற்கு ஒரு சரஸ்வதி வேண்டாமா?"

"எனக்கு வேண்டாம்."

"காரணம் இருக்க வேண்டுமே? வாழ்க்கையில் மனைவி ஒருத்தி அவசியம் என்று நீங்கள் கருதவில்லையா?" என்றுகேட்டுவிட்டு அவரைக் கூர்ந்து பார்த்தாள் பார்வதி.

சந்திரசூடன் சொன்னார், "அவசியமா இல்லையா என்பது அவனவனுடைய எண்ணத்தைப் பொறுத்தது" என்று.

"எண்ணம் என்பது ஒரு நிழல் மாதிரிதான். நிழல் பலவிதமாக மாறி மாறி சூழ்நிலைக்கேற்றவாறு தோன்றுவதுபோல்தான் எண்ணங்களும் மாறலாம்" என்றாள் பார்வதி.

"சார்! லாட்டரிச் சீட்டு வாங்கிக்குங்க. நாளைக்கு நீங்க லட்சாதிபதி!"

"வேண்டாம். நீயே வெச்சுக்கிட்டு நாளைக்கு நீயே லட்சாதிபதி ஆயிடு!"

—உதய்



"என் எண்ணங்கள் மாறினால்கூட என்னைப் பொறுத்தவரை நான் திருமணத்திற்கு லாயக்கில்லாதவன். மனைவியைப் பராமரிக்கத் தெரியாது."

இதைக் கேட்டுப்பார்வதி திகைப்புடன், "ஓ.... நான் நம்ப முடியாது. உங்கள் டைரியில் இப்போதுதானே படித்தேன். உங்கள் சிநேகிதிகளைப் பற்றி" என்றாள்.

சந்திரசூடன் கலகலவென்று சிரித்தார். "சிநேகிதி வேறு, மனைவி வேறு. மனைவி என்று வரும்போது எனக்குப் பல பொறுப்புக்கள் வந்துவிடும். அந்தப்பொறுப்புக்களில் சிக்கி என்னுடைய இயல்பை இழக்க எனக்கு இஷ்டமில்லை" என்றார்.

குழந்தை பார்வதியின் இடுப்பிலிருந்து இறங்கிச் சந்திரசூடனிடம்வந்தாள். அவளைத் தூக்கி வைத்துக் கொண்டார்.

"மனைவி வாய்த்தால் இப்படி ஒரு தங்க விக்ரகம் கிடைக்கும். கொஞ்சிக் கொண்டேயிருக்கலாம்" என்றார்.

"இம்மாதிரிக் குழந்தைக்காகவாவது திருமணம் செய்து கொள்ளலாமே" என்றாள் பார்வதி.

"இது குழந்தையாக இருக்கும்வரைதானே கொஞ்ச முடியும். வளர்ந்துவிட்டால்பிரச்னைகள் வந்துவிடும். நான் படு சோம்பேறி. எனக்கு மனைவியாக வாய்க்கிறவளின் ஆசைகளையெல்லாம் திருப்திப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகள் வளர்ந்து பல பிரச்னைகளைக் கிளப்பும். எல்லாம் என்னுடைய சிந்தனையை முடக்கி, சுதந்திரத்தைப் பறித்து, பிரச்னைகளுக்குள் ஆழ்த்தி விடும். என்னுடைய இயல்பிற்குத் திருமணம் லாயக்கில்லை. சோம்பலைக்கூட ரசித்து அனுபவிக்கிறேன். இந்தச் சுதந்திரமான ஆனந்தத்தை இழக்கத் தயாராயில்லை."

"உங்களைப் புரிந்து கொண்டு உங்களுக்கு உதவியாக இருக்கும்படியான மனைவி வாய்க்கலாமே."

"அப்படி வாய்க்கும் வாய்ப்பில்லை. பெண்களுக்கு அற்ப ஆசைகள் ஏராளமாக உண்டு. பெண்களின் இயல்பு அது. அவற்றையெல்லாம் தீர்த்து வைக்காதவன், மகாப் பெரிய மேதையாக இருந்தாலும் சரிதான்; அவளைப் பொறுத்தவரை அவன் அற்பமானவனே. கடவுள் என்னை ஒருத்திக்கு ஒரு சாதாரணக் கணவனாக இருப்பதற்காகப் படைக்கவில்லை" என்று கூறி, சிரித்தார் சந்திரசூடன். பிறகு, "என்னுடைய இந்தத் தன்மையை உணரும் எந்தப் பெண்ணும் என்னை மணக்கச் சம்மதிக்கவும் மாட்டாள்" என்றார்.

பார்வதி பிரமிப்புடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் தொடர்ந்து சொன்னார்: "ஒரு ஆணும் பெண்ணும் நண்பர்களாயிருப்பதில் உள்ள உற்சாகமும், உள்ளார்ந்த ஈடுபாடும் தாம்பத்யத்தில் இருக்க முடியாது. நட்பிற்குள்ள உயர்ந்த தன்மைகள் எதுவுமே தாம்பத்திய உறவில் இல்லை. நான் ஒரு நண்பனாகத்தான் இருக்க விரும்புகிறேனே தவிர, ஒரு கணவனாக இல்லை."


மிகப் புதியதான காஸ்கட்
ரிலீஸ் ஸிஸ்டம்
MAJESTIC
இந்தியாவின்
100% பாதுகாப்பான
பிரஷர் குக்கர்ரை
உருவாக்குகிறது
உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.
உணவின் மணமும், ருசியும் மாறாமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாதுகாக்கப்படுகிறது.
3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் ஸில்வரில் கிடைக்கின்றன.
MAJESTIC
PRESSURE COOKER
G.R. System
எங்கள் மற்றைய பிரபலமான
விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.
IS: 1660
ISI
13000
MAJESTIC
MAJESTIC
ரைஸ் குக்கர், மில்க் பாய்லர் இட்லி குக்கர் பிரஷர் பான்
DISTRIBUTORS FOR TAMILNADU
Naik BROTHERS
56, Purushwalkam High Road, 1st floor, MADRAS-7 Phone: 662965 661034

"நண்பனாகவும் கணவனாகவும் ஒரே சமயத்தில் இருக்க முடியாதா என்ன?" என்று பார்வதி கேட்டாள்.

"அப்படி நட்புடன் தாம்பத்யத்தை அனுசரிக்கும் பெண் எவளும் இல்லை. எதற்காக நான் ஒரு பொறிக்குள் வலியப்போய் மாட்டிக் கொள்ள வேண்டும்? இப்போது சுதந்திரமாக,ஆனந்தமாகஇருக்கிறேன்.இவற்றை நான் எதற்காக இழக்க வேண்டும். என்னைத் துன்பப்படுத்திக் கொள்ளாமல் பாதுகாப்பதும் என் கடமைதானே?" திரும்பியவர், ஸ்டூலின் மீதிருந்த வெற்றிலைக் கட்டைப் பார்த்து, "எனக்குத்தானே இது?" என்று ஆர்வத்துடன் கேட்டார்.

"உங்களுக்குத்தான் வாங்கி வந்தேன். கொடுக்க மறந்து போய்ப்பேசிக் கொண்டிருக்கிறேன்" என்று சிரித்தாள் பார்வதி.

அவளுடைய சிரிப்பை ரசித்தவாறே வெற்றிலைக் கட்டை எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றார் சந்திரசூடன். பார்வதிக்கு அவர் தனியாகத் துணையில்லாமலிருப்பது ஒரு குறைபோல் தோன்றியது. ஆனால் வாழ்க்கையைப் பற்றிய விஷயத்தில் அவர் தெளிவான முடிவெடுத்திருக்கும்போது அதை ஒரு குறை என்று மற்றவர்கள் கருதுவதில் அர்த்தமில்லையே.

அவர் அந்த வளவில் வாடகைக்கு வீடு கேட்டு வந்த சம்பவத்தை எண்ணிப் பார்த்தாள் —

அவர் வந்தபோது பார்வதி மாடிப் பகுதியைக் காட்டினாள். வாடகையைப் பற்றி விசாரித்தார். வாடகையை அவள் சொன்னதும் வியப்பினால் புருவத்தை உயர்த்தினார் உதட்டைப் பிதுக்கினார்.

"எல்லா வசதிகளும் மேலேயே இருக்கின்றன. பெரிய அடுக்களை. நல்ல வசதி" என்றாள் பார்வதி.

சந்திரசூடன் சிரித்தார். "அடுக்களைக்காக நான் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா?" என்றார்.

பார்வதி திடுக்கிட்டவளாய், "ஓ.....! நீங்கள் மணமாகாதவரா?" என்றாள்.

"ஏன்? அதிசயப்பட என்ன இருக்கிறது?"

"இல்லை.... குடித்தனமாக இருப்பவர்களுக்கு மட்டுந்தான் வாடகைக்குக் கொடுப்போம்" என்றாள் பார்வதி.

சந்திரசூடனின் கண்களில் கோபம் தெரிந்தது.

"நானும் குடியிருக்கத்தான் கேட்கிறேன். கடை போடுவதற்கல்ல" என்றார். குரலில் கடுமை தொனித்தது.

"நான் சொல்ல வந்தது, குடும்பத்தோடு இருப்பவர்களுக்கு மட்டுந்தான்....."

"குடும்பத்தோடு இருப்பவன்தான் யோக்கியன், மற்றவனெல்லாம் அயோக்கியன் என்று அர்த்தமா?"

"சேச்சே, நான் அப்படிக் கூறவில்லை" என்றாள் பார்வதி பதற்றத்துடன். "பொதுவாக குடும்பத்தோடு இருப்பவர்களுக்குத்தான் இந்த இடம் வசதியாக இருக்கும். அடுக்களை இருக்கிறது" என்றாள்.

சந்திரசூடன் சிரித்தபடியே, "அடுக்களையில் நான் சமைத்துக்கொள்ளக்கூடாதா என்ன? இங்கே அடுக்களை இருக்கிறது என்பதற்காக நான் எந்தப் பெண்ணைப் போய்த் தேடிப் பிடிப்பது?" என்றார்.

பார்வதி 'களுக்' கென்று சிரித்துவிட்டாள். அந்தச் சிரிப்பில் சந்திரசூடனின் கண்களில் தெரிந்த கோபம் மறைந்துவிட்டது. சூழ்நிலையின் இறுக்கம் குறைந்தது.

"நீங்கள் எங்கு வேலை பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள். பத்திரிகையின் பெயரைச் சொன்னார்.

"ஓ....! உங்களுக்கு சந்திரசூடனைத் தெரிந்திருக்குமே? அதில் எழுதுகிறாரே" என்றாள்.

"தெரியுமே.அவரிடமிருந்துகடிதம்வாங்கி வந்தால் வாடகைக்குத் தருவீர்களா?"

பார்வதி புன்னகைத்தபடியே, "ஓ! அவர் பெரிய எழுத்தாளராச்சே. அவர் சிபார்சு செய்தால் மறுக்க முடியுமா?" என்றாள்.

"நீங்கள் அவருடைய ரசிகையா?"

"உம். பரம ரசிகை. அவருடைய எழுத்தில் எனக்கு மிகுந்த ஈடுபாடு" என்றாள் பார்வதி உற்சாகத்துடன்.

சந்திரசூடன் தம் பையிலிருந்து அறிமுகக் கார்டை எடுத்து அவளிடம் நீட்டினார். அதைப் பார்த்துவிட்டுப் பார்வதி அடைந்த பரபரப்புக்கு அளவே இல்லை. இப்போது நினைத்துப் பார்க்கும்போதுகூட சிரிப்புத் தான் வருகிறது —

இன்னும் இவருடைய அடுக்களை, பெண் இல்லாமல் சாத்தியேதான் கிடக்கிறது என்று எண்ணியபோது அவளுக்கு அவர் மீது இரக்கம் தோன்றியது.

ஒருத்தி, இவருக்காக வீட்டிலிருந்து இவருக்கு வேண்டியவைகளை அக்கறையோடு கவனித்து வந்தால், இவருடைய எழுத்துப் பணி இன்னும் சிறப்படையுமே. பாவம், ஒற்றைப் பறவையாகத் திரிகிறார்....

பார்வதிக்குச் சிரிப்பு வந்தது. இவரே இது பற்றி அக்கறையோ கவலையோ படாத போது தனக்கு ஏன் இந்த வீண் எண்ணம் என்று எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

(தொடரும்)



"நான் உன்னைப் பெண் பார்க்க வந்தபோது எனக்கு மட்டும் சர்க்கரை போடாத காப்பி தந்தாயே, ஏன்?"

"நான் எப்படி சமைச்சாலும் நாக்கைக் கட்டுப்படுத்தக் கூடியவர்தானா என்று டெஸ்ட் வைச்சேன். ஜெயிச்சுட்டீங்க!"

வேத நூல்கள்

தேவநாகர அக்ஷரத்தில்
ரிக்வேத ஸம்ஹிதா —
(10 மண்டலங்கள்)
விலை தபால்செலவு உள்பட ரூ. 160/-

ஸாம வேத அஷ்டப்ராம்மணம்
(3 பாகங்கள்)
விலை தபால் செலவு உள்பட ரூ. 210/-

1. முதல் பாகம் — A. தாண்டியம், B. ஷட்விம்சம், C. திருவிசநல்லூர் மஹா மஹோபாத்யாய ஸ்ரீ ராம ஸுப்பா சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத உத்கர்ஷ விமர்சனம், D. ஸாமவேதஸ்வர மாத்ராதி தத்வ விலாஸம், E. மன்னார்குடி மஹா மஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத ஸ்வர விமர்சம்.

2. இரண்டாம் பாகம் — A. ஸாமவிதான பிராம்மணம், B. ஆர்ஷேய பிராம்மணம், C. ஸாமஸ்வர விமர்சம், D. பாணினீய சிக்ஷா, E. நாரத சிக்ஷா, F. லோமச சிக்ஷா, G. கௌதம சிக்ஷா, H. ஸாமகான சாஸ்த்ரீய ஸம்ப்ரதாயக்ரமம்.

3. மூன்றாம் பாகம் — A. தேவதாத்யாயம், B. ஸம்ஹிதோபநிஷத், C. சாந்தோக்ய மந்த்ரோபநிஷத், D. வம்சப்ராம்மணம், E. உத்ஸர்ஜன கர்ம, தேவதர்ப்பணம், F. காம்ய ப்ரயோகங்கள்.

க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் பிரும்மஸ்ரீ முத்து தீக்ஷிதர் அவர்களால் இயற்றப்பட்ட ப்ரயோக க்ரந்தங்களின் மறுபதிப்புகள்.

I. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் — விலை தபால் செலவு உள்பட ரூ. 65/—
II. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை தபால் செலவு உள்பட ரூ. 60/—
III. போதாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை தபால் செலவு உள்பட ரூ. 70/— பூர்வாபர காரிகையுடன் கூடியது.


ஸ்ரீ V. S. V. குருஸ்வாமி சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட

1. நளோதந்தம் —
விலை தபால் செலவு உள்பட ரூ. 7/—

குறிப்பு: ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் 2. கல்ப மஞ்சரி (அச்சில் உள்ளது).

மேலும் விபரங்களுக்கு:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
கும்பகோணம்—612 001.



அருள்மிகு கர்ப்பரக்ஷாம்பிகா ஸமேத முல்லைவன நாதர் ஆலயம்
திருக்கருகாவூர்
மஹா கும்பாபிஷேகம்

அருள்மிகு கர்ப்பரக்ஷாம்பிகா ஸமேத முல்லைவனநாதர் ஆலயம் — திருக்கருகாவூர் மஹா கும்பாபிஷேகம்.

ஸ்ரீ காஞ்சி முனிவர் பொன்விழாக் குழுவினரால் திருப்பணி செய்யப்பட்டு இக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் குரோதன ஆண்டு ஐப்பசி மீ 11ம் உ ஞாயிற்றுக்கிழமை (27.10.85) காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. யாவரும் கலந்து கொண்டு பொருளுதவி செய்து ஸ்ரீ கர்ப்பரக்ஷையின் அருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
திருப்பணி & கும்பாபிஷேகம் கமிட்டியார்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:

பொருளாளர்,
இறைவன் நற்பணி மன்றம்,
காஞ்சி முனிவர் பொன்விழா உபகுழு:
திருக்கருகாவூர் (P.O.),
PIN CODE 614 302.
தஞ்சை ஜில்லா.

பாலகுமாரனுக்குப் பரிசாமே!




* பொன்மொழி...



* கவர்ச்சி...



* அணுகுமுறை...



* பரிசு — வாழ்த்து!

*** த. சத்தியநாராயணன், அயன்புரம்.**

? சாரிகா வயிற்றில் வளர்வது தன் குழந்தைதான் என கமல் ஒப்புக் கொண்டது துணிச்சலா? அல்லது இயற்கையானதா?

! குழந்தை வளர்வது இயற்கை; ஒப்புக் கொண்டது துணிச்சல்!

*** ஏ. எம். அஷ்ரப் கமால்.**

? அ. வ. தே. யார்?

! கே. எ. பு.!

*** என். செந்தில்குமார், மயிலாடுதுறை.**

? எனக்கும் தலைவர் ஆக ஆசைதான் என்று வீரப்பன் குறிப்பிட்டிருப்பது பற்றி?

! இதுவரை இரண்டு பேர் வெளிப்படையாகச் சொல்லி விட்டார்கள். மற்றவர்கள் மனத்துக்குள் வைத்திருக்கிறார்கள்.

*** எஸ். ஆமரான் பிரபு, திருச்சி.**

? நடிகை அம்பிகா அரசியலில் குதிக்கப் போகிறாராமே?

! ஹய்யா! வடசென்னைத் தொகுதியும் கவர்ச்சி பெற்று விடும்!

*** எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி.**

? உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள்வது; பொய்யைச் சொல்லி மாட்டிக் கொள்வது — இரண்டில் எது உத்தமம்?

! மாட்டிக்கொள்ளத்தயாராகிவிட்ட பிறகு பொய் எதற்கு? உண்மையைக் கூறித்தான் மாட்டிக் கொள்ளுங்களேன்!

*** தி. ஜம்புநாதன், பூவாளூர்.**

? தற்போதுள்ள நிலையில் பஞ்சாபில் தேர்தல் நடத்துவது சரியா?

! மழைக்குப் பயந்து வீட்டை விட்டு வெளியே வராமலிருக்க முடியுமா? பாதுகாப்புக் குடையோடு ஜனநாயகம், தேர்தலைச் சந்திக்க வெளியே வருவது சரியே.

*** எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

? அந்துலே மீது எந்தக் குற்றமும் இல்லை என்று ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறதே?

! எந்தக் குற்றமும் இல்லை என்று தீர்ப்பு வழங்கப்படவில்லை. அறக்கட்டளையை முதல்வர் அந்துலே ஆரம்பித்ததில் தவறில்லை என்ற அளவுக்குத்தான் அந்தத் தீர்ப்பு. அறக்கட்டளைக்கு எந்தவிதமாகப் பணம் சேர்க்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கள் இன்னும் விசாரணையில்தான் உள்ளன.

*** பாலரவீந்திரன், பாபநாசம்.**

? வலம்புரி ஜானின் "நான் கழுதை ஆன போது" படித்தீர்களா?


! இந்தக் கழுதை கத்தியதைவிட உதைத்தது அதிகம். ரொம்பப் பேர் காயங்களைத் தடவிக் கொண்டிருக்கிறார்கள்.

*** அ. செல்வராஜ், கரூர்.**

? இலங்கைப் பிரச்னையில் கருணாநிதியின் அணுகுமுறை சரியா?

! முதல் கட்டம்: "பங்களாதேஷுக்குப் படை அனுப்பவில்லையா? அப்படி இலங்கைக்கு அனுப்புங்கள்!" இரண்டாம் கட்டம்:


* துணிவு.





* புரிந்து பேசுகிறாரா?

* ஆசை.



நீங்கள் கேட்டவை - தராசு

படு குஷியாக இருக்கிறீர்களா?



* தீர்ப்பு...



* சரியான கதை!...

"சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றே பிரச்னைக்குத் தீர்வு; ஆனால் இப்படி நான் கூறுவதால் படை அனுப்புங்கள் என்று சொன்னதாக அர்த்தமில்லை." மூன்றாவது கட்டம்: "சுதந்திரத் தமிழ் ஈழம் ஒன்றே பிரச்னைக்குத் தீர்வு; ஆனால் ஈழப் போராளிகளும் மிதவாதிகளும் ஒருங்கிணைந்து எந்த உடன்பாட்டுக்குச் சம்மதித்தாலும் நாங்களும் அதை ஏற்போம்!" இப்படி படிப்படியாக இறங்கி வந்து கொண்டிருக்கிறார் கருணாநிதி. ஒரு கார்டூன் தோன்றுகிறது மனத்தில்: ஈழம் பற்றி எரிகிறது. கருணாநிதி ஒரு கையில் தண்ணீர் பக்கெட்டும் இன்னொரு கரத்தில் பெட்ரோல் டின்னும் ஏந்தி ஓட்டமாக ஓடி வருகிறார். பெட்ரோல் டின் — சுதந்திரத் தமிழ் ஈழம். தண்ணீர் — உடன்பாட்டுக்குச் சம்மதம்.

ஈழப் போராளிகளுக்கு அவர் ஆரம்பத்திலிருந்து சொல்லாலும் செயலாலும் கொடுத்து வந்துள்ள, நிதானம் தவறிய பேராதரவும் அதனால் அவர்கள் அடைந்த அதீத நம்பிக்கையும் இன்று யதார்த்தத்தில் பார்க்கும் போது பெருமளவு ஏமாற்றங்களாக முடிந்திருக்கின்றன. கலைஞரின் அணுகுமுறை ஆரம்பத்திலிருந்தே வேறு மாதிரி இருந்திருந்தால்... ஹூம்... அதைப் பற்றி இப்போது எண்ணி என்ன பயன்?

* சா. ரமேஷ்பாபு, லால்குடி.

? அர்ஜுன் தாஸும் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டாரே?

! "Eye for an eye will make the world blind" — மகாத்மா காந்தி.

* எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்.

? ஜெயலலிதா மீண்டும் கொ. ப. செ. ஆனது யாருக்குக் குட்டு?

! எம். ஜி. ஆர். தமக்குத் தாமே வைத்துக் கொண்ட குட்டு.

* வலங்கை ஜி. ராஜசேகர், வளையமாபுரம்.

? புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் தொழில் புரட்சி, வெண்மைப் புரட்சி, பசுமைப்புரட்சியெல்லாம் ஏற்பட்டுள்ளதாக சுலோசனா சம்பத் கூறியிருப்பது பற்றி...?

! "நாம் எங்கே போகிறோம் என்பது குறைந்தபட்சம் நமக்காவது தெரிந்திருக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார் ஈ.வி.கே. சம்பத். தாம் என்ன சொல்கிறோம் என்பது குறைந்தபட்சம் சுலோசனா சம்பத் அவர்களுக்காவது புரிந்திருந்தால், சந்தோஷம்தான்!


* ரகுவீர், செங்கல்பட்டு.

? பாலகுமாரனுக்குப் பரிசு கிடைத்து விட்டதே, அதுவும் கல்கியில் வெளியான நாவலுக்கு? படு குஷியாக இருக்கிறீர்களா?

! கதை எழுத ஆரம்பிப்பதற்கு முன் கல்கி ஆசிரியரை ஒரு முறை சந்திக்க பாலகுமாரன் வந்தபோது, ராஜேந்திரன் கேட்டார்: "ஆர்தர் ஹெய்லி போன்றவர்கள் எவ்வளவு ஆராய்ச்சி மனப்பான்மையுடன் தாங்கள் எடுத்துக் கொண்ட நிலைக்களனையும் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போரையும் கூர்ந்து கவனித்து எழுதுகிறார்கள். அப்படித் தமிழில் வர வேண்டாமா?" "செய்கிறேன்" என்றார் பாலகுமாரன். "என் உத்யோகம் தொடர்பாக லாரி ஓட்டுபவர்கள், லாரி சொந்தக்காரர்களுடன் நிறையப் பேசிப் பழக வேண்டியிருக்கிறது. அவர்களை வைத்து எழுதுகிறேன். அந்த வட்டாரத்தை, அவர்கள் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறேன்." சொன்னதைச் செய்து காட்டியது மட்டும் பாலகுமாரனுக்குப் பெருமையல்ல. அதை விட ஒரு படி மேலே சென்றார். கதாநாயகனைக் கவியாக்கினார். தமது நாவலையே காவியமாக்கினார்! "இரும்புக் குதிரைகள்" என்ற தலைப்பே கவி நயத்துடன் அமைந்தது. சாதாரணமாக 26 வாரங்களுக்கு மேல் சமூகத் தொடர் கதைகள் எழுதப்படுவதில்லை. 15 அத்தியாயங்கள் வளர்ந்த பிறகு, "அஸ்திவாரத்தைப் பலமாகப் போட்டு விட்டேனே" என்றார் பாலகுமாரன். இதற்குள் அதன் தரத்தை மதிப்பிட்டு விட்ட கல்கி ஆசிரியர் குழு, "பாதகமில்லை, எழுதுங்கள்; முடிகிற போது முடியட்டும்" என்றது — வியாபார நோக்கை மட்டும் முக்கியமாகக் கொள்ளாமல். கதை நாற்பது வாரங்களுக்கும் மேல் நீண்டது. நாவலின் மூன்றிலொரு பாகத்தைப் படித்ததுமே நாங்கள் எடை போட்டது சரி என்று முழு நாவலைப் படித்து விட்டு எம். ஏ. வி. அறக்கட்டளையின் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். இப்போது சொல்லுங்கள், படு குஷியாக இருக்காதா எங்களுக்கு?

---

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
அ. செல்வராஜ்,
அருமநாயகம் இல்லம்,
அங்காளம்மன் கோயில் வடக்குத் தெரு,
சி. ஆ. கோயில் சாலை,
கரூர்—639 001.



உங்கள் அபிமான நிறுவனமான ''திருப்பதி எஸ்டேட்ஸ்''
பெருமையுடன் அறிமுகப்படுத்தும் புதுமனைப் பிரிவு

ஸ்ரீ திரிபுரசுந்தரி நகர்

ஸ்ரீ பெரும்பூதூர் டவுனிலேயே

ஸ்ரீ பெரும்பூதூர் - தாம்பரம் பேருந்து மார்க்கத்தில்
மாநில நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளது

வரலாறு காணாத புரட்சி! சரித்திரம் கண்டிராத சாதனை!!

கான்கிரீட் காணிக்கற்கள்; கான்கிரீட் மனை இலக்கக் கற்கள்
உபயோகப்படுத்தி மனைகளை என்றும் தேட அவசியம் இல்லாத வகையில்
அமைக்கப்பட்ட மனைப்பிரிவு.

மனைக்கு இரண்டு தென்னங்கன்றுகள்!

அவை பலன் தரும் வரை இலவச பராமரிப்பு!

ஐந்து ஆண்டுகளுக்கு மனைகளை காத்திட உத்திரவாதம்!

எந்த அதிகப்படி செலவும் கிடையாது!

மனைப்பிரிவிற்கு ஒரு பொதுக்கிணறு!

இப்படி அனைத்து சிறப்பு அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற
இந்த லே-அவுட் அரசாங்க அங்கீகாரம் பெற்றது.

DTP. APPROVAL NO : CSAR/DTCP (M) 85-51/LP. 27

பத்திரம் சுத்தமானது என்பதற்கு அத்தாட்சியாக
அரசாங்க வழக்கறிஞரின் ஒப்புதலும் பெற்றது.

மனை ஒன்றின் (2400 சதுர அடிகள்) விலை ரூபாய் 7,560/-

சுலப தவணைமுறை திட்டம்! முன்பணம் ரூபாய் 2,520/-

மீதியை 12 மாதங்களில் சுலப தவணைகளாக செலுத்தலாம்.

15.10.85 க்குள் மனை பதிவு செய்பவர்களுக்கு

எங்கள் அன்பளிப்பு : சூட்கேஸ் இனாம்!

மனைகளைப் பார்வையிடவும், மற்ற விபரங்களுக்கும் நேரில் அணுகவும்

திருப்பதி எஸ்டேட்ஸ்

"ஸ்ரீ மீனாக்ஷி நிலையம்"
30, ஆற்காடு முதலியார் தெரு, (தெற்கு போக் ரோடு பக்கம்)
தியாகராயநகர், சென்னை-600 017 தொலைபேசி: 442564

நாய்களுக்குப் பயிற்சி கொடுப்பவர்கள், நாய்ப் பிரியர்கள் ஆகியோர் மட்டும் பார்ப்பதற்காக இந்தப் படம் போலும்! அவர்கள் கூட டிக்கெட் வாங்கிக் கொண்டு சுற்று வட்டார நண்பர்கள், உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கும் பாட்டி ஆகியவர்களைப் பார்த்துவிட்டு மளிகை சாமான் லிஸ்ட் கொடுத்துவிட்டு நிதானமாகப் பதினொன்றாவது ரீலின்போது தியேட்டரில் நுழைந்தால் போதும். அங்கிருந்துதான் ஆரம்பம் கொஞ்ச நஞ்ச சுவாரஸ்யமும்!

தமிழ் நன்றியாம்! அடக் கடவுளே! ஹிந்திப் படவுலகம் இந்த நிலைக்கா இறங்க வேண்டும்?

தேரி மெஹர் பானியான்



ஸ்ரீராகவேந்திரர்



விமரிசனத்திற்கு அப்பாற்பட்ட ஸ்ரீ ராகவேந்திரர் பாத கமலங்களுக்கு எங்கள் நமஸ்காரங்கள்.

செஞ்சுரி அடித்திருக்கும் ரஜினிக்கு வாழ்த்துக்கள்.

நூறாவது படம் — நூறில் ஒரு பாத்திரம்.

நிச்சயம் பெயர் சொல்லும்.

பட்டணத்து வாத்தியாரை காதலிக்கும் கிராமத்துப் பெண். முறைப் பையன் மோதல். இது கதை! நடுவில் கைக்குழந்தையுடன் சுலக்ஷணா.

கவுண்டமணி, எஸ்.எஸ். சந்திரன், செந்தில் என்று நகைச்சுவை பட்டாளம். சுவைதான் மைனஸ்.

ஷோபனாவிற்கு இரண்டாவது படம். அப்பிக் கொண்டிருக்கும் அரிதாரம் தான் பளிச்!

ஜனகராஜ் காமெடியன் கம் வில்லன். போதவில்லை.

பாண்டியனும் கதாநாயக அந்தஸ்திற்காக என்னவெல்லாமோ செய்து பார்க்கிறார். பாவம். எடுபட மாட்டேன் என்கிறதே.


மருதாணி என்ற தலைப்பை வைத்து என்னவோ உள்ளர்த்தம் இருக்கும் என்று நினைத்துப் போய் ஏமாந்தால் அதற்குப் படம் பிடித்தவர்கள் பொறுப்பா என்ன?

மருதாணி — கதாநாயகியின் பெயர்.

மருதாணி



பூவே பூச்சூட வா



பாட்டியம்மா பத்மினியைத் தேடி வரும் பேத்தி நதியா என்று ஒரு வித்தியாசமான ஆரம்பம்!

இத்தனை நாள் எங்கேயிருந்தாள் பேத்தி? இப்போது எதற்கு வந்திருக்கிறாள்? அதுதான் கதை!

நீங்கள் என்ன உசுப்பேற்றிவிட்டாலும் சரி, கதையைச் சொல்லப் போவதில்லை. அப்புறம் இந்தப் படத்தை நிச்சயம் பார்க்கப் போகிற உங்களுக்கு சுவாரஸ்யம் கெட்டுப் போகும். எங்கள் மேல் கோபம் வரும்.

அந்தப் பெண் நதியா புதுமுகமாம். காதில் பூ வைக்கிறார்கள். நூறு படங்களில் நடித்து முடித்த அனுபவம்! முக மூடியை மாட்டிக் கொண்டு எஸ். வி. சேகரை திடுக்கிட வைப்பதும் சரி, வாண்டுகளோடு வாண்டுகளாய் கொட்டமடிப்பதும் சரி, என்ன துள்ளல்! என்ன துள்ளல்! புதிதாய்ப் பிறந்த பசுங் கன்று துள்ளல். மாடர்ன் ட்ரெஸ்ஸும் பொருந்துகிறது. புடவை ப்ளவுஸும் பொருந்துகிறது. கதாநாயகி தேர்வு செய்தவர்களை மாலைபோட்டு, சிறப்புப் பட்டம் கொடுத்துப் பாராட்டலாம்.

பாட்டியம்மா — அடடே! அந்த நாள் பத்மினி! பின்னால் தும்முகிறவர்களை திட்டுவதிலும், பாசத்தை நெஞ்சு நிறையத் தேக்கிக் கொண்டு பேத்தியை கரித்துக் கொட்டுவதிலும் அப்புறம் பேத்தியை அழைத்துப்போய் சூட்கேஸ் சூட்கேஸாய் திறந்து காட்டி, 'இது நீ ரெண்டு வயசில வந்திருந்தா', 'இது நீ அஞ்சு வயசில வந்திருந்தா', 'இது நீ பதினெட்டு வயசில வந்திருந்தா' என்று பவுன், பட்டு, பாத்திரம் என்று பாச மழையாய்ப் பொழிவதிலும் ச். ச். ச். க்ளாஸ். ஸிம்ப்ளி க்ளாஸ்.

ஜெய்ஷங்கர், வி. கே. ஆர்., ரவீந்தர், எஸ். வி. சேகர் எல்லோருக்கும் கண்ணியமான பாத்திரங்கள். வெகு கண்ணியமாகச் செய்திருக்கிறார்கள்.

அந்த மூன்று வாண்டுகள். அவை என்ன போடு போடுகின்றன!

துள்ளல், ஆட்டம், பாட்டம் எல்லாம் இடைவேளை வரைக்கும்தான். அப்புறம் ஸீரியஸ் என்றால் ஸீரியஸ் அப்படி ஒரு ஸீரியஸ்.

பாட்டியும், பேத்தியும் பாசிப் பச்சைப் பட்டுப் புடவையுடன், அரக்குக் கரையுடன் தோட்டத்தில் நடப்பது, படகில் ஸல்வார் கம்மீஸ் சகிதம் பாட்டி பத்மினியும் பேத்தி நதியாவும் பயணம் செய்வது என்று அங்கங்கங்கே மின்னல்கள். காமிராக்காரர் கைகளை ஒற்றிக் கொள்ளலாம்.

இளையராஜா இசை. ஆர்ப்பாட்டமில்லாத சல சல, கல கல நதி போன்ற இசை. அத்தனை பாடல்களும் (நான்குதான் என்பது குறை) இனிமை.

இடைவேளைக்குக் கொஞ்சம் முன்னால் படம் கொஞ்சமே கொஞ்சம் இழுக்கப்பட்டாலுங்கூட —


வி. கே. ஆர்., கே. கே. சௌந்தரிடம் இரைந்து பேசி பண்ணும் ஒரே ஒரு காமெடி கட்டம் சற்றே ஓவர் என்றாலுங்கூட —

எல்லாவற்றையும் ஈடுகட்டுவது அந்தக் கடைசி காட்சி. அந்தக் காட்சிதான் என்ன ஒரு அற்புதமான கவிதை!

டைரக்டர் பெயர் பாசில். இந்த மாதிரியான குறிஞ்சி மலரை மட்டும் இவர் மலர வைத்தால் போதும். அது ஒரு யுகத்திற்கு ஒன்று என்றாலுங்கூட பரவாயில்லை!

–ஜெயமன்மதன்

ஈடு இணையற்ற கூரை



CAS/SACL/29-A/85-TAM

Ramco

"ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளும் மற்ற உபகரணங்களும்– தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல நிரந்தரமான பாதுகாப்புக்கும்கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்

739, அண்ணா சாலை, சென்னை-600 002.
போன்: 82006
பரிபூரண விற்பனையாளர்கள்:
ராஜு சாரிடி டிரஸ்ட்
அலுவலகங்கள்: பெங்களூர் ● எர்ணாகுளம்
● ஹைதராபாத் ● பூனா ● விஜயவாடா ● விசாகப்பட்டினம்
தொழிற்சாலைகள்: அரக்கோணம் (தமிழ்நாடு)
கரூர் (கர்நாடகம்)
பிரஷர் பைப் பிரிவு: மக்ஸி (மத்தியப் பிரதேசம்)

"ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள்-உறுதியாக நீடித்து நிற்கும் ஈடு இணையற்ற கூரைகளுக்கு.

"ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் சிக்கனத் திற்கும், சீரிய தரத்திற்கும், குறைந்த செலவில் நிரந்தரப் பாதுகாப்பைத் தருவதற்கும் தன்னிகரற்றவை.

அதிநவீன தொழில் நுட்பமும், மிகக் கடுமையான தரக்கட்டுப் பாடும்தான் "ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் இன்று முதன்மை யாகத் திகழ்வதின் காரணம்.

எனவேதான், மத்திய,மாநில அரசுத் துறையினரும், கட்டிடக் கலை வல்லுநர்களும் "ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

தீராத விளையாட்டு ஸாயி



8. 'மாங்காப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்கு!'

> மன்பல் லுயிர்களும் ஆகிப்
> பலபல மாயம யக்குக் களால்
> இன்புறும் இவ்விளை யாட்டுடை
> யானைப்
> பெற்று ஏதும் அல்லல் இலனே
>
> — நம்மாழ்வார்.

திருவிளையாடலரான ஸ்ரீ ஸத்யஸாயி எப்படியெல்லாம் மானுடரை மேம்படுத்தி வருகிறாரென்பது எத்தனை நூலெழுதியும் முடிக்க முடியாத விஷயம். ஒரு பக்கம் கோடானு கோடி மக்கள் சரிவுப் பாதையில் சறுக்கிக் கொண்டே போகிறார்களெனினும் மறுபுறம் லக்ஷோபலக்ஷம் மக்கள் இமயப் பாதையில் அவரால் ஏற்றுவிக்கவும் படுகிறார்கள்; இதில் ஆயிரம் ஆயிரவரேனும் ஸிம்லா, டார்ஜிலிங்குக்கு ஏறியிருப்பார்கள்; ஒரு சிலரேனும் எவரெஸ்ட், கஞ்சென் ஜங்காவைத் தொட்டிருப்பார்கள்.

அவர் வேதாந்தம் அறியாதவர். ரமணானுபவத்துக்குச் சிறிதும் விழையாதவர். எங்கோ பல்லாயிரம் காவதம் கடந்த மத்ய அமெரிக்காவில் காதேமாலாவில் வாழ்பவர். நஸ்ஸின் மிஷான் எனப்படுபவர். பக்கா பிஸினஸ்காரர். 'தினமும் பண ஈட்டத்துக்காகவே பதினாறு மணி உழைத்தவன்' என்று அவரே சொல்லிக் கொள்கிறார். அவர் யூதர். "பொதுவாக எங்கள் மதஸ்தர் மிகவும் ஸமயப் பற்றுள்ளவராயினும் எனக்கு தெய்வ நம்பிக்கையே இருந்ததில்லை" என்கிறார்.

இப்போது? "நான் தெய்வத்தை நம்புவது மட்டுமில்லை; என்னுள்ளேயே உள்ள அவனை உணரவும் செய்கிறேன்" என்கிறார்.

உணர்வித்தவர் யாரென்றால் லீலா நாடக ஸாயிதான். எப்படி உணர்வித்தார் என்றால் தூய ப்ரேமையின் மூலம். "அன்பு என்றால் உண்மையில் என்ன என்று அறியாமலே இருந்தவன் நான். இப்போது தெரிகிறது அது ஸ்வாமியொருவரே கொடுக்கக் கூடியது என்று! அவரது தூய ப்ரேமையை நீங்கள் அநுபவித்துவிட்டீர்களாயின் அப்போது தான் அவர் யாரென்று உணர்வீர்கள்" என்று மிஷான் கூறுகிறார்.

சிறிது சிறிதாக வாழ்வின் அநித்யத்வம், பொருள் பற்றின மாயம் ஆகியவற்றை இவருக்கு ஸ்வாமி புரிவித்திருக்கிறார். பொருள் சேர்த்துக் கொள்ளவே அறிந்திருந்தவர், இன்று கொடுப்பதில் உள்ள நிறைவைத் தெரிந்துகொண்டிருக்கிறார். இதில் ஓர் அழகு: ப்ரேமை, ஞானங்களைப் புகட்டிய அதே ஸ்வாமி இவரது பிஸினஸையும் இரு மடங்கு லாபகரமாக்கி இவரை ஏழையர்க்கு நிறைய உதவச் செய்திருக்கிறார்! முன்பே ஏன் படே படேக்களின் ப்ரத்யேக சாமியாராயிருக்கிறாரென்று பார்த்தோமே, அதற்கு ஒரு எடுத்துக்காட்டுத்தான்!

பணமே குறி என்றிருந்த மிஷான் எப்படி ஸாயியிடம் வந்து சேர்ந்தார்?

என்னவோ, ஒரு நாள் இந்தப் பணமும், காரும், மக்களும், மனைவாழ்வும் நிரந்தர ஸுகமாக நிற்காதே என்ற எண்ணம் வந்தது. டில்லிக்கு வந்திருந்த அவருக்கு ஸாயி பஜனை ஒன்றில் கலந்துகொள்ள வாய்த்தது. பஜனைக்குப் போகும்போது மனத்தில் ஒரு நொய்வு இருந்தது. ஸங்கீர்த்தனமுங்கூட அவரை விசேஷமாக 'உற்சாகப்படுத்தி விடவில்லை. முடிவில் ஸ்வாமி படத்தின் முன் வைத்திருந்த ஒரு மாம்பழத்தை அவருக்குக் கொடுத்தார்கள். அதை அவர் உண்டார்.

மாங்கனி வயிற்றில் போனதுதான் தாமதம்! இதயத்துள் ஸாயியின் கனிவு புக ஆரம்பித்துவிட்டது! காரைக்கால் அம்மையார், பர்த்ருஹரி முதலானோர் கதைகளில் அதிசய மாங்கனி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் உலகாயதமாக இருந்த ஒருவரின்

மனப்போக்கை அடியோடு மாற்றி இறை வழி படுத்திய இந்த மாங்கனியின் பேரதிசயத்தை எந்தக் கதையிலும் கேட்டதில்லை. ஆப்பிளைத் தின்ன வைத்து முதல் மனிதனை வீழ்த்தியதற்கு ஈடாக மாம்பழத்தை உண்டு ஒரு ஜீவன் உய்வு நெறிப்பட திவ்ய ஸங்கல்பம் இருந்தது போலும்! மனம் நொய்ந்து பஜனைக்குச் சென்றவர் அதன் முடிவில் மாம்பழம் உண்டதும் எப்படி உணர்ந்தார்? "உள்ளூர எனக்கு எத்தனை ஆனந்தமாயிருந்த தென்றால் மோக்ஷத்தில் இருப்பதுபோலவே தோன்றிற்று" என்கிறார்!

மந்த்ரோபதேசமில்லை, மணிக் கணக்காய் உபந்நியாஸமில்லை—மாம்பழ ப்ரஸாதத்தால் மா பலனைத் தருகிறார் ஸ்வாமி. விளையாட்டாகச் செய்திருக்கிறார்! அந்த மாம்பழ ரஸம் அவரது "இதயத்திலிருந்து உற்பத்தியான" பெருமைதான்!

குதம்பைச் சித்தர் பாடினார்:

"மாங்காய்ப் பால் உண்டு மலைமேல்
இருப்போர்க்கு
தேங்காய் பால் ஏதுக்கடி?"

யோக உச்சியில் சிரகமலம் திறந்து பெருக்கிடும் குண்டலினீ அமுதந்தான் மாங்காய்ப் பால். என்றும் மங்காத சைதன்ய ஒளியின் சாறு. 'நிழல்' என்பது 'நீழல்' என நீண்டாற் போல, "ம ங்காய் பால்" பாட்டிலே மாங்காய் பால்" ஆயிற்று. இதன் சுவை கண்டார்க்கு நிரந்தரமாகத் தேங்கி நில்லாமல், கணத்தே மறைந்துவிடும் புலன்களின் இன்ப ரஸம் எதற்கு என்பதைத்தான் "தேங்காய் பால் எதுக்கு?" என்றார். என்னமோ தமாஷ் பாட்டுப்போல அந்த ஸித்தர் பாடியதைத் தமாஷ் போலவே நடத்திக் காட்டியிருக்கிறார் ஸ்வாமி.

மாங்கனிச் சாறு உள்ளே சென்றதிலிருந்து மது, மாமிஸம், ஸிகரெட் மூன்றும் மிஷாவின் உள்ளே போக மறுத்துவிட்டனவாம்!

ரா.கணபதி

* இந்த ஓரம்சத்தில் — அதாவது மீள முடியாத போகாத வஸ்துக்களின் பிடிப்பிலிருந்து பக்தரை மீட்பதில் — ஸ்வாமி செய்துள்ள அருள் உண்டே... அது அலாதி. 'அடிக்ஷ'னிலிருந்து விடுபடுவது எத்தனை சிரமமானது. அதற்காகச் சில நரம்புகளை மரத்துப் போகவோ துண்டித்துமே கூடவோ அறுவை செய்தால்கூட அந்த நரம்புகள் மறுபடி உண்டாகிப் பழி வாங்குவதுண்டு என்று மருத்துவரும், மன இயலாரும் கூறுகிறார்கள். ஆனால் மன இயல்பையே மாற்றவல்ல நம் மருத்துவர் எத்தனை பேரை இவற்றிலிருந்து விடுவித்திருக்கிறார் தெரியுமா? அதுவும் அநாயாஸ விளையாட்டாக!

புத்தகக்கடை மோடியிடம் அவரது புகைப் பிடிக்கும் பித்து பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறாமல் பேட்டியளித்து அனுப்பி வைக்கிறார். பேட்டியறையிலிருந்து மோடி நேரே சென்றது ஸிகரெட் கடைக்குத்தான்! ஒரு மணிக்கு மேல் தமது ச்வாஸத்தில் புகை மணம் கலக்காமல் இருந்துவிட்டதே. அந்தத் தாபம்! ஆர்வத்தோடு வாங்கி ஊதுகிறார். "என் மணமே தெரியவில்லை! வழக்கம்போல் உள்ளே கிண்டிக் கிளுகிளுப்பு ஊட்டவில்லை?"

ஒவ்வொன்றாக ஒரு பாக்கெட் முழுதும் தீர்க்கிறார். ஊஹூம், ஸிகரெட்கள் ஒத்துழையாமை செய்கின்றன. மிகவும் காரமான நெடி கொண்ட ஸிகரெட் வாங்கி ஊதிப் பார்க்கிறார்.

இனி முயன்று பயனில்லை என்று விடுகிறார். விட்டே விடுகிறார்!

இப்படிப் பலர் விட்டது பெரிதில்லை. பழக்க 'வாஸனை'யில் விட்டபின் படாத



பாடு படுவதுண்டே. அது அவர்களை இம்மி கூட பாதிப்பதில்லை. மாறாக, ஒரு நிம்மதி, தெளிவு, இன்பமே காண்கிறார்கள். மிக வலிய ட்ரக்குகளை விட முயன்றால் சித்ரவதை செய்யும் **cold turkey** எனப்படுவது விசித்ர ஸாயியால் விமோசனம் பெற்றோரைத் தீண்டுவதேயில்லை.

ஸஹோதரர் வி. டி. பியிடம் கர்தோடு கரதாக, "கெட்ட ஹாபிட்" என்ற இரண்டே வார்த்தைகளைக் கோபமில்லாமல் தமாஷ் செய்வது போலச் சொல்லி நகர்கிறது ஸாயிப் பூங்காற்று. வெளியே வந்தவுடன் வி. டி. பி. வியக்கிறார், ஏன் தமக்குப் புகை பிடிக்கும் அரிப்பு எழவில்லை என்று. இருந்தாலும், தம்மைத் தாமே சூளைச் சலவை செய்து கொண்டிருக்கிறோமோ என்று தோன்ற, ஒரு பாக்கெட் வாங்குகிறார். கொளுத்துகிறார், இழுக்கிறார். 'சை! இதென்ன இப்படிக் குமட்டு கிறது?'

ஒரு மணிக்கு முன் இன்பக் கிளுகிளுப் பூட்டிய பொருள் இப்போது அப்படியோர் அருவருப்பூட்டுகிறது! தரையிலே போட்டுப் பாதரக்ஷையால் நசுக்குகிறார்.

ஜாகர்த்தாவில் இன்று ஸாயி ஸமிதி முக்யஸ்தராயுள்ள நாரி குப்சந்தானியின் இல்லம் 1973 வரை புகைப்பதற்கும், குடிப் பதற்கும், சூதாடுவதற்குமான கேளிக்கை யிடமாயிருந்தது. அருட் காந்தம் எப்படியோ சற்று அவரை இழுத்து, அந்நகரில் நடந்த ஒரு ஸாயி பஜனையில் அமர்த்தியது. நல்ல குரல் வளம் உள்ள நாரி, பஜனையை ரஸித் தார் — பகவத் சுவைக்காக அல்லவே அல்ல, மெட்டுக்களின் இனிமைக்காகத்தான்! தாமும் பஜன் கற்று ஸமிதியில் பாடலானார். "பக்தி யால் அல்ல; சாரீரச் சிறப்பைக் காட்டத் தான்" என்று தெளிவு செய்கிறார் அவரது மனைவி தீபா.

பஜனை பாடுவோர் மது, புகை முதலிய பழக்கங்களை விட்டுவிட வேண்டுமென 1975 தொடக்கத்தில் உத்தரவு வந்தது. "உடனே விட்டுவிடத் தீர்மானித்துவிட்டேன் — பஜனை யையும், ஸமிதியையும்!" என்று சிரிக்கிறார் நாரி.


ப்ரேமமூர்த்தி தீர்மானித்துவிட்ட தொடர்பை இவர் எப்படி விடச் செய்ய முடியும்?

மதுவை விழுங்க வாய் மறுத்தது. புகையை இழுக்க மூக்கு மறுத்தது! வேண்டிக் கிடக்க வில்லை அந்த வாடை!

உபதேச, உபந்நியாஸங்கள் இல்லாதது மட்டுமில்லை. விளையாட்டுங்கூட கண்ணுக்குத் தெரியவில்லை. ஆயினும் இதைக் கேட்கும் போது, படிக்கும்போது ஒரு மர்ம, மநோ ஹர விளையாட்டின்பம் விளையவில்லை?

(தொடரும்)

ஸ்பாட் லைட்



சிவபெருமானைப்போல் மற்றவர்களுக்கு அமுதம் கொடுப்பதற்காகப் புரட்சித் தலைவர் நஞ்சை (ஜெயலலிதா) சாப்பிட்டிருக்கலாம். அது அவரை ஒன்றும் செய்யாது என்றாலும் தலைவன் பாதிக்கப்படக்கூடாது என்று அவரைப் பாதுகாக்கும் பார்வதிகளாக நாங் கள் பக்கத்தில் இருப்போம்.

— அமைச்சர் காளிமுத்து.

பூட்டி வைத்த சிங்கத்தைத் திறந்து விடு வதுபோல் பீடு நடை போடும் சிந்தனைச் செல்வி ஜெயலலிதாவை மீண்டும் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்த புரட்சித் தலைவருக்கு நன்றி..... நன்றி.....

— மதுரையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள்

வீரப்பன் முறையாக அரசியலில் வளர்ந்த வர் அல்ல. நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களிடத்திலும் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலும் கணக்குப்பிள்ளை யாக இருந்தவர். கட்சியில் அவர் எந்தக் காலத்திலும் நெருக்கமாக இருந்தவர் என் பதற்கு எந்தவித சாட்சியமும் கிடையாது.

— எஸ். எஸ். ஆர்.

எம். ஜி. ஆரின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாமல், எம். பி. யாக இருக்கும் ஜெய லலிதாவை அ. தி. மு. க. வின் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் அவரை சூர்ப் பனகை, ஆள் மயக்கி, பூலன்தேவி, மேனு மினுக்கி என்றெல்லாம் பேசியது தவறு.

— எஸ். டி. சோமசுந்தரம்.

எனது ஒரே மனைவி வாணிதான். அதே போல் ஸாரிகா எனது குழந்தையின் தாய். இருவரையும் நான் கைவிட மாட்டேன்.

— கமலஹாசன்.


"நம்ம கலியாணத்துக்கு வாங்கி கொடுத்த ராகமாலிகா புடவையெல்லாம் இப்படி லுங்கியா கட்டிப்பீங்கன்னு எங்க அம்மாவுக்கு தெரிஞ்சிருந்தால் என்னை உங்களுக்கு கட்டிக் கொடுத்திருக்கமாட்டாங்க"

பாக்யராஜ் பதில்கள்

கே. டி. ராமசாமி, உடுமலைப்பேட்டை.

* உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைத் திரைக்காட்சிகளாகக் கொண்டு வந்தது உண்டா?

இதுவரை வெளி வந்த என்னுடைய எல்லாப் படங்களுமே என் வாழ்க்கையிலும், என்னைச் சுற்றியுள்ள பலரது வாழ்க்கையிலும் நான் சந்தித்த விஷயங்களே! 'விடியும் வரை காத்திரு', 'தாவணிக் கனவுகள்' இப்படி ஒன்றிரண்டில் நிஜமில்லாத கற்பனை அதிகமாகக் கலக்கப்பட்டதால் உங்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள நேர்ந்தது!

எஸ். ரவி, திருச்சி.

* இந்தக் கேள்விக்குப்' பதில் பெற்றே ஆக வேண்டும் என்று த ங்கள் மனத்தைச் சதா அரித்துக் கொண்டிருக்கும் கேள்வி எது?

கற்பைப் பெண்களிடம் கட்டாயமாக எதிர்பார்க்கிறோம். ஆனால் நம்மால் மட்டும் அதைச் சரிவரக் காப்பாற்ற முடிவதில்லை— ஏன்?

(ரவி சார்.... உங்கிட்ட எதார்த்தமான உண்மையைச் சொல்லிட்டு என் வீட்டுக்காரிகிட்ட எக்கச்சக்கமா வாங்கிக் கட்டப் போறேன். இது எனக்கு தேவையா?)

பி. சோமசுந்தரம், அழகனூரம்.

* டைரக்டர் கே. பாலசந்தரைப் பற்றி இரண்டு வரிகள்...

''பாரதிராஜாவின் சாதனைக்காக அவர் காலைத் தொட்டு வணங்குகிறேன்'' — சபை அறியச் சொல்ல சங்கோஜப்படும் ஒரு வார்த்தையைச் சந்தோஷத்துடன் சொன்ன பெருந்தன்மையான சாதனையாளர்..

வி. சரவணகுமார் கும்பகோணம்.

* அன்புள்ள பாக்கியராஜ், தாங்கள் கதை உருவாக்கும்போது நண்பர்களுடன் பேசிக் கொண்டு எழுதுவீர்களா? இல்லை தனிமையில் எழுதுவீர்களா?

கரு ஒருவரிடம் மட்டுமே உருவாகும். ஆனால் வெளி வந்ததும் பலரது அணைப்பிலும், ஒத்துழைப்பிலும் உயர்வு பெறும்!

எம். குமரப்பன், காரைக்குடி.

* துவக்கத்திலேயே மிகப் பெரிய வெற்றியை எட்டிய தாங்கள் அதைத் தங்க வைத்துக் கொள்வதில் படும் பாடு என்ன?



* வி. ஐ. பி. ஸூட்கேஸ் பெறப் போகும் அதிர்ஷ்டசாலியைத் தேர்ந்தெடுக்கிறார் பாக்யராஜ். அருகிலிருப்பவர் உதவியாளர் சஞ்சீவி:

படம்: மனோ

ருசிச்சு சாப்பிடுற வசதி வந்துட்டாலும் பசிச்சு சாப்பிடுற அளவுக்குத் தொழில்ல கவனமா இருக்கிறேன்.

ஆர். எஸ். பாபு, கோவை—18.

* கமலஹாசனைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இங்கிருந்து வடக்கே போயி கொடி நட்டிருக்காருன்னு.... சாதாரணமான விஷயமா என்ன!

சேது கே. பாரத்வாஜ், சென்னை—41.

* மற்ற இரு சிறந்த "பா" டைரக்டர்களிடமிருந்து தாங்கள் இத்துறையில் கற்றுக் கொண்ட படிப்பினைகள் என்ன?

அட போங்க சார் நீங்க! நானும் ரொம்ப நாளா முயற்சி பண்ணிக்கிட்டுதான் இருக்கிறேன். நம்ம குதிரை அவங்க டிராக்ல நுழையவே மாட்டேங்குது! அது பாட்டில வேற டிராக்ல போயிக்கிட்டு இருக்கு!

அ. சீனிவாசன், அரூர்.

* ஆம்பளே செய்யக் கூடிய சமாச்சாரம் தேமரா விஷயம். அதைப் போயி ஒரு பொம்பளேகிட்ட ஒப்படைச்சிருக்கீங்களே! என்ன சார் உங்க புத்திசாலித்தனம்?

பெண்கள் சில விஷயங்களை நமக்காக விட்டுக் கொடுக்கிறாங்க. அதுக்காக அவர்களை முட்டாளுகள்னு முடிவெடுக்கக்கூடாது. சின்ன வீடு படம் பாருங்க, கேள்வி கேட்டது சரியா, தப்பான்னு புரியும்.

கல்யாணி, தஞ்சாவூர்.

* திரு. பாக்கியராஜ் அவர்களே, தாங்கள் பத்திரிகையாளர்களைக் கொஞ்ச நாளாகச் சந்திக்கத் தயங்குகிறீர்களாமே, உண்மையா?

'சாவி' பத்திரிகையில 'கண்ணைத் தொறக்கணும் சாமி' தொடர்ந்து எழுதறேன். 'தினகரன்'லே ஒரு 'கதை எழுதுனேன். 'தினத்தந்தி'யிலே ஒரு கட்டுரை எழுதுனேன். இப்ப உங்க கேள்விக்குக் 'கல்கி'யிலே பதில் எழுதறேன். ஏன், மலையாள பத்திரிகையாளர் வேண்டுதலுக்கு இணங்கி 'நா ரு' பத்திரிகையில கூட எழுதறேன். ஆனா இப்பக்கூட பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறதில்லேன்னு குற்றச்சாட்டு வருது. எங்க போய் முட்டிக்கறது? என் நேரம்!

கே. கோவிந்தராசன், திருக்கண்ணபுரம்.

* உங்கள் படங்கள் பலவற்றிலும் ஆசிரியர்களைக் கேவலமாகச் சித்தரிப்பதையும் இழிவு படுத்துவதையும், கிண்டல் செய்வதையும் பழக்கமாகக் கொண்டிருக்கிறீர்கள். இதற்குக் காரணம் என்ன?,

முதல்முதல்ல 'ஆசிரியரா' நடிச்சுத்தான் இவ்வளவு அந்தஸ்துக்கு வந்திருக்கேன். அடிமடியிலேயே கை வைக்கறீங்களே! நான் அப்படிப் பண்ணுவேனா?

புளோபிளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெற்ற அதிர்ஷ்டசாலி:

ஆர். எஸ். பாபு,
84, உப்பிலிபாளையம்,
அவிநாசி ரோடு,
கோயமுத்தூர்—18.
641 018.



"கிறிஸ்துவ மீனவர்களால் நடத்தப்படுகிறது கல்கி!"

வட்டமேஜை

* இதுவரை தங்கள் பத்திரிகை சமுதாய மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட ஒரு நடுநிலைப் பத்திரிகை என்றுதான் நினைத்தேன். ஆனால் 'தேவையில்லாமல் ஒரு துப்பாக்கிச் சூடு' என்ற பேட்டியிலிருந்து தாங்கள் ஒருதலைப்பட்சமாகவே செயல்படுகிறீர்கள் எனத் தெரிய வருகிறது.

இந்தியா முழுவதும் ஹிந்துக்கள்தான் பெரும்பான்மையினராக உள்ளார்கள். ஹிந்துக்களைத் தாக்கினாலோ, அவமதித்தாலோ அது இந்திய ஜனநாயகத்தையே பாதிக்கும். தாங்களும் ஒரு ஹிந்துவே என நினைவு படுத்த விரும்புகிறேன்.

பழூர், என். எஸ். மணியன் (ஹிந்து இளைஞர் அணி).

* தேவையில்லாமல் ஒரு துப்பாக்கி சூடு கண்டேன். உண்மைகளை திரித்து கூறும் பத்திரிகையாக 'கல்கி' மாறியது ஏன் என்று தெரியவில்லை!

குளச்சல், மு. ஜநார்த்தனன்.

* "கல்கி" குமரி மாவட்டத்திலுள்ள கிறித்தவ மீனவர்களால் நடத்தப்படுகிறது என்ற உண்மை இப்போதுதான் எனக்குப் புரிந்தது. அடுத்த முறை கல்கியில் வெளியிடும் பெயர்கள் பின் கண்டவாறு இருந்தால் குமரியிலுள்ள கிறித்தவர்களாவது வாங்கிப் படிப்பார்கள்.

Printed by	வர்கீஸ் முரளி
Published by	விக்டர் வைத்யநாதன்
Editor	குருவில்லா ராஜேந்திரன்.

சென்னை – 17, பழ. இராமநாதன்.

மீண்டும் பார்த்தேன்

* முதல் மரியாதைக்குரிய பாரதிராஜா கவர் ஸ்டோரி படித்தேன். அற்புதமான கிராமத்தையும் அதன் சூழலையும் என் கண்முன் நிறுத்திய அந்தப் படத்தை, மறுமுறை பார்க்க வைத்த பெருமை உங்கள் கவர் ஸ்டோரிக்கே சேரும்.

செம்பனார்கோவில், இரா. நாகராஜன்.

* பாரதிராஜா பற்றிய கவர் ஸ்டோரி பாயாசம் என்றால் அதில் போடப்பட்ட முந்திரியாய்ச் சுவைத்தது முதல் மரியாதை படத்தின் முதல் தரமான விமர்சனம்!

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

விஷயம் தெரிந்தவர் கலைஞர்

* அடைக்கலம் தேடி வந்தவர்களை நாடு கடத்தி, ஜெயவர்த்தனை மகிழும் வண்ணம் செய்தது பிரதமரின் நல்லெண்ணம்! இதற்குப் பெயர் ராஜ தந்திரம்! இதைப் புரிந்து கொள்ளாதவர் கருணாநிதி! தலையங்கத்தில் கொன்னுட்டீங்க, போங்க!

நாச்சியார்கோவில், எம். கல்யாணசுந்தரம்.

அழகாக வலியுறுத்திய தலையங்கம்

* தமிழக மக்களின் உள்ளக் குமுறலையும் எழுச்சியையும் சுட்டிக்காட்டியதோடு, நியாயமான கேள்விகளை நிறைய எழுப்பி, அறிவு பூர்வமாகச் சிந்திக்க வேண்டும் என்பதை அழகாக வலியுறுத்தியது தலையங்கம்.

சென்னை – 93, எஸ். சம்பத்குமார்.

தண்ணீரும் கண்ணீரும்

* G.H.ல் தண்ணீர் எங்கே இருக்கிறது? ஏழைகளின் கண்ணீர்தானே பெருகுகிறது.

உடுமலை, எஸ். ராஜா.

* இந்தியாமுழுவதும்இனக்கலவரங்கள்; அவற்றை அடக்கத் துப்பாக்கிச் சூடுகள்! மதப் பிரச்னை எங்கே தீர்கிறது? அரசாங்கமோ ஜாதி, மத அடிப்படையில் கல்வி, வேலை ஒதுக்கீடு அளித்து வருகிறது.

கவுந்தப்பாடி ராம்தினகர்.

கொள்ளுஎன்றால்வாயைத்திறப்பதுபோல்...

* மதப்பிரசாரங்களிலும் வளர்ச்சியிலும் கண்ணாக இருக்கும் மதத் தலைவர்கள் மத, இனக் கலவரங்கள் நடக்கும்போது ஓடி ஒளிவது ஏன்? குதிரை கொள்ளு என்றால் வாயைத் திறப்பதுபோல் இருக்கிறது.

கவுந்தப்பாடி, செல்விராணி.

வேண்டாம் விடுமுறை!

இலங்கைத் தமிழர்களுக்கு அநுதாபம் காட்டும்வகையில்பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்படுவது மாணவர்களாகிய நாங்களே. வருடம் முழுவதும் பள்ளி வேலை நாட்கள் இருந்தாலே ஆசிரியர்களால் பாடங்களைச் சரிவர நடத்த முடியாது. இடையில் இப்படி பல நாட்கள் விடுமுறை அளித்தால் ஆசிரியர்கள் எப்படி பாடம் நடத்துவார்கள்? மாணவர்களும் சரிவரப் படிக்க முடியாது. சென்ற ஆண்டும் இதேபோல் விடுமுறை அளித்து மாணவர்களைப் பாதிப்புக்குள்ளாக்கியது தமிழக அரசு. இலங்கைத் தமிழர்களுக்கு ஒருநாள் அனுதாபம் காட்டினால் போதாதா? தமிழக அரசு எங்கள் மீது அனுதாபம் காட்டி, பள்ளி விடுமுறைகளை நிறுத்த வேண்டும்.

ஈரோடு, ஆர். சுரேஷ்.

(இக்கடிதம் பரிசு பெறுகிறது)



வியட்நாம் போர் ஊக்குவித்த மகாபாரத நாடகம்

ஃபிரெஞ்சு மொழியில் மகாபாரத நாடகம் அரங்கேறத் தூண்டு கோலாய் இருந்தது வியட்நாம் போர் என்று சொன்னால் நம்புவதற்குக் கடினமாகத்தான் இருக்கும். ஆனால் உண்மை அதுதான்!

இயக்குநர் பீட்டர் ப்ரூக் வியட்நாம் போர் நடந்து கொண்டிருந்தபோது தென் கிழக்கு ஆசியாவில் அமெரிக்கர்கள், அடைந்த அனுபவங்களை மையமாகக் கொண்டு ஒரு நாடகத்தை இயக்கினார். விருப்பமின்றிப் போர் புரிந்த ராணுவ வீரன் பற்றிய அந்நாடகத்தின் மையக் கருத்துக்கும் மகாபாரதத்தின் மையக் கருத்துக்கும் இருந்த ஒற்றுமையை நடிகர் ஒருவர் சுட்டிக்காட்டவே அந்த மாபெரும் காப்பியத்தை நாடகமாக்கினால் என்ன என்ற எண்ணம் அவர் மனத்தில் விதைக்கப்பட்டது.

ஒன்பது ஆண்டுகள் கழித்து சக தயாரிப்பாளர் ஒருவருடன் ஃப்ரான்ஸ் நாட்டு சம்ஸ்க்ருத பேரறிஞர் ஒருவரைச் சந்தித்துப் பேசினார். மணிக்கணக்காக அந்த அறிஞர் மகாபாரதக் கதையைச் சொல்ல, பிரமித்துப் போய் இருவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

கிட்டத்தட்ட பத்து வருடங்கள் சென்றன. இடையில் ப்ரூக் ஐந்து முறை இந்தியா வந்து போனார். பலமுறை நாடகத்தை மாற்றி எழுதினார். எட்டு மாதங்கள் கடினப் பயிற்சி, ஒத்திகை. மகாபாரதம் சுருக்கப்படாமல் முதன் முறையாக மேடையேறியது — ஃப்ரான்சில், ஆவிக்னான் என்ற இடத்துக்கு அருகே. காப்பியங்களிலேயே மிக நீளமானதும் ஏராளமான உபகதைகளை உள்ளடக்கியதுமான பாரதத்தைப் பத்து மணி நேர நாடகமாக நடத்தி, வெற்றி கண்டுள்ளார்கள் தயாரிப்பாளர்கள். ஒவ்வொரு பத்து மணி நேர நாடகமும் மூன்று பிரிவுகளாக மூன்று இரவுகளில் தொடர்ந்து நடக்கும்!

எளிய ஃப்ரெஞ்சில் எழுதப்பட்டுள்ள இந்நாடகம் ஒரு நிராகரிக்கப்பட்ட கல் உடைக்கும் மலைச்சாரல் பகுதியை நாடக மேடையாகக் கொண்டு நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்பவர்கள் ஆப்பிரிக்கர்கள் முதல் கம்போடியர்கள்வரை பல்வேறு நாட்டவர்கள். இந்நாடகத்தை ஆங்கிலப் படுத்தி, இந்தியாவுக்கும் இதர நாடுகளுக்கும் கொண்டு செல்ல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நன்றி: நியூஸ் வீக்

தகவல்: எஸ்ஸார்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran


BRIEFS
VESTS
CASUALS
KIDSWEAR
new you PANTIES
உடலோடு இணைந்து உள்ளம் கவர்ந்து
எழில் நிறைந்து... ஈடிணையற்றது...
பாண்டெக்ஸ்®
தயாரிப்பு
Imageads M-1944